
# ஞானச்சுடர்



பங்குனி

2012



ஓம்


முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள்வழி



**செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது.**

**பொருள் :** தனக்குமுன் ஒரு உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைமாறாகக் கொடுத்தாலும் அக்கொடை சமமாகாது. (101)

**காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

**பொருள் :** ஒருவனுக்கு ஆபத்து வந்த காலத்தில் ஒருவன் செய்த உபகாரம் சிறியதாய் இருந்ததாயினும் அக்காலத்தை நோக்க அது இப்பூமியிலும் மிகப்பெரியதாகும். (102)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை
## தியானமாலை
## கலிவிருத்தம்

**ஒன்பது வாயிலும் ஒக்க வடைத்துநின்**
**றென்ப துருகி இளகிக் கசிவுற்**
**றின்ப துன்ப மெல்லாங் கடந்தால்**
**பொன்பொதி செஞ்சடைப் புனிதன் வருமே** 10

**ஓங்காரக் கம்பத்தி னுன்னத மேடையில்**
**பாங்கான வீட்டின் பள்ளி யறையைத்**
**தூங்காத் திறவுகோல் கொண்டு திறந்தால்**
**நீங்காச் சிவகதி நிச்சய மாமே** 11

**ஔவிய நெஞ்சை அறவே யொழித்து**
**நௌவியு மழுவு மேந்தும் நம்பனைச்**
**செவ்விதின் வணங்கிற் சித்தி முத்திகள்**
**எவ்வம தின்றி யெய்திட லாமே** 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 171

2012 பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுட் காதலர் | நா. நல்லதம்பி | 01 - 02 |
| சஞ்சலம் துஞ்சித்.... | சு. சிவராசா | 03 - 06 |
| கந்தனே கலியுகத்.... | கே.வி. குணசேகரம் | 07 - 08 |
| சைவ சமய ஒழுக்கங்கள் | மா. கணநாதன் | 09 - 10 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருணம்பலவனார் | 11 - 13 |
| நல்லவாறே நாவால்.... | திருமதி சி. யோகேஸ்வரி | 14 - 15 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 16 - 20 |
| ஈஷா கிரியா | ஜக்கி வாசுதேவ் | 21 - 23 |
| பரிபாடல் பகரும்..... | சிவ. சண்முகவடிவேல் | 24 - 26 |
| குப்பிளான் தந்த பெண்.... | செ. ரவிசாந் | 27 - 29 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 30 - 31 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 32 - 34 |
| பழந்தமிழ்... | இ. சாந்தகுமார் | 35 - 37 |
| புராணபடன மகிமை | தி. பொன்னம்பலவாணர் | 38 - 39 |
| சைவ சமய.... | நா. சிதம்பரநாதன் | 40 - 42 |
| நித்திய அன்னப்பணி | - | 43 - 44 |
| சிறுவர் கதைகள் | - | 45 - 46 |
| சைவத் திருக்கோவிற்..... | கா.கைலாசநாதக்குருக்கள் | 47 - 48 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 49 - 51 |
| மடமல்ல... இது திருமாடம் | அன்னைதாசன் | 52 - 53 |
| கல்லோடைக் கந்தன் | அற்புதன் | 54 - 55 |
| தமிழகத் திருக்கோயில்..... | வல்வையூர் அப்பாண்ணா | 56 - 62 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

மாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை புனிதவதி சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது வெளியீட்டுரையில், சூரியன் தவறாது தனது கடமையைச் செய்து தினமும் பிரகாசிப்பதுபோல ஞானச்சுடர் மலரும் மாதந்தோறும் பிரகாசிப்பது சாதாரண விடயமல்ல என்று சபையோருக்கு எடுத்துக் கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில் "கற்க கசடற" என்ற வாக்கிற்கிணங்க ஞானச்சுடர் மலரை தெளிவாகக் கற்று அதன்படி ஒழுகுதல் வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து கூறுகையில் ஞானச்சுடர் சஞ்சிகையின் செயற்பாடு இன்று உலகம் முழுவதும் பிரகாசிக்கும் நிலைக்கு வந்துள்ளது என்றும், இனிவரும் காலங்களில் ஞானச்சுடர் மலரானது பல்வேறு அம்சங்களைக் கொண்டு பிரகாசிக்கும் நிலையைப் பெற்றுள்ளது என்று சபையோருக்குக்கூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்

**மதிப்பீட்டுரை:-**

170ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி நாச்சியார் செல்வநாயகம் (முதுநிலை விரிவுரையாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது மதிப்பீட்டுரையில், ஞானச்சுடர் மலரானது சாதாரண ஒரு மலரல்ல, தெய்வீகத்தின் பரந்த அறிவைக் கொண்ட ஒரு சஞ்சிகையாக மக்கள் மத்தியில் திகழ்கின்றது என்று கூறினார்.

தொடர்ந்து கூறுகையில், கண்ணிலே குறைபாடு உள்ளவர்களும் இந்நூலைப் படிக்கலாம். ஏனென்றால் பெரிய எழுத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றும் இச்சஞ்சிகை மனித ஈடேற்றத்திற்கு உகந்த நூலாகத் திகழ்கின்றது என்றும் சபையோருக்கு கூறினார்.


ஆச்சிரமமானது பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றது. அந்தவகையில் ஞானச்சுடர் மலரை இரு கண்களில் ஒன்றாகக் கருதி வருகின்றது. உள்ளத்தில் உள்ள அழுக்காறுகளை நீக்க ஞானச்சுடர் உதவுகின்றது என்றும், சிறுவர்கள், பெரியோர்கள் அனைவரும் படித்து இன்புறும் வகையில் பல்வேறு அம்சங்களைத் தன்னிடத்தே கொண்டுள்ளதோடு ஞானத்தைச் சுடராக்கி, ஒளியாக்கி ஞானச்சுடர் வழங்குகின்றது என்று சபையோருக்குக் கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து 2011ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான பரிசுப்பொருட்களை வெற்றியீட்டிய வாசகர்களுக்கு இந்தியாவிலிருந்து வருகைபுரிந்த தமிழ்துறை பேராசிரியர் விஜயலட்சுமி இராமசாமி அவர்கள் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயப் பிரகாரமும்- சுற்றாடலும் ஒரு தெய்வீகத்தன்மை பொலிந்து விளங்குவதற்குக் காரணம் மூலவிருட்சமாக விளங்கும் பூவரச மரமும்- அம்மரத்தடியில் நடைபெறும் பஜனை நிகழ்வுகளுமேயாகும். அந்நாளில் இந்தப் பஜனை நிகழ்வுகளில் குடாநாட்டின் பலபாகங்களிலும் இருந்து வருகின்ற முருகனடியார்கள் ஒன்றுகூடி பக்கவாத்திய சகிதம் பஜனை செய்து பரவசப்படுத்தினர். இடைக்காலத்தில் ஏற்பட்ட போர்ச்சூழல் பஜனை நிகழ்வில் தளர்வினை ஏற்படுத்தியபோதும், அண்மைக் காலத்தில் மீண்டும் பழைய வேகத்துடன் ஆலய வளாகத்தில் பஜனை நிகழ்வு இடம்பெற்று வருவதை முருகனடியார்கள் நன்கறிவர். இந்த பஜனை நிகழ்வினை முன்னின்று நெறிப்படுத்தி- அடியார்களை ஒன்றுகூட்டி பாடலிசைக்கும் பெரியவர் (சண்டிலிப்பாய்) திரு வா. கிருஷ்ணபிள்ளை அவர்கள் அமரராகிவிட்டார்.



அரையில் நாலுமுழ வேட்டியும் அதன்மேல் ஒரு துண்டு; நெடுத்த உருவம்; நரைத்து அடர்ந்த தாடி; எந்நேரமும் தோளிற் தொங்கும் கோணிப்பை; பைநிறைய தேவார- திருவாசக- பக்திப் பாடற் புத்தகங்கள். சந்நிதியான் திருவீதி உலாவரும் வேளையெல்லாம், பின்னால் கூடவே தொடர்ந்து வரும் அவரது வெண்கலக் குரலைக்கேட்டு ரசிக்காதோரே இல்லை.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிதோறும் மதியப் பூசை நிறைவின்பின் பஞ்சபுராணம் பாடும் கடமையைத் தவறாது நிறைவு செய்பவர். அதே நாளில் தவத்திரு முருகேசு சுவாமிகள் நினைவு மண்டபத்தில் நடைபெறும் அறுபத்துமூவர் குருபூசை வேளையில் கணீரெனக் குரலெடுத்துச் சிவபுராணம் பாடுவது சந்நிதியான் ஆச்சிரம வளாகம் முழுவதுமே எதிரொலிக்கும். மார்கழி மாதத்து வெள்ளி நிகழ்வொன்றில் இடம்பெறும் முருகநாம பஜனை நிகழ்ச்சியில் ஆச்சிரமத்து சுவாமிகளுடன் அருகமர்ந்து பஜனைபாடி அனைவரையும் வசப்படுத்தி வந்த குரலுக்குரிய சண்டிலிப்பாய் வா. கிருஷ்ணபிள்ளை அவர்கள் அமரத்துவம் எய்தியமை பஜனையில் ஈடுபடும் அன்பர்கள் அனைவருக்கும் ஒரு பேரிழப்பே. அன்னாரது ஆத்மா சந்நிதி வேலவனின் பாதங்களைச் சென்றடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி எழுந்தருளும் பெருமானே!

## (திருப்புகழ்)

கருணைமழை பொழிகின்ற கதிர்வடிவே லுடன் தாங்கி
கதிர்காம மிருந்துவரும் கந்தவேளே
கானவள்ளி யோடு தேவ யானையுடன் சேர்ந்து
காட்சிதர மயிலேறி வருவோனே
தருணமென உலகில்வாழும் தமிழரெல்லாம் அழைத்திடவே
சார்ந்து சென்று என்ன என்று கேட்பவனே
தக்க அவர் சிந்தை நின்று மெச்சி ஓடி நடமாடி
தன்னிறைவாய் கேட்டவரம் தானே கொடுப்போனே
மருதர் கதிர் காமருடன் வாசல் கோயில் திண்ணையிலே
வைகியவர்க் குபதேசம் வழங்கியவனே
மாதர் பாலர் ஆண்களுடன் வாழும் முதியோர் மேலும்வாழ
வரங்கள் கொள்ளையாக அள்ளிக் கொடுப்பவனே
அருணகிரியைப் போலப் பாடும் அன்பர் மோகனதாஸ் சுவாமி
அன்னப் பணிக் கான உதவி செய்பவனே
ஆடுமயி லேறிவிளை யாடி இயங்கும் உலாவி வரும்
அரிய செல்வச் சந்நிதி யமர்ந்த பெருமானே.

எண்டிசை வாழ்வோ ரெல்லாம் புகழ்பாட
இதுவே நல்ல தலமாய்க் கண்டு
தொண்டைமா னாற்றைத் தேர்ந்தெடுத்த
தோகை மயில் மீது வருவோனே
அண்டர்களும் போற்றி வாழ்த்திடவே
அவரையும் நோக்கிப் பார்ப்பவனே
தண்டமிழில் எனைப்பாட வைத்தவனே
சந்நிதியில் எழுந்தருளும் பெருமானே.

முதுபெரும்புலவர், ஆசிரியர்
வை.க. சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

R. கிருஸ்ணசிவம்
(அவுஸ்திரேலியா)

இ. சங்கரலிங்கம்
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

இராமசாமி திருச்செல்வம்
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

அ. வரதராசா
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

வே. நடராசா
(தும்பளை மேற்கு)

சி. கிருஷ்ணபிள்ளை J.P.
(ஆவரங்கால்)

பொதுமுகாமையாளர்
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

பொதுமுகாமையாளர்
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

சி. சந்திரலிங்கம் J.P.
(பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை)

செ.க. செல்வநாயகம்
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

க. இராசதுரை
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

சோமசுந்தரம் செல்வக்குமார்
(சண்சில்க் றைக்கிளின் சென்ரர், G.P.S. றோட், கல்வியங்காடு)

கி. இராஜதுரை அதிபர்
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

உரிமையாளர்
(சுபாஸ் வெதுப்பகம், நெல்லியடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ. ஜெயப்பிரகாஸ்

(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

சி. கணபதிப்பிள்ளை (தலைவர்)

(பிரதேச உறுப்பினர், கரவெட்டி)

கு. செல்வரெத்தினம்

(நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி)

வை. துரைராசா

(ஓஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)

ந. நவரெட்ணம்

(மகேஸ்வரி வாசா, ஆனைக்கோட்டை)

S. விமலராசா

(தேவாலயவீதி, சங்கானை)

வே. கிருஸ்ணபிள்ளை

(K.V.K. அரிசி ஆலை, உடுப்பிட்டி)

M.B. முருகதாஸ் (கல்யாணி)

(வல்வெட்டித்துறை)

சி. வல்லிபுரம்

(தும்பளை, பருத்தித்துறை)

சபா இரத்தினசிங்கம் J.P.

(சபா றேடர்ஸ், அச்சுவேலி)

V. பரமானந்தம்

(கொள்வனவு உத்தியோகத்தர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்)

K. கேதீஸ்வரநாதன்

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

சு. மகேஸ்வரன்

(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)

திருமதி மகேஸ்வரி

(சங்கத்தானை, சாவகச்சேரி)

S. நாகம்மா

(கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. திருவாஞ்சீஸ்வரன்

(V.S.K. மானிப்பாய்)

த. விவேகானந்தராசா

(டச்றோட், சித்தங்கேணி)

இ. புஸ்பநாதன்

(S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை)

அ. குபேரானந்த உதயன்

(உதயன் கொமினிக்கேஷன், இணுவில்)

அ. கோணேஸ்கரன்

(தில்லையம்பதி, கோண்டாவில்)

ஆ. தனபாலசிங்கம்

(இணுவில் கிழக்கு)

சி. அழகேசன்

(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)

க. தர்மநாயகம்

(மஞ்சத்தடி, இணுவில்)

பூ. இராமகிருஷ்ணர்

(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி)

Dr. ஸ்ரீகணேசன்

(பழமுதிர்ச்சோலை, பருத்தித்துறை)

செ. சூரியகுமார்

(இன்பர்சிட்டி)

உரிமையாளர்

(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)

வ. தங்கவடிவேலு

(இராமுகடை, கரவெட்டி)

அதிபர்

(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)

அதிபர்

(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)

திருமதி சி. தருமலிங்கம்

(இமையாணன், உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தராசா சீதா
(ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)
கி. அருள்நாதர்
(பாலாவி தெரு, பொலிகண்டி)
V. மாணிக்கராசா
(வறாத்துப்பளை, பருத்தித்துறை)
ப. கந்தரூபன்
(கமலவாசம், அளபாவோடை)
வை. கதிர்காமநாதன்
(இணுவில் தெற்கு)
சின்னத்துரை கைலாயநாதன்
(வட்டுவினி, இணுவில் மேற்கு)
V.K. சண்முகலிங்கம்
(திருமகள் வீதி, அரியாலை)
மார்க்கண்டு முத்துப்பிள்ளை
(அத்தியடி, யாழ்ப்பாணம்)
திருமதி V. கௌரி
(கோயில் வீதி, நல்லூர்)
ஆ. சிவகுமாரன்
(தாளையடி லேன், திருநெல்வேலி)
N.S. படிகலிங்கம்
(சரவணை கிழக்கு)
கந்தையா காசிராசா
(குப்பிளான் தெற்கு)
ஐ. காளிங்கநடனம்
(கொக்குவில்)
பா. சிவதர்ஷினி
(கலையகம், அல்வாய்)
க. ஜெயபாலகணேசன்
(சிறுப்பிட்டி தெற்கு)
K. மங்கையர்க்கரசி
(நல்லூர், யாழ்ப்பாணம்)
Dr. அ. செந்தில்குமரன்
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுட் காதலர்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

கடவுட் காதலர்களும் இல்லறக் காதலர்களும் மனநிலையால் ஒன்றுபட்டவர்களே. அன்பின் முதிர்ச்சியே காதல். அன்பின் முதிர்ச்சியே பக்தி. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..." என்று பாடுகின்றார் திருஞானசம்பந்தர்.

"அன்பின் வழியது உயிர்நிலை..." என்கிறார் தெய்வப் புலவர். அறவழியில் இல்லறவாழ்க்கை மேற்கொள்வோரிடத்தில் அன்பு வளர்கிறது. அதுபோல, கடவுளிடத்தில் அன்பு வைத்து அருள்பெற்று பக்திமான்கள் ஆகிறார்கள் மெய்யடியார்கள்.

இக்கட்டுரையில் மெய்யடியார் கடவுளிடத்தில் காதல் கொள்வதனால், பக்தி வலையிற் படும் இறைவனுக்கும் மெய்யடியார்களுக்கும் இடையில் உண்டாகும் பக்திநிலை பற்றி ஆராய்வோம்.

திருவாதவூரடிகள், திருப்பெருந்துறைக்கு குதிரைவாங்கச் சென்றவர், வழியில் குருந்தமர நீழலில் கண்ட மெய்யடியார் கூட்டத்தில் இணைந்து விடுகிறார். அரசன் கட்டளையும் மந்திரிப் பதவியும் உடன் சென்ற கூட்டமும் மறந்துவிட்ட நிலையில், தமக்கு ஒரு குரு வாய்த்துவிட்டார் என்ற கோலத்தில் இறைவனோடு ஒன்றிவிடுகிறார்.

இவ்வாறு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பல மெய்யன்பர்கள் பேரின்ப நிலைக்குச் செல்லப் புறப்பட்டவேளை, அந்தப் பக்குவநிலை தமக்கும் கிடைத்ததாக எண்ணிய திருவாதவூரடிகளை, இறைவன் இன்னும் சிலகாலம் அங்கு இருக்கும்படி செய்து விடுகிறார். தம் புகழ் பாடவேண்டும், அதனால் ஏனைய அடியார்கள் நன்மை பெறவேண்டும் என்னும் பெருங்கருணையினால், திருவாசகத்தேன் தந்த இந்தத் "தேனீயை" இறைவன் தடுத்தருளினார் போலும்.

அவ்வாறான நிலையில், திருவாசகம் பாடியபொழுது, பக்திமேலிடப் பெற்றவராய், பிறவித்துன்பமில்லாத பேரின்ப வாழ்வு தமக்குக் கிடைக்காமல், இறப்பு வந்துவிடுமோ, அதனால் கடவுளைக் காணமுடியாமல் போய்விடுமோ? அவ்வாறு பிறப்பதற்கு அஞ்சமாட்டேன்; ஆனால் அப்பிறவியில் கடவுளைக் காணுகின்ற பேறு கிடைக்கப்பெறுமோ எனத்தான் அஞ்சுகிறேன் என்கிறார்.

யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதற்கு என்கடவேன்?  
வானேயும் பெறில் வேண்டேன், மண்ணாள்வான் மதித்தும் இரேன்;  
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே எம் பெருமான் எம்  
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே

(திருவாசகம்: அறிவுறுத்தல்)

இவ்வாறு, கடவுட் காதலரான வாதவூரர், கடவுளைச் சேரமுன், தனக்கு இறப்பு வந்துவிடுமோ என்று ஏங்குகின்ற நிலையைக் காண்கிறோம்.

இதுபோன்று, அப்பரடிகள், நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று கூறியவர், கடவுள்மேற் கொண்ட காதலினால், அவரைக் கண்ணாரக் காணவேண்டும் என்ற விருப்பத்தினால் பிறப்பதை விரும்புதல் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமுண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மா நிலத்தே (தேவாரம்)

பிறவி மாசு அறவேண்டும் என விரும்பும் மெய்யடியார்களுக்கு மாறாக, கடவுட் காதலால் மனிதப்பிறவியை விரும்புகிறார்!

திருஞானசம்பந்தர், நல்லூர்ப் பெருமணத்தில் நடைபெற்ற அவரது திருமண நாளிலேயே, சோதிவடிவாகத் தோன்றிய சிவன் மேற்கொண்ட காதலால், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எனப் பயந்து, கடவுளை சேரும் விருப்பால்,

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

என்று பாடிக்கொண்டு மணமகள் சகிதம் சோதியுட் கலக்கிறார். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் கருணையால் திருமணம் காணவந்த திருநீலநக்க நாயனார், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பியாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலியோரையும் தம்மோடு அழைத்துச் செல்கிறார்.

இல்லறக் காதலும் கடவுட் காதலும் சேர்ந்த வரலாறு கொண்டது சுந்தரர் வாழ்க்கை. ஆலால சுந்தரராக அணுக்கத் தொண்டராக விளங்கியவர், மீண்டும் சுந்தரராக மண்மேல் அவதரித்தவர், இனிமேல் பிறவி வேண்டாம் என முடிவெடுக்கிறார்!

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனியல்லேன் எனலாமே" எனப் பாடுகிறார்.

சிவபெருமானை விட்டு இனிப்பிரிய மாட்டேன் என்கிறார். திருத்தொண்டத்தொகை பாடவும் அதனால் திருத்தொண்டர் புராணம் மலரவும் திருவுளங்கொண்ட இறைவன் திருவிளையாடலை யார் கண்டார்?

இந்தவகையில் காரைக்கால் அம்மையார், இறவாத பேரின்பம் வேண்டி, இனிப் பிறவாமை வேண்டும்; பிறக்கினும் தேவரீரை என்றும் மறவாமை வேண்டும் என்று கேட்டதோடு அமையாது, அவரது திருவடியின்கீழ் என்றும் இருக்கவேண்டும் எனக் கேட்டுப் பெறுகிறார்.

இவ்வாறு எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த மெய்யடியார்கள் அரிய மனிதப்பிறவி வாய்த்தவுடன் இறைவனடியைப் பிரியாத கடவுட் காதலராக என்றும் அவனோடு ஒன்றான நிலையைக் காண்கிறோம்.

"இந்த மானிடப் பிறவியை நாம்பெற்றது இறைவனை வணங்கி
முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்"
(ஆறுமுகநாவலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சலம் துஞ்சித் திரியாதே

திரு சு. சிவராசா அவர்கள்

சாமி ஐயாவின் குடும்பம் அவருடைய தந்தையார் இருந்த காலத்தில் வறுமையோடுதான் இருந்தது. அவர்கள் வாழ்ந்த வீடு களிமண் சுவர் எழுப்பி கூரை வேயப்பட்டிருந்தது. அந்தமுறை, மாரிமழை விடாப்பிடியாக நான்கு ஐந்து நாட்கள் தொடர்ந்து கொட்டித் தீர்த்தது. மழை ஓய்ந்து கொண்டுவர காற்று கிளம்பத் தொடங்கியது. அது மேலும் மேலும் வலிமைபெற்று சூறைக் காற்றாக சுழன்றடிக்கத் தொடங்கியது. மழை நீரில் தெக்கிப்போய் நின்ற மரங்கள் பொத்துப் பொத்தென்று விழுந்தன. சிலவீட்டுக் கூரைகள் பிடுங்கி எறியப்பட்டன. அவர்களின் வீட்டுக்குமேல் ஒரு தென்னைமரம் சரிந்தது. அதைத் தாங்க முடியாமல் ஊறிப்போயிருந்த மண்சுவர் தகர்ந்து வீழ்ந்தது. கந்தசாமியைத் தவிர மற்றப் பிள்ளைகளும் தாயும் வெளியே பாய்ந்து தப்பிக் கொண்டார்கள். சுவர் மகனுக்குமேல் விழுவதைப் பார்த்துப் பதறிப்போன தந்தையார் மகனைக் காப்பாற்றுவதற்காகப் பாய்ந்தார். மண்சுவர் அவரை அடித்து வீழ்த்தி உயிரைக் கவர்ந்து கொண்டது. கந்தசாமி கடுங்காயமுற்றபோதும், உயிர் பிழைத்துக் கொண்டான்.

தன்னுடைய ஆறு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்க அந்த விதவைத் தாய்பட்ட பாடுகள் வார்த்தைகளில் அடங்காது. அவளுடைய அண்ணன்மார் இருவர் அவ்வப்போது உதவி செய்தார்கள். கந்தசாமி அன்றைய விபத்திலிருந்து மீளமுடியாதவனாகிப்போனான். அவனுக்குப் பேச்சு வரவில்லை. அவனது அன்றாட நடவடிக்கைகளும் சரியாக இல்லை. வைத்தியர்களும் கையை விரித்து விட்டார்கள். அடுத்தடுத்து வந்த துன்பங்கள் அந்தத் தாயின் மனதில் ஒரு வேகத்தை உண்டாக்கி விட்டது. அன்றைக்கும் ஒரு வெள்ளிக்கிழமை நேரத்தோடு எழுந்து தண்ணீரை அள்ளித் தலையில் ஊற்றிக்கொண்டாள். மகனுக்கும் அள்ளி இறைத்தாள். ஈரத்துணியோடு மகனைப்பற்றி தரதரவென்று இழுத்துக் கொண்டு இந்த முருகன் சந்நிதியில் வந்து நின்றாள். அந்தத் தாய் முருகனோடு வழக்காட வந்துவிட்டாள். இறைவன் சுந்தரனோடு வழக்காடியது அன்று நடந்தது. இன்றைக்கு தாய் முருகனோடு வழக்காடினாள். "முருகா! நீ உண்மையான தெய்வமாக இருந்தால் எனது மகனுக்கு பேசும் சக்தியைக் கொடு; அவனை இந்த உலகில் வாழவிடு உனது திருவுள்ளம் இரங்குமா? அவன் வாழ்நாள் முழுவதும் உனது புகழையே பாடிக்கொண்டிருப்பான். அவனை உன்னிடமே விட்டுவிடுகிறேன். ஒரு முடிவு இல்லாமல் நாங்கள் இங்கிருந்து போகப்போவதில்லை". அப்பொழுது ஆலய மணி ஒலித்தது. முருகனுக்கு காலைவேளைப் பூசை தொடங்கியது. அவள் முருகா! முருகா! என்று உச்சரித்துக்கொண்டு நின்றாள். கந்தசாமியின் வாயிலிருந்தும் "முருகா" எனும் மந்திர வார்த்தை வந்ததைக் கேட்டு அந்தத் தாய் ஆடினாள்; பாடினாள்; ஆனந்தக் கூத்தாடினாள்.

சாமி ஐயா 'திருப்புகழ் பாடல்களை முருகன் சந்நிதியில் நின்று மனமுருகிப் பாடிக் கொண்டு இருந்தார். அவர் திருப்புகழைப் பாடத் தொடங்கிவிட்டால் தன்னை மறந்து தன்நாமங் கெட்டு முருகனின் திருவருளிலே தலைப்பட்டு விடுவார்.

கந்தசாமி என்கின்ற அவருடைய பெயர் அந்த ஊரிலுள்ள கந்தனிடம் அவருக்கிருந்த அளவற்ற அன்பின் காரணத்தால் சாமிஐயா என்றே ஆகிவிட்டது. அவருக்கு வயது எழுபதுக்குமேல் இருக்கும் மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்டிக்கட்டையாகவே இருந்து விட்டார். அவருடன் கூடிப்பிறந்தவர்கள் எல்லாம் குடியும் குடித்தனமும் ஆகிப்போய்விட்டனர். ஆறுபேர் கொண்ட குடும்பத்தில் சாமி ஐயாவையும் ஒரு அக்காவையும் தவிர மற்றவர்கள் வெளி நாடுகளில் வாழ்கின்றார்கள். சாமி ஐயாவின் தந்தை இறந்தபோது அவர் பத்துவயதுச் சிறு வனாக இருந்தார். அவருக்கு ஆதரவாக இருந்த அம்மாவும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

சாமிஜயா பாடிக்கொண்டே நின்றார். அன்றைக்கும் வெள்ளிக்கிழமையாதலால் சாயங்காலப் பூசைக்கு ஊர்ச்சனங்கள் அதிக எண்ணிக்கையில் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் சாமிஜயாவைப்பற்றி நன்றாகத் தெரியும். அதனால் கும்பிடுவதும் அர்ச்சனை செய்வதும் வலம் வருவதுமாக போய்க் கொண்டிருந்தார்கள்.

ஒரு வயதான அம்மா சாமிஜயாவிற்கு எதிராக இருந்த தூணோடு ஒட்டியபடி நின்று அவரையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளுக்கு பார்வை நன் றாகவே இருந்தது. சாமி ஐயா, தமது பாடல் களை முடிக்கும்போது அருவாய் உருவாய்... என்ற கந்தரனுபூதியைப் பாடி முடிப்பார். அன் றும் திருப்புகழ் பாடியதுடன் பாடல் நிறைவாகி விட்டது. அவர் தன்னுணர்வு பெற்றவராய் கண்களை சுற்றும் முற்றும் ஓடவிட்டார். அவரைப் பார்த்தபடி நின்ற அந்தப் பெண்ணின் முகம் அவரை ஒருகணம் திக்குமுக்காடச் செய்துவிட்டது. என்ன செய்வது என்று தெரி யாமல் தவித்தார். “சாமிக்கு என்னைத் தெரி கிறதா” என்று வரவழைக்கப்பட்ட புன்னகை யோடு அந்தப்பெண் கேட்டாள். இது நீண்ட காலம் பிரிந்தவரின் சந்திப்புவேளை. இப்படி யான நேரங்களில் வாய் வார்த்தைகளைவிட விழிவீச்சுக்களே பேசித்தீர்த்துவிடுகின்றன.

சாமி ஐயாவின் நினைவுப் பதிவுகள் பின்னோக்கி ஓடின. அவர் அந்தப் பயங்கர விபத்திலிருந்து முருகனின் திருவருளால் பேசும் சக்தியை மீளப்பெற்றவர். குமரகுருபரர் ஐந்து வயதில் இறைவனுக்குப் பாமாலை சூட்டத் தொடங்கினார். கந்தசாமி பத்து வயதில் பாடத் தொடங்கினார். இந்தப் பிர பஞ்சத்தில் எல்லாமே ஏதோ ஒரு ஆற்றலுடன் இயங்கிக்கொண்டே இருக்கின்றன. அந்த இயக்கத்தின் கணக்குப் பதிவே காலம் ஆகிறது. அதனால் காலம் ஓடிக்கொண்டே இருக்கும். கந்தசாமியும் கால ஓட்டத்தில் கலந்து, வளர்ந்து வாலிபனாகிவிட்டார்.

பிரமனுடைய தூரிகை வண்ணங்கள் தீட்டி வடிவுபார்க்கும் வசந்தகாலம் வாலிப மாகும். மன்மதனும் தன்பங்கிற்கு மலரம்பு களால் துளைத்தெடுக்கத் தொடங்கி விடு வான். கந்தசாமிக்கும் வாலிபத்தின் கோலத் தினால் வரும் கோளாறுகள் அவ்வப்போது அடிமனதில் தலைதூக்கவே செய்தன. வள்ளி நாச்சியாரை விரட்டி விரட்டி காதலித்த கந்த னின் சந்நிதியிலேயே அவருக்கும் ஒரு ஆதாரசுருதி மீட்டப்படத் தொடங்கியது.

மீனாட்சி அதே ஊரில் வாழுகின்ற வசதியான குடும்பத்துப் பெண். எழுதா ஓவி யம் போன்ற அவளுடைய அழகை இன்றைய கணனிச் சித்திரத்தில் வரைய முடியுமோ? என்பதே சந்தேகந்தான். அடிக்கடி அவளும் கோவிலுக்கு வருவாள். இயற்கை அழகோடு ஒப்பனையும் சேர்ந்து இரட்டை அழகோடு வந்துபோகின்ற அவளை கந்தசாமியின் கண்கள் பார்த்தன. இவரின் பாட்டுச் சுவையில் மீனாட்சிக்கும் ஒரு ஈடுபாடு இருந்தது. இரு வரது மனங்களிலும் தூண்டி விடப்பட்ட எண் ணச் சாமரையின் வீச்சில் அவர்கள் தங்களை ஆசுவாசப் படுத்திக் கொண்டார்கள்.

இனிமேல் அவர்கள் சந்திப்பதையும் அந்தச் சந்திப்பில் அரும்புவிட்டு அதன் பிறகு மொட்டாகி மலரப்போகின்ற காதல் என்கின்ற மணம் வீசுகிற மலரையும் யாராலும் கை காட்டி தடுக்கமுடியாது. காத்திருப்பதும் இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளில் பூத்திருப்பதுமாய் சிலகாலம் சென்றது. கந்தசாமி தன்னவளாக மீனாட்சியை ஆக்கிவிட வேண்டும் என்ற முடிவிற்கே வந்து விட்டார். அவருடைய அக்காவிற்கு திருமணம் நடந்து 6 மாதங்கள் கூட ஆகியிருக்காது. அவள் புகுந்தவீட்டில் கணவனோடு இன்னும் மனம் ஒருப்பட்டு சொந்த வீட்டின் நினைவு களை மறந்து வாழவும் தலைப்படவில்லை. கண் இல்லாத காதலுக்கு மூளையும் மக்கி மந்தமாகி போய்விடுகிறது. செடியில் பூத்த ரோஜாவை முட்கள் குத்தாமல் பறித்து எடுத்து விட்டால் நல்லது. கந்தனின் புகழ்பாடிக் கொண்டு காலத்தைக் கழிக்கின்ற கந்த சாமிக்கு உலக நடப்புக்கள் சரியாகப் பிடிபட வில்லை. தனது அம்மாவிடம் தனது விருப் பத்தை வளைந்து நெளிந்து முறையிட்டார். எப்படியும் இந்தமுறை நூறாவது சதம் போட்டு விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட சச்சின் முதலாவது பந்திலே கிளீன்போல்ட் ஆகி விட்டால் எப்படியோ அம்மாவும் அப்படி ஏமாந்து போனால், சிவபூசைக்குள் கரடி புகு வதை அவள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள தயார் ஆக இல்லை. கந்தசாமியின் மனதில் கட்டி எழுப்பப்பட்ட பாரிஸ் நகரத்து ஈகில் காதற்கோபுரம் சடசட என்று இடிந்து தகர்ந்து வீழ்ந்தது.

தாய் சொல்லைத் தட்டமுடியாத கந்தசாமி மீனாட்சியின் காதலை தட்டிவிட வேண்டியதாயிற்று. ஜப்பானியர், சுனாமியைத் தொடர்ந்து ஏற்பட்ட யக்கசிமா அணுஉலை பாதிப்பில் இருந்து எவ்வளவு விரைவில் மீண்டார்களோ அதுபோல மீனாட்சியும் சமாளித்துக் கொண்டாள். காலச்சுழற்சி வருடங்களை விழுங்கியபடி சென்று கொண்டிருந்தது. மீனாட்சி நல்ல ஒரு மாப் பிள்ளையை மணம் முடித்துக்கொண்டு வெளி நாட்டில் சென்று இத்தனை காலமும் வாழ்ந்து கொண்டிருந்தாள். தன்னுடைய இரண்டு பிள்ளைகளுக்குத் திருமணமும் முடித்து விட்டாள். அக்கடா என்று ஆர அமர இருந் தவள் ஒருதரம் சொந்த ஊருக்கு வந்து போகலாமே என நினைத்தாள். அவள் வந்து விட்டாள். தான் கைப்பிடிக்க முடியாத பழைய காதலனையும் கண்டுவிட்டாள்.

வாழ்க்கை வட்டத்தில் வசந்த காலத் தில் வாழவேண்டுமென்ற துடிப்பு இருந்தபோது இவர்கள் இருவரும் சந்தித்த அதே முருகன் சந்நிதியில்தான் இப்போது நிற்கின்றார்கள். ஆனால், ஒரு வித்தியாசம், இது இலையுதிர் காலம். இருந்தாலும் பசுமையான நினைவுகள் எப்போதும் இனிமையானவைதான். அந்த ஒரு சில நிமிடங்கள் மீண்ட நினைவுகளைக் கலைத்துவிட்டு இருவரும் நிஜத்திற்கு வந்தார்கள். வாழாமல் வாழ்ந்து கழிந்துபோன கந்தசாமியின் வாழ்வின் சில உச்சமான வீச்சுக்களையும், மீனாட்சியின் அதே தன்மை யில் இருப்பவற்றையும் இருவரும் அந்த சில வினாடிகளில் பகிர்ந்துகொண்டார்கள். கந்த சாமியின் மனதிலிருந்த பெரியசுமை இறக்கி வைக்கப்பட்டதைப்போல இலேசாகயிருந்தது. இதுவரை காலமும் அவர் முருகனின் புகழைப் பாடியதெல்லாம் இப்படியொரு சுக மான அனுபவத்தை அடைவதற்காகவே எனத் தோன்றியது.

வந்த வினைகளும் இனிமேல் வரு கின்ற வினைகளும் கந்தனின் முன்னால் வந்துநின்றால் நீறாகிப்போகும் என்பது உண்மையானது.

கந்தசாமி இனம்புரியாத மகிழ்ச்சியில் இருப்பதை உணர்ந்தார். அவருக்கு உலக சம்பந்தங்களெல்லாம் விடுபட்டுவிட்டன. இரு வினை ஒப்பு மலபரிபாகம் என்ற நிலை இது தானோ? இதுவே ஆனந்தக் களிப்பு. ஆனால் சராசரி ஆன்மாவான மீனாட்சிக்கு இன்னும் குழப்பம் அதிகரித்தது. இருவரும் சந்நிதியில் இருந்து வெளியே வந்துவிட்டார்கள். கந்தசாமி நின்றார். மீனாட்சியை ஒரு தடவை உற்றுப் பார்த்தார். சிரித்தார். "அதோ முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கிறான்....." என்றார். அப்போது எங்கிருந்தோ ஒரு மயில் பறந்துவந்து கோபுரத்தில் இருந்து அகவத் தொடங்கியது. கந்தனின் நாமத்தை உச்சரித்தபடி கந்தசாமி மண்ணில் சாய்ந்தார். அவர் சாமி ஐயா ஆகிவிட்டார்.

அவர் ஆன்மா முருகன் திருவடியில் நிலையான இன்பப்பேற்றில் சேர்ந்து விட்டது. மீனாட்சியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் விழுந்து சிதறியது.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை நீக்கி மேலாம்
நன்னெறி ஒழுக செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி.

விழிக்குத் துணை திருமென்மலர் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா 'எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

அருவாய் உருவாய் உலதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

**குறிப்பு:**

ஒரு சிறுகதை "ஞானச்சுடர் மலரில் வெளிவருவது இதுவே முதன்முறை. பார்வையற்ற ஒரு மாற்றுத் திறனாளியின் முயற்சியினை ஊக்குவிக்கும் நோக்கிலும், கதையின் கரு சந்நிதியான் திருவாசல் சூழலில் நடைபெறுவதாலும் இச்சிறுகதை இங்கே பிரசுரமாகிறது. வருங்காலங்களில் சிறுகதை எதுவும் வெளிவராது என்பதை அனைவரதும் கவனத்திற்குத் தருகிறோம்.

-பேரவையினர்-



## தேறுதல் தாராயோ? தேவர் சிறை மீட்டவனே!

ஆற்றங் கரையானே! ஆறுமுகப் பெருமானே!
அமரர் சிறைமீட்ட அற்புதனே! சரவணனே!
மாற்றந் தருவாயே! மாலவன் மருகனே!
மங்கையர் தேவயானை வள்ளிமனை வாளனே!
தேற்றந் தந்தாயே தேவருக்குத் தயாபரனே!
தேம்பியழும் என்றனுக்குன் திருவருள் தாராயோ!
ஆற்றல் மிகவுடைய அரியவேல் கொண்டவனே!
ஆறுதல் அளிக்காயோ? அடியேனை ஆதரித்து!

-ப. மகேந்திரதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தனே கலியுகத் தெய்வம் (தொடர்ச்சி....)

திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

சேவற்கொடியோன் என்ற சொல் பிரணவ தத்துவத்தின் நாத தத்துவத்தை விளக்குகின்றது. இதனைக் கந்தரனுபூதி, "ஆடும் பரிவேல் அணி சேவலெனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று கூறுகிறது திருப்புகழ். "ஏழுலோகமும் வாழ்வான சேவற்கொடி" என்று போற்றுகிறது. உலக இருளை அகற்றச் சூரியன் உதயமாவதை வரவேற்றுச் சேவல் கூவி மனிதர்களை எழுப்பி அவர்களின் மன அழுக்கை நீக்கும்படி கூவிச் சொல்கிறது. "முருக நாமத்தைச் சொல்லு உன் துயரமெல்லாம் பறக்கும்" என்றும் கூறுகிறது. மயிலுக்கும் வேலுக்கும் உள்ள பெருமை சேவலுக்கும் உண்டென்றும் சேவல் விருத்தம் கூறுகிறது.

"அச்சப்படக் குரல் முழக்கிப் பகட்டியவறிக் கொட்ட மிட்ட மரிடும்
அற்பக் குறப்பலிகள் வெட்டுக்கள் பட்டுக்கடி அறுகுழைகளைக் கொத்தியே
பிச்சுச் சினத் துதறி எட்டுத்திசைப் பலிகள் இட்டுக் கொத்தி விறலே
பெற்றுச் சுடர்ச் சிறகு தட்டிக் குதித்தியல் பெறக் கொக்கரித்து வருமாம்"

எங்கிருந்து நினைத்தாலும் சேவற்கொடியோன் ஓடோடி வருவான் என்பதை "சேவல் விருத்தம்" பின்வருமாறு கூறுகிறது.

"சென்றே யிடங்கள் தந்தா வெனும் பொழுது
செஞ்சேவல் கொண்டு வரவேண்டும்"

ஏழு உலகங்களையும் சேவற்கொடியோனே வாழவைக்கிறான் என்றும் சேவல் விருத்தம் கூறுகிறது.

"ஏழு லோகம் வாழ்வான சேவற்கொடியோனே" என்றும்; "அரியகுருகு கொடி எங்கும் தளைத்தருள்"என்றும் அருணகிரிநாதர் பாடுகிறார். வேலைக் காண்பதும் மயிலைக் காண்பதும் எவ்வேளையிலும் நடைபெறாது. சேவலை எங்கும் காணலாம். சேவலைக் கண்டாலும் அதன் குரலைக் கேட்டாலும் சேவற்கொடியோனான முருகனின் நினைப்பு அடியார்க்கு உண்டாகுதல் வேண்டும் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

"கலியுகத்திற்குரிய தெய்வம் கந்தனே" என்று சாத்திர நூல்கள் பலவும் கூறுகின்றன. "சனத் குமார சம்ஹிதை" என்ற நூல்;" கலௌ குஹம் பரித்யஜ்ய நருணாம் ஸர்வார்த்த தாயகம் நகிஞ்சிதாப்தி" என்று கூறுகிறது. இதன் அர்த்தம், "கலியுகத் தெய்வம் குகன்" என்பதே. கந்தனைத் தொழுபவர்களுக்குக் கலியின் கொடுமையும் யமபயமும் இருக்காது என்று வடமொழி ஸ்காந்தபுராணம் கூறுகிறது, ஸ்கந்ததஸ்ய அதுலாம் கீர்த்திம் கலிகல்மஷ நாசிம்" என்கிறது.

முருகனுக்கு மாவிளக்கு என்னும் உணவே பிடிக்கும். அதனால் முருக பக்தர்கள் தேனும் தினைமாவும் கலந்து விளக்குப்போல் செய்து வாழைத்தண்டு, தாமரைநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட திரியைப் பசுநெய்யிட்டுக் கொழுத்தினால் குழந்தையில்லாதவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். குருபகையானவர்கள், குருவால் பாதிக்கப்பட்டோர், சுக்கிரதிசை நடப்பவர்கள், சுக்கிரன் நீசம் பெற்றவர்கள், இளவயதில் சுக்கிரதிசை நடப்பவர்கள், சனிதிசை நடக்கும்போதும், ஏழரைச்சனி, அட்டமத்துச் சனியால் பாதிக்கப்படுவோர் முருகனின் கோயிலுக்குச் சென்று வழிபட்டு மாவிளக்கிட்டால் அவர்களைப் பிடித்த தோசங்கள் யாவும் நீங்கும். இதனால் தான் முருகனைக் கலியுகத் தெய்வமென்று நூல்கள் கூறுகின்றன.

முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், "நாலந்தவேதத்தின் பொருளோனே, நானென்று மார்தட்டும் பெருமானே," என்ற அடி பக்தர்களைக் காக்க என்றும் எப்பொழுதும் தயாராக இருப்பவன் முருகன் என்று கூறுகிறது. பக்தர் கூடியிருக்குமிடங்களுக்கு முருகன் வலியச் செல்பவன் என்பதைத் திருப்புகழ்; மாசிலடியார்கள் வாழ்கின்றவூர் என்று தேடிவினையாடியே யிங்கனே நின்று வாழும் மயில் வீரனே" என்று கூறுகிறது.

"மொழியும் அடியவர்கள் கோடிகுறை கருதி னாதும் வேறு
முனிய அறியாத தேவர் பெருமானே" என்றும்,
"யார்வேண்டினாலும் கேட்ட பொருளீயும்
தியாகாங்க சீலம் போற்றியும்" என்றும்

"தொழுது வழிபடுமடியார் காவற்காரப் பெருமானே" என்றும், அருணகிரிநாதர் பாடுகிறார்.

"அடியார் உள் நினைவது உன்னடி
ஒளியொடு குளிர்வது உன்முகம்"

என்று ஈசான தேசிக சுவாமிகள் பாடியுள்ளார்.

"ஐய நின் சீரபேசு செல்வர்வாய் நல்ல தென்னமு
துண்டு உவந்த திருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணி தோங்கி வாழுந்தலை
மெய்யநின் திருமேனி கண்ட புண்ணியர் கண்கள்
மிக்க ஒளி மேவு கண்கள்" என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுகிறார்.

"வைதாரையும் மங்கு வாழவைப்போன்" என்று கந்தரலங்காரம் கூறுகிறது.

வேடர்குலக் கொடியான வள்ளியை மணந்த தேவசேனாதிபதி மஹாவிஷ்ணுவின் உருவெடுத்து இராவணனது பத்துத் தலைகளையும் கொய்தான் என்றும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் என்று சிதம்பர சுவாமிகள் கூறுகிறார்.

காளமேகம் முருகனை நிந்திப்பதுபோலப் புகழ்ந்து பாடிய பாடல் இது.

"அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி- சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத்தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை".

மேலெழுந்தவாரியாக இப்பாடல் கேலிக்குரியதாக இருந்தாலும் சிவக்குடும்பத்தின் தத்துவத்தை எடுத்து இயம்புவது.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய ஒழுக்கங்கள்

**திரு மா. கணநாதன்** அவர்கள்

இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான். இருந்தும் அவன் உறைந்து அருள் சுரக்கும் இடம் ஆலயமே. ஆலயத்தில் தோன்றும் திருவுருவில் இறைவன் அழகையும், அருளையும் பெறலாம். பசுவின் உடலில் பால் இருக்கின்றது. ஆனாலும் பசுவின் மடியிலேயே பாலைப் பெறுதல் போல இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலய வழிபாடே இன்றியமையாதது ஆகின்றது.

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

என்று நாவுக்கரசப் பெருமான் நன்றே நவின்று உள்ளார்.

செம்மலர் நோன்றாள் சேர வொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மடிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே

என சிவஞானபோதம் 12ஆம் சூத்திரம், ஆலய வழிபாட்டால் மலநீக்கம் பெறுவதைக் காட்டுகின்றது.

இவ்வாறு பெருநிலை தரும் ஆலயத்தில் எமது வழிபாடு ஒழுக்க நிலையில் பேணப்படல் .வேண்டும். சைவசமயத்தோர் தங்கள் சமய ஒழுக்கங்களை அறிந்து அதன் வழியே பின்பற்றி நடத்தல் அவசியம் ஆகின்றது.

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவம் வழி சமைக்கின்றது.

எம் சமயம் காட்டும் ஒழுக்க நெறிகளை கைக்கொள்வதில் நாம் அக்கறை இன்றி இருப்பது மிகவும் வேதனைக்கு உரியதாகும். இதனால் தீய விளைவுகளும் ஏற்படுகின்றது.

கைத்தொலைபேசியினைக் கையாள்வதிலும், தொலைக்காட்சி தொடர் நாடகங்களைப் பார்ப்பதிலும் அக்கறை காட்டுவோர், ஏனோ ஆலய வழிபாட்டு முறையில் அக்கறை காட்டவில்லை என்பது புரியாதுள்ளது. ஆலய வழிபாட்டு முறையை அறியாமல் செய்கின்ற வழிபாடு எவ்வளவு தீமை பயக்கிறது. இவ்வாறு தவறான முறையில் வழிபாடு செய்வதால் எமது சமயத்தை மூடக்கொள்கை உடையதாக்கி விடுகின்றது.

சைவ சமய ஒழுக்கங்களில் அதனைச் சார்ந்தோர் அக்கறை கொள்ளாதிருப்பதும்; மேலும் அலட்சியப் போக்குடன் இருப்பதும் துன்பநிலையையே காட்டுகின்றது. சமயசொற்பொழிவாளர்கள், இதில் அக்கறை கொண்டு வழிகாட்ட வேண்டும். இல்லையேல் நம் சமூகத்தின் எதிர்காலம் அவமானமும் துன்பமும் நிறைந்ததாக மாறிவிடும்.

ஆலயப் பூசைக்கு பூ எடுப்பவர்கள், மதுப்பிரியராகவும் மாமிசப் போசனைக்குரியவ ராகவும் இருக்கின்றார்கள். இப்படி எடுத்துச் செய்யும் பூ பூசைக்கு உரியது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைக்கு பூ எடுப்பவர் எத்தகுதி உடையவராக இருத்தல் வேண்டும் என்ற நியதியை மீறிச் செய்யும் ஆலயத் தொண்டால் என்ன பலன்?

இதன்படி ஆலயத்தில் தொண்டு செய்வோர், ஆலயப் பூசைக்கு மலர் எடுப்போர், மது மாமிச போசனம் செய்யாதவராகவும், சமயதீட்சை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

- வீதி வலம்வரும்போது இறைவன் நினைப்பல்லால் பிறிதொன்றும் பேசாது வருதல் வேண்டும்.
- அர்ச்சனைப் பொருள்களை அரைக்குக்கீழ் கொண்டு செல்லக்கூடாது.
- பூசைக்குரிய பொருள்களை தகாத இடத்தில் வைக்கக்கூடாது.
- வசந்தமண்டபப் பூசை நடக்கும்போது, மூலஸ்தான வணக்கம் வீதிவலம் வருதல் செய்யக்கூடாது.
- அபிஷேகம் நிகழும்போதும், திரையிடப்பட்டிருக்கும்போதும் வலம் வருதல் கூடாது.

எனவே சைவ சமய ஒழுக்க முறைகளைப் பின்பற்றி ஆலய வழிபாடியற்றி இன்புறுவோமாக.

---

## வாழ்வும் வரமும் வளமும் தரும் சந்நிதியான்

அற்புத அருளே போற்றி ஆனந்த நிதியே போற்றி!
சித்திர முதலே போற்றி சிவசங்கர் பாலா போற்றி
தத்துவக் கொழுந்தே போற்றி தானக மானாய் போற்றி
சித்தமத அறிவுக் கெட்டா சேயுருக் கொண்டு நின்றாய் போற்றி!

உடலினுக்குள்ளம் போல கதிர்காம முள்ளம் செறிந்தாய் போற்றி
உள்ளத்தை மேவவிட்டு ஆலிலை துவண்டாய் போற்றி!
உகந்திடும் வெளாலுள்ளம் மகிழ்ந்திடும் பரனே போற்றி
உடலுயிர் மருட்சி கொள்ள ஒளிதரும் சுடரே போற்றி!

விரவு கொள் மனைதத்தேற்றி விண்ணுலகுற்றாய் போற்றி!
வரமுற அருள் கொண்டுற்ற மயில்வாகனனே போற்றி
பரவும் பஞ்சேந்திரியம் நீக்கி பழுதிலாவரமும் கொடுத்தாய் போற்றி!
திரிபுவனமூர்த்திக்கென்றும் அருள் ஞானக்கடலேயானாய் போற்றி

அடியவர் வணங்கும் வாழ்வில் பலவுருக் கொள்வாய் போற்றி!
அனைத்திலும் நின்போக யோக ஞானமே புரிந்தாய் போற்றி
பக்திக்கருள் காண்போர்க்கு பதுபதவேல் கொடுத்தாய் போற்றி
சித்தமது சிறக்க வந்த அடியார்க்கு பயனொளி யிறைவா போற்றி!

-க. தெய்வேந்திரம்-



(தொடர்ச்சி...)

# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம்- காரைநகர்

மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் றிருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்

**பதவுரை:**

மீண்டு வாரா வழி அருள்புரிபவன்- திரும்பி இப் பிறவிக்கு வராத வீட்டு நெறியை அருள்செய்பவன், பாண்டி நாடே பழம்பதியாகவும்- பாண்டி நாட்டினையே தமது பழைய பதியாகக் கொண்டருளியும்.

மீண்டு வாராவழி- பரமுத்திவழி. மீளத்திரும்பாத வழியிற் சென்று இறைவன் திருவருளைப் பெற்று ஒன்றானவர் மீண்டு இப்பிறப்பினை அடையாராதலின், அப்பேற்றினைத் தருகின்ற நெறியினை "மீண்டு வாரா நெறி" என்றார்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" குறள் 356

என்பதும் ஈண்டு அறியற்பாலது. மீண்டு வாரா வழியை இறைவன் அருள் புரிதல், "வாரா வழியருளி வம்தெனக்கு மாறின்றி, ஆரா வமுதாய் அமைந்தன்றே" (திருவெண்பா7) என்பதனாலுமறியப்படும்.

பாண்டியன்நாடு என்பது பாண்டிநாடு என மருவிற்று. பாண்டி நாட்டினைப் பழம்பதியென்றது அங்கயற்கண்ணியம்மையாரும் சோமசுந்தர பாண்டியரும் உக்கிரகுமாரரும் மதுரைமாநகரில் அரசுவீற்றிருந்து அந் நாட்டினைப் புரந்தமைபற்றியாகும்.

"தென்பாண்டி நாட்டானே" சிவபுரா 90
"தென்னாடுடைய சிவனே போற்றி" போற் 164
"தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை" அம்மானை 10
"தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை" அம்மானை 19
"தென்பாண்டி நாடனை" குயில் 2

என இத் திருவாசகத்து வருவனவுங் காண்க.

"கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
ஐவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரரு ணாயகன்" (2:9-14)

எனக் கல்லாடத்து வருதலும் ஈண்டு அறியற்பாலது.

பதி- இருப்பிடம். "தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்ப" (கலி 118:17) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

பத்தி செய் அடியரை பரம்பரத்து உய்ப்பவன்- அன்பினால் தன்னை வழிபாடு செய்கின்ற அடியவரை மிக மேலான வீட்டுலகிற் சேர்க்கின்ற இறைவன், உத்தரகோசமங்கை ஊராகவும்- உத்தரகோசமங்கையைத் தானிருக்கும் ஊராகக் கொண்டருளியும்.

பத்தியினாற் செய்யும் வழிபாட்டினைப் "பத்திசெய்" என்றார். அவ்வழிபாடு இறைவனை இடைவிடாது நினைத்தலும் வணங்குதலும் வாழ்த்துதலுமாம். பரம்- சுத்தவித்தியாதத்துவம் இது சிவதத்துவம் ஐந்தனுள் கீழ்ப்படிகணுள்ளது. அதன்மேலே ஈசுவரம், சாதாக்கியம், சக்தி, சிவம் என்னும் தத்துவங்கள் உள்ளன. அவை மேன்மேல் நோக்க ஒன்றினொன்று உயர்வுடையன. அத்தத்துவங்களை அடைந்தோர் விஞ்ஞானகலராய் மீண்டுவாரா முத்தியாகிய சாயுச்சியத்தை அடைவர். சுத்த வித்தியாதத்துவம், தனக்குக் கீழேயுள்ள வித்தியாதத்துவம், ஆன்மதத்துவங்களை நோக்க உயர்வுடையதாகலின் 'பரம்' எனப்படும் பரம்- மேலானது எனப்பொருள்படும் வடசொல். அதனிலும் ஈசுவரமும் அதனிலும் சாதாக்கியமும், அதனிலும் சக்தியும், அதனிலும் சிவமும் உயர்வுடையன. இவ்வுயர் நிலைகளில் அடியாரைச் சேர்த்தலாற் "பரம்பரத்துய்ப்பவன்" என்றார்.

உத்தரகோசம்- வீட்டுநூல். என்றது சர்வஞானோத்தரம் முதலிய ஆகமங்களை இறைவன் அங்கு எழுந்தருளியிருந்து உமையம்மை முதலாயினோர்க்கு இவற்றை உபதேசித்தமையின் அத்தலம் உத்தரகோசமங்கை யெனவும், அஃது அவ்விறைவர்க்குச் சிவபுரம்போல் ஊராகவும் கூறப்பட்டது. அடிகள்,

"தாதாடும் பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்- கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர்"

எனத் திருத்தசாங்கத்தில் அருளியமையுங் காண்க.

ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய முதலிற்றோன்றிய காரணேசுரர் முதலான வர்களுக்குத் திருவருள் செய்தருளிய தேவதேவன் திருப்பெயராகவும்- மகாதேவன் என்பது தனக்குரிய அழகிய பெயராகக் கொண்டருளியும்.

ஆதிமூர்த்திகளாவார்: பிரம விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்போர். இவர்களுள் பிரமா ஆன்ம தத்துவத்திலும் விஷ்ணு வித்தியாதத்துவத்திலும் உருத்திரன் சுத்த வித்தையிலும் மகேசுவரன் ஈசுவரத்திலும், சதாசிவன் சாதாக்கியத்திலும் பண்டுதொட்டே கடவுட்டன்மை பெற்றவராய் அமர்ந்திருந்து அவ்வத் தத்துவ புவனங்களில் இறைவனருளால் அதிகாரம் செலுத்துதலின் "ஆதிமூர்த்திகள்" எனப்பட்டனர்.

தேவதேவன்- தேவர்களுக்குத் தேவ்ன்; என்றது மகாதேவன் என்றபடி, இறைவன் ஆதிமூர்த்திகட்கும் முதல்வனாதல் பற்றித் "தேவதேவன்" எனப்பட்டான். "தேவர்தேவுக்கே" (கோத்தும்பி 5) எனவும் "தேவதேவன் மெய்ச் சேவகன்" (சென்னி 1) எனவும் அடிகள் அருளியமையுங் காண்க.

இருள் கடிந்து அருளிய- உயிர்களின் அறியாமை இருளைப் போக்கியருளிய, இன்ப ஊர்தி- பேரின்ப வடிவாகிய இடபத்தினை வாகனமாகவுடைய இறைவன், அருளிய பெருமை அருள் மலையாகவும்- எல்லாவுயிர்க்கும் அருள்செய்த பேரருளே தான் அமர்ந்திருக்கும் மலையாகவும் கொண்டருளி.

இருள்- அறியாமை. கடிதல்- போக்குதல். "கொடிது கடிந்து கோறிருத்தி" (புற 17:5) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராகிய இறைவன், உயிர்களின் அறியாமையாகிய இருளைப் போக்குதலின் "இருள் கடிந்தருளிய" என்றார்.

"இருள்கெட அருளும் இறைவாபோற்றி" போற்றி 169
"பொய்யிருள் கடிந்தமெய்ச்சுடரே" கோயிற் 3
"இன்பம் பெருக்கி யிருளகற்றி" திருவெண்பா 11
என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

இறைவனது பேரின்பமே இடபமாக அமைந்திருத்தலின் அதனை ஊர்தியாகவுடைய இறைவனை "இன்பவூர்தி" என்றார். ஊர்தி- ஊர்தியையுடையவன்; பெயர். மால்விடையூர்தி" (சத 65) என்புழிப்போல.

அருளிய அருள் என இயையும். "அருளிய அருளும் பொய்யோ" (எண்ணப்பதி 2) என வருதலுங் காண்க. இறைவன் எவ்வுயிர்க்கும் பேரருளே செய்தலின் "அருளிய பெருமை யருள்" என்றார். பெருமை- அருள்- பேரருள் எனத் திரிபடையாமல் இயல்பாய் நின்றது. இறைவன் உயிர்கட்குச் செய்யும் பேரருள் மிகப்பெரிதாயிருத்தலின் அதுவே அவற்றிற்கு இருக்கையாகிய மலையாகும் என்பார். "அருண் மலையாகவும்" என்றார். "மன்னிய திருவருண் மலையே போற்றி" (போற்றி 128) என்பதும் ஈண்டறியற்பாலது.

(தொடரும்...

---

## செல்வச்சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை- 29

-இராசையா குகதாசன்-

**பல்லவி**


இவணுறு துயரம் அறியாயோ?- முருகா!
கவணெறி குறவள்ளி குஞ்சரியின் கணவா!

**அநுபல்லவி**

தவமுனி கனிவேண்டி தண்மயி லேறியிந்த
அவனியை வலம்வந்த ஆறுமுகா! குகா!

**சரணம்**

அவநெறி வழியேகி அடியினை துதியாது
அவமதி செட்டிகுலம் அழிவுறச் செய்தவனே!
பவமறுத் தடியாரைப் பதமலர்க் கீழ்வைத்து
நவமுறு மின்பமெலாம் நண்ணிடச் செய்குமரா!
உவமையில் கதிர்காமம் உவப்புடன் வரமறுத்து
கவலைகொள் கதிர்காமர் கண்ணைமூடி விழிக்க
கவினுறு மலைசேர்த்துக் கற்பகனாரை நோக்கி
குவிவடி வேலொன்றைக் கொடுத்திடக் கூறியவா! [இவணுறு]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவாறே நாவால் நவில...

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

இந்த உடலில் நாவானது படைக்கப்பட்டிருப்பது இறைவனை வாழ்த்தி வணங்குவதற்காகவே என்று இறையடியார்கள் பலரும் பேச்சாகவோ பாடலாகவோ கதையாகவோ கூறியுள்ளனர். எவ்வாறு இறைவனை நாவால் போற்றுவது என்பது பற்றியும் ஒவ்வொரு அடியாரும் வெவ்வேறு வகையில் கூறியுள்ளனர்.

இந்த நாவானது வேகமாக இடையறாது பேசிக்கொண்டிருக்கும். ஓய்வு என்பதே இல்லாமல் பேசிக்கொண்டிருக்கும். அதனது வேகம் ஆறுதலடைய வேண்டும். இனிமையான அன்பில் ஊறிக்கனிந்த சொற்கள் எவ்வளவோ இருக்க, இந்த நாவோ கடுமையான வெம்மையான மற்றவரின் மனதைப் புண்படுத்தக்கூடிய சொற்களைத்தானே கனியிருப்பக் காய் பறிப்பதுபோல் உபயோகிக்கிறது.

சரி, அப்படி உபயோகித்துவிட்டது. இனி என்ன செய்யலாம்? கொதிக்கக் கொதிக்க உணவோ, பானமோ வந்துவிட்டது. உண்ணவோ, பருகவோ ஏதாவது செய்துதானே ஆகவேண்டும். அதை ஆறவைத்து உண்கிறோம். அல்லது அருந்துகிறோமல்லவா? அதுபோன்று இந்தச் சொற்களையும் ஆறவைத்து இனிய சொற்களாக்கி நாவால் நவில வேண்டும்.

எங்கள் மனங்கள் எங்கெங்கோ அல்லைகையில் நாவுகள் வேறெங்கோ அலைவதும் இயல்பு. உள்ளம் ஒன்றித்துப் பேசினால் இப்படி வெய்ய சொற்கள் வெளிவந்து வேக வைக்காதே!

அதுமட்டுமல்ல ஒருபுலனின் சக்தியே அபரிமிதமானது. இரு புலன்கள் ஒன்றிணைந்தால் அவற்றின் சக்தி அளப்பரியதாகவிருக்கும். உதாரணமாக தனியாகக் கண்ணால் காண்பதைவிட செவியும் சேர்ந்து செயற்பட்டு ஒரு நிகழ்வை அவதானிக்கும்போது அதனாற் பெரும்பயன் அதிகமாக இருக்கும். ஒரு புலனின் செயற்பாட்டோடு மனம் ஒன்றிக்கும்போதும் அதன் சக்தி, அல்லது தாக்கம் அல்லது ஏற்படும் ஈடுபாடு மிக அதிகமாகக் காணப்படும். உள்ளம் ஒன்றித்து நா உரைக்கும் போதும் அதன் சக்தி அற்புதமானதாக இருக்கும்.

ஆனால் எதிலும் அசுத்தம் கலந்தால் அதன் மகத்துவம் போய்விடும். பக்குவமாக எவ்வளவோ முயன்று கஷ்டப்பட்டுச் சமைத்த உணவில் சிறு அசுத்தமான பொருள் கலந்தால் அவ்வளவும் பயனற்றுப் போகும். ஒரு கிணற்று நீரில் சிறிதளவு நஞ்சு கலந்தால் அந்தக் கிணற்றுநீர் முழுவதும் நஞ்சாகிவிடும். அதேபோல் மனம் ஒன்றி நா நவின்றாலும் மனத்தினுள் கள்ளமும் காமமும் குடியிருந்தால் பயன் ஏறுமாறாவது நிச்சயம். எனவே கள்ளம் ஒழிந்து காமவினையகற்றியபின் உள்ளம் ஒன்ற நா கூறவேண்டும்.

கூறுகின்ற சொற்கள் பற்றி ஏற்கனவே பார்த்தோம்.ஆறவைத்துத் தூய்மை செய்த சொற்கள் எவையாக இருக்கும்? இறைவனது நாமங்களாகவே இருக்கும். வேறு புனிதமான சொற்கள் எவை?

இப்படி ஞானசம்பந்தப்பெருமான் கூறிய வழியிலே நாமும் நம் நாவினை உபயோகிப்போம் என்றால் இயல்கிறதா? இல்லையே. உள்ளம் எங்கெங்கோ ஓடுகிறது. கள்ளம் ஓடிவந்து உள்ளே புகுந்து விடுகிறது. காமப்பிசாசு தலைவிரித்தாடுகிறது. காமம் என்றதும் ஏதேதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தைத்தேடி உங்கள் மனம் அலையக்கூடாது. காமம் என்பதன் பொருள் ஆசை. ஆசை பல்வேறு பொருட்களில் ஏற்பட அதன் தோற்றங்கள் பலவாகின்றன. அத்தனை ஆசைகளும் எம்முன் குவிந்து விடுகின்றன.

ஏன் எம்மால் அந்தத் தேவாரம் கூறுவதுபோல் எம்பெருமானின் நாமங்களைச் செப்பமுடியவில்லை? அதற்கும் இறைவனின் அருள் வேண்டும். அவனது அருள் கிட்டினால் மட்டுமே இவ்வாறு நா நவின்று ஏத்தல் சித்திக்கும். அந்த அருளைத் தருமாறு அதே தேவாரத்தில் சம்பந்தப் பெருமான் வேண்டி நிற்கிறார்.

“சிவாயநம”, “நமசிவாய”, “ஓம் முருகா” போன்ற ஒரே மந்திரத்தை மீண்டும் மீண்டும் கூறித் துதிக்கவோ, அல்லது போற்றித் திருவகவல், போற்றித் திருத்தாண்டகம் ஆகியனவற்றையோ வேறு திருமுறைப்பாடல்கள் மற்றும் துதிப்பாடல்கள் முதலியவற்றையோ நாம் பாட எமக்குச் சரியான ஒரு முறையை இத்தேவாரம் காட்டுகிறது.

மந்திர உச்சாடனங்கள் செய்யவும் நாமங்களைக் கூறி அருச்சனை புரியவும் இதுவே ஏற்றதொரு முறையாகும். அந்த வழியில் நம் நாவை உபயோகித்து அதனுடைய உச்சப்பயனையடைய இறைவனது அருளை வேண்டி நிற்போம். மனமொன்றி ஞானசம்பந்தப் பெருமானின் பின்வரும் தேவாரத்தைப் பாடிப்பாடி நாவின் பயனையடைவோம்.

ஒல்லையாறி உள்ளம் ஒன்றிக்
கள்ளம் ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து
காமவினை அகற்றி
நல்லவாறே உன்றன் நாம(ம்)
நாவில் நவின்று ஏத்த
வல்லவாறே வந்து நல்காய்
வலிவலமே யவனே.



# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி (தொடர்ச்சி..)

-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

13. முருகன் தனிவேல் முநிநம் குருவென்
நருள்கொண் டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே

## பதவுரை

உரு அன்று- உருவப் பொருளும் அன்று, அரு அன்று- அருவப் பொருளும் அன்று, உளது அன்று- உள்ள பொருளும் அன்று, இலது அன்று- இல்லாத பொருளும் அன்று, இருள் அன்று- இருளும் அன்று, ஒளி அன்று- ஒளியாகிய பொருளும் அன்று, என நின்ற அதுவே- என்று சொல்லும் தன்மையில் நின்ற அப்பரம்பொருளே, முருகன்- முருகப்பெருமான் என்றும், தனிவேல் முநி- ஒப்பற்ற வேலையேந்திய முநிவன் என்றும், நம் குரு என்று- நமது பரமகுரு என்றும், அருள் கொண்டு அறியார்- அப்பரமனது திருவருளைக் கொண்டு அறியமாட்டாதவர்கள், அறியும் தரமோ- அறியவல்லவர் ஆவரோ? ஆகார்.

## பொழிப்புரை

உருவமான பொருள் என்றும், அருவமான பொருள் என்றும், உள்ள பொருள் என்றும், இல்லாத பொருள் என்றும், இருள் என்றும் ஒளியான பொருள் என்றும், சொல்லக் கூடியதாக நின்ற அப்பரம் பொருளே நமது முருகன்; அவர் வேல் தாங்கிய முனிவர். அவரே நமது பரம குருநாதர் ஆவார். ஆதலால் அவருடைய திருவருளையே துணையாகக் கொண்டு அதனால் உண்டாகிய மெய்யுணர்வினால் அறியமாட்டாதார், நூலறிவினால் அறிய வல்லவரோ? வல்லவர் ஆகார்.

## விரிவுரை

**முருகன்:-**

இறைவனுடைய திருநாமங்களுள் தலை சிறந்த நாமம் முருகன் என்பது.
"அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக"

-திருமுருகாற்றுப்படை-

**தனிவேல் முநி:-**

ஒப்பற்ற மெய்ஞ்ஞானமே வேலாயுதம், மந்- நினைப்பது. ஞானிகளால் நினைக்கப்படுகின்றவன் முநி, சதா இறைவனை நினைப்பவர்கள் முனிவர்கள்.

**நம் குரு என்று:-**

முருகனே நமக்குக் குருநாதன். ஆதிகுருவும் அவனே, தட்சிணாமூர்த்திக்குப் பிரணவத்தை உபதேசித்த குருபரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள் கொண்டறியார் அறியும் தரமோ:-**

இறைவனை, அவன் அருளாலேயே அறிந்து அடைதல் வேண்டும்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" -சிவபுராணம்-

முருகன் என்றது சத்து
தனிவேல் முநி- சித்து
குரு- ஆனந்தம், ஆக சச்சிதானந்தப் பொருள்.

"அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"
-(மைப்படிந்த) அப்பர்-

"காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரோ"
"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" -அப்பர்-

முருகனைக் குருமூர்த்தியாக உபாசனை செய்து, பல காலம் தவங்கிடந்தால் அப்பரமன் ஒருகால் குருவாக வந்து அருள்புரிவான். அங்ஙனம் அருள் பெற்றார் அநுபூதியடைவார்கள்.

பாம்பனடிகள் பிரப்பன் வலசையில் மயானத்தில் 35 நாட்கள் தன்னை மறந்து தவங்கிடந்த நிலையில் முருகனே குருவாக வந்து உபதேசிக்கப் பெற்றார். தரமோ- ஓ எதிர்மறை.

**உருவன்று அருவன்று:-**

இறைவன் உரு, உருவரு, அரு என்ற இந்த மூன்று நிலைகளையுங் கடந்தவன். இது அவனுடைய சிறப்பியல்பு.

இவ்வாறு எல்லாம் கடந்துள்ள இறைவன், பலதர அறிவும் பக்குவமும் படைத்த மக்கள் தன்னை அறிந்து அன்பு செய்து வழிபட்டு உய்யும் பொருட்டு, உருவத் திருமேனி நான்கு, அருவுருவத்திருமேனி ஒன்று, அருவத் திருமேனி நான்கு ஆகிய நவம்தரு திருமேனி தாங்கி அருள் புரிகின்றார். இதனை சொருபம், தடஸ்தம் என்று கூறுவர்.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.
-கந்தபுராணம்.

புறத்தே வழிபடும் சரியையாளர்க்கு உருவத்திருமேனியும்,
புறத்தேயும் அகத்தேயும் வழிபடும் கிரியை யாளர்க்கு
அருவுருவத் திருமேனியும்,

அகத்தே மட்டும் வழிபடும் யோகியர்க்கு அருவத் திருமேனியுங் கொண்டு இறைவன் இன்னருள் புரிகின்றான்.

இவ்வாறு முத்திற வடிவங்களை இறைவன் கொண்டாலும் அவன் அவற்றால் யாதொரு விகற்பமும் அடையாது அவற்றைக் கடந்து தன்னியல்பில் நிற்கின்றான். ஆதலின் உருவன்று அருவன்று என்று அடிகள் கூறுகிறார். மெய்ஞ் ஞானிகள் அப்பரம்பொருளை அறிவு வடிவாக வழிபடுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடைய பொது இயல்பு, சிறப்பு இயல்பு என்ற பாகுபாடுகளையும், ஆன்மாக்கள் பக்குவம் அடைவதற்காக அரும்பு, மலர், காய், கனி போன்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிபாட்டு முறைகளையும், பதமுத்தி, பரமுத்தி வேறுபாடுகளையும் ஒரு சிறிதும் அறியாதவர்கள் உருவ வழிபாட்டையே வெறுத்தும் மறுத்தும் பழிக்கின்றார்கள். உருவமாயிருக்கின்ற உலகில், உடலுருவில் வாழ்கின்ற உயிர்கள் உருவருவங்களிலன்றி வழிபட்டுப் பக்குவமடைய முடியாதென்ற உண்மையை உணர்கின்றார்களில்லை. அந்தோ! பரிதாபம்.

இறைவனது திருமேனி நிலைகளை வடலூர் வள்ளலார் வகுத்துக் கூறும் அழகிய அருட்பாடல் இதோ:

உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற
உருவருவம் ஒன்றும்இவை உடன்மே லுற்ற
ஒருநான்கும் இவைகடந்த ஒன்று மாய்அவ்
ஒன்றினடு வாய்நடுவுள் ஒன்றாய் நின்றே
இருநான்கும் அமைந்தவரை நான்கி னோடும்
எண்ணான்கின் மேலிருந்தும் இறையே! மாயைக்
கருநான்கும் பொருள்நான்கும் காட்டும் முக்கட்
கடவுளே! கடவுள்கள் கருதுந் தேவே.

இந்த ஒன்பது நிலைகளாயும், அவைகளைக் கடந்து நின்றும் விளங்கும் முருகன் ஒருவனையே பாடும் நியமம் கொண்ட அருணகிரிநாதர் அவன் அருள் பெற்று அவனையே குருநாதராகப் பெற்றவர் என்பதனை அடியில் வரும் தித்திக்குஞ் செந்தமிழ்ச் சிவஞானப் பாடலால் அறிக.

அருவமொரு நான்காகி உருவமொரு நான்காகி
அவையிரண்டும்
மருவியுள உருவருவம் ஒன்றாகி முத்திறமும்
தழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கும் அப்பாலாய் உள்ள பொருள் ஈதெனவே
பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்த அருள் அருணகிரி சேவடிப்போ(து)
உளத்துள் வைப்பாம். -தகராலய ரகசியம்.

இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் இருக்கின்றான்.

"உருவன்று அருவன்று" என்று கூறிய அடிகளார் இறுதிப் பாடலில் "உருவாய் அருவாய்" என்று கூறியருளினார். இந்தக் கருத்தை அப்பரடிகள் கூறும் அமுதப் பாடல்களாலும் அறிக.

மண்ணல்லை விண்ணல்லை வலயம் அல்லை
மலையல்லை கடலல்லை வாயு அல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியும் அல்லை
இரவல்லை பகலல்லை யாவும் அல்லை
பெண்ணல்லை ஆணல்லை பேடும் அல்லை
பிறிதல்லை ஆனாயும் பெரியாம் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வறிய ஒற்றியூர் உடைய கோவே

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணு மாகிப்
பிரளயத்துக் கப்பாலோர் எழுத்து மாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே.

**உளதன்றிலதன்று:-**

இறைவன் எல்லா இடங்களிலும் எப்பொருள்களிலும் நீக்கமின்றி உள்ளவனாய் இருக்கின்றான். இன்ப துன்பங்கட்கு வேறாகி இல்லாதவனாகத் திகழ்கின்றான்.

ஒரு நாடகம் நடக்கும் இடத்தில் விளக்கு ஒளி எங்கும் கடந்து உளது. நாடகத்தை நடத்துகின்றது. அது காண்கின்றது. நம்மை நாடகத்தைக் காணச் செய்கின்றது. சோகமான காட்சியில் நாம் அழுகின்றோம்; நகைச்சுவைக் காட்சியில் நாம் சிரிக்கின்றோம்; காதல் காட்சியில் நாம் மகிழ்கின்றோம். கொலைக் காட்சியில் நாம் அஞ்சுகின்றோம். விளக்கொளி அழுவதில்லை; சிரிப்பதில்லை; மகிழ்வதில்லை; அஞ்சுவதில்லை; சுக துக்கத்துக்கு அப்பாலாய் உள்ளது. உடனாகியும் இலதாகியும் விளக்கொளி இருப்பதுபோல் இறைவன் இவ்வுலகில் இருந்தும் இல்லாதவனாகத் திகழ்கின்றான். இவ்வுலகம் எங்கும் இறைவன் இருப்பான் என்னில் உலக சுகதுக்கம் தாக்காதோ? தாக்காது.. உவர்க் கடலில் பிறந்து வளர்ந்து உவர் நீரைக் குடித்து வாழ்கின்ற கடல் மீனில் உப்பு ஏறாது. அதுபோல் இறைவன் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கின்றான்.

இல்லதும் உள்ளதும் யாவையும் தானாகி
இல்லது உள்ளது மாய்அன்றாம் அண்ணலைச்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்
றொல்லை யுணர்ந்தால் உயிர்க்குயி ராமே.

-திருமந்திரம், 2335.

**இருள் ஒளியன்று:-**

இருளும் ஒளியும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள்கள். இருள் என்ற ஒரு பொருள் தனியே இல்லையென்றும், ஒளியின்மையே யிருளென்றும் கூறுவார் உளர். இருள் தனிப்பொருள் என்றே ஆன்றோர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இறைவன் புறச்சமயத்தவர்க்கு இருளாகவும் தன்னையடைந்த அகச்சமயத்தவர்க்கு ஒளியாகவும் இருக்கின்றான் என அடியில் வரும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தால் உணர்க.

"புறச்சமயத் தவர்க் கிருளாய் அகச்சமயத் தொளியாய்"

ஒரே அரசாங்கம் நல்லோர்க்குப் பாதுகாவல் தந்து உதவுகிறது. தீயோர்க்குத் தண்டனை தந்து ஒறுக்கின்றது. அதுபோல் எனவுணர்க.

இருளென் பதுவுமன்றி ஒளியென் பதுவுமன்றி
எவையுந் தனுளடங்க- ஒருமுத லாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளதென் பதுவுமன்றி இலதென் பதுவுமன்றி
உலகந் தொழ இருந்த, -தாயுமானார் வண்ணம்.

என நின்றதுவே:~

மேற்கூறிய அன்று அன்று என நின்ற பொருள் எதுவோ அதுவே முருகன் எனக்கூறி முடிக்கின்றது.

அது என்ற சொல் தத்வமசி என்ற மகாவாக்கியத்திலும் வருவதையறிக.

நின்ற அதுவே என்ற சொல் அகரம் தொக்கி, நின்றதுவே என வந்தது.

**கருத்துரை**

உரு அரு உளது இலது இருள் ஒளி என யாவையும் கடந்த தனிப்பொருளாகிய முருகனைக் குருவாக அடைந்தோர் அவனருளால் உண்மையை யுணர்வார்கள்.

(தொடரும்...

# கோயிலில் ஏன் காணிக்கை செலுத்த வேண்டும்

அருகாமையிலுள்ள கோயிலில் ஒரு காணிக்கை செலுத்த வேண்டும் என்று பாட்டி சொல்லும்போது இறைவனிடமிருந்து ஏதோ பெறுவதற்காக பாட்டி செய்யும் தந்திரம் என்று குழந்தைகள் கேலி செய்வது வழக்கம்.

ஆனால் இது கேலி செய்யத்தக்க வெறும் ஒரு தந்திரம் அல்ல. நம் முன்னோர்கள் இதையும் ஓர் ஆராதனையாகக் கருதியிருந்தனர். பொதுவாக ஒரு பால்பாயாசம், விளக்கு, பூ அல்லது விளக்கிற்கான எண்ணெய், முதலியவை காணிக்கையாகப் படைப்பது வழக்கம். ஒரு பொருத்தனை நேர்ந்து நிரந்தரம் பிரார்த்தனை செய்து இறைவனில் மையப்படுத்துவதன் விளைவாக பக்தனின் உள்ளத்தில் குடிகொள்ளும் ஜீவசக்தி உணர்வடைந்து நினைத்த வழிபாட்டை இறைவன் ஆசியால் நடத்த வல்லவனாகுகின்றான் என்று நம் முன்னோர்கள் பண்டைக்காலத்திலே புரிந்துகொண்டிருந்தனர்.

பூஜைக்குத் தேவையான பொருள்கள் தேவனுக்கு காணிக்கையாகப் படைப்பதனால் படைப்பவர் தானும் பூஜையின் பாகமாக மாறுகின்றார்.

இந்த விஷயத்தில் மேல் நாட்டினர்களின் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நிரந்தரமான திட நம்பிக்கையால் எதையும் சாதிக்கமுடியும், அதற்கான சக்தி மனிதனில் உண்டு என்ற உண்மை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வழிபாடுகள் வாயிலாக பக்தர்களுக்கு கிடைக்கப்பெறுவதும் இதுவே. நேர்ச்சைகள் நடத்தாதவர்களும் கோயிலில் பக்தியுடன் காணிக்கைகளைப் படைப்பதைக் காணலாம். இறைவன், அரசன், குரு, குடும்பத் தலைவன் என்பவர்களைக் காணச்செல்லும்போது வெறும்கையுடன் செல்லலாகாது என்ற பாரத நம்பிக்கை இன்றும் உறுதியாகச் செயல்படுகின்றது.

-ஓலைச்சுவடி-

# ஈஷா கிரியா

**சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்**

நாம் ,இப்போது ஈஷா கிரியா செய்வோம். இந்த தியானம் உங்களுக்கும் உங்கள் உடலுக்கும் மற்றும் உங்களுக்கும் உங்கள் மனதிற்கும் ஒரு இடைவெளியை ஏற்படுத்தும். நீங்கள் உங்கள் உடலுடனும், மனதுடனும் அடையாளப்படுத்திக் கொள்வதால்தான் வாழ்க்கையில் இத்தனை போராட்டமும். எல்லையுடைய உங்கள் உடலுடனும், மனதுடனும் நீங்கள் அடையாளம் கொள்ளாமல் இருந்தால் உங்களுக்குள் இருக்கும் படைப்பின் மூலத்துடன் நீங்கள் தொடர்பில் இருக்க முடியும். இது நடந்துவிட்டால் உங்கள் வாழ்க்கை நிறைந்த அருளுடனும், முயற்சி இல்லாமலும் நடக்கும். உடல் மற்றும் மனதுடன் இடைவெளி ஏற்படும்பொழுது அனைத்து குருமார்களின் அருளும், சத்குருவின் அருளும் உங்களுடன் இருக்கும்.

**குறிப்புகள்:**



கண்களை மூடி, கால்களைக் குறுக்காக வைத்து கிழக்கே பார்த்து அமரவும். உள்ளங்கைகளை மேல் முகமாக வைத்து, தொடைகளின் மேல் வைக்கவும். தலை மேல் முகமாக இருக்க வேண்டும். உங்கள் புருவ மத்தியில் லேசான கவனம் இருக்கவேண்டும்.

இந்தத் தியானம் மூன்று நிலைகளில் நடக்கும்.

**நிலை ஒன்று:**

உள்மூச்சும் வெளிமூச்சும் மென்மையாக, மெதுவாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு உள்மூச்சின்போதும் மனதளவில், "நான் இந்த உடல் அல்ல" எனக் கூறி, அந்த எண்ணம் இருக்கும் நேரம் வரை உள்மூச்சு செய்யவும்.

ஒவ்வொரு வெளிமூச்சின்போதும் மனதளவில், "நான் இந்த மனமும் அல்ல" எனக்கூறி, அந்த எண்ணம் இருக்கும் நேரம்வரை வெளிமூச்சு செய்யவும்.

மூச்சு இந்த வரைபடத்தைப்போன்று இருக்கவேண்டும்.

இதை ஏழிலிருந்து பதினொரு நிமிடங்கள் வரை செய்ய வேண்டும். (தங்கள் முன்னால் கடிகாரம் வைத்துக் கொள்ளலாம்)

நிலை இரண்டு:

வாய் முழுமையாக திறந்து "ஆ" சப்தம் உச்சரிக்கவும். இந்த சப்தம் அடிவயிற்றிலிருந்து எழவேண்டும். சப்தமாக சொல்ல வேண்டிய அவசியமில்லை, ஆனால் அதிர்வு உணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு சப்தமாக செய்யவேண்டும். வாய் முழுமையாக திறந்து, மூச்சு முழுவதுமாக வெளியேறும் வரை உச்சரிக்கவும். இந்த சப்தத்தை 7முறை உச்சரிக்கவும்.

**நிலை மூன்று:**

முகத்தை மேல் முகமாக வைத்து, புருவ மத்தியில் கவனம் செலுத்தவும். இந்த நிலையில் ஐந்திலிருந்து ஆறு நிமிடங்கள் வரை இருக்கவும்.

இவையனைத்தும் சேர்ந்து மொத்தம் பன்னிரண்டிலிருந்து பதினெட்டு நிமிடம் ஆகும். தேவையிருந்தால் இன்னும் சற்று அதிக நேரம் அமரலாம்.

உங்கள் உடலளவிலோ அல்லது மனதளவிலோ எது நடந்தாலும் பரவாயில்லை, நீங்கள் சும்மா அமருங்கள். உங்கள் உடலளவிலும் மனதளவிலும் நடக்கும் எந்த செயலிலும் பங்குபெற வேண்டாம்.

இந்தப் பயிற்சி செய்யும்போது இடையே நிறுத்தக்கூடாது. அப்படி நிறுத்தினால் இந்தச் செயல்முறையினால் சக்திநிலையில் ஏற்படும் மறுசீரமைப்பில் பாதிப்பு ஏற்படும்.

யார் வேண்டுமானாலும் இந்தப் பயிற்சியை செய்ய முடியும். அதன்மூலம் கிடைக்கும் பலன்களையும் அனுபவிக்கலாம். சும்மா, இதன் குறிப்புகளை பின்பற்ற வேண்டும், அவ்வளவுதான். எந்தக் குறிப்பையும் மாற்றக் கூடாது. இந்த முத்ரா மிக எளிமையானது, ஆனால் மிகவும் சக்தி வாய்ந்தது.

"நான் இந்த உடலல்ல, நான் மனமுமல்ல" என்பதை ஒரு நாளின் எப்பகுதியில் வேண்டுமானாலும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

நீங்கள் இந்தப் பயிற்சியை 48 நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டுமுறை, ஒவ்வொரு முறையும் பன்னிரண்டு நிமிடங்கள் வீதம், ஒரு மண்டலம், அதாவது 48 நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். அல்லது ஒரு நாளைக்கு ஒருமுறை 90 நாட்களுக்குத் தொடர்ந்து செய்துவரவேண்டும். இதில் உறுதியுடன் இருக்க வேண்டும். இது குருவிற்கு நீங்கள் அளிக்கக்கூடிய குருதட்சிணையாகும்.

**தலை மேல்நோக்கி இருப்பதினால் கிடைக்கும் பலன்கள்:**

உங்கள் தலையை மேல்நோக்கி வைத்திருப்பது வானில் மிதந்துகொண்டிருக்கும் கடவுளைப் பார்ப்பதற்கோ அல்லது ஆகாயத்தில் இருக்கும் எதையோ பார்ப்பதற்கோ அல்ல. உங்கள் முகம் மேல்முகமாக இருக்கையில் உங்கள் உடலமைப்பு மேல்நோக்கி இருக்கையில் சில செயல்கள் உங்களுள் நிகழத் தொடங்கும். உங்கள் உடலமைப்பு உள்வாங்கும் திறனை அடைகிறது. இது உங்கள் கற்பனையை காற்றில் மிதக்கவிடுவதற்காக அல்ல. இது ஜன்னலைத் திறப்பதைப் போன்றது. குருவின் அருளைப்பெற திறந்த நிலையில் இருப்பது. நீங்கள் எதற்கும் முன்வருபவராக இருந்து, திறந்த நிலையில் இருந்தால் உங்கள் உடல் இயல்பாகவே மேல் நோக்கி வளையும்.

இந்தத் தியானத்தின் நோக்கமே, உங்களுக்கும் உங்கள் மனதிற்கும் ஒரு இடைவெளி உருவாக்குவதுதான். இந்த உலகிலுள்ள பாதிப்புகள் எல்லாம் எங்கேயிருக்கிறது? உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில்தான். உங்கள் மனதிலிருந்து உங்களைத் தூரப்படுத்திக் கொண்டீர்கள் என்றால் பாதிப்புகள் உங்களைத் தொட முடியுமா? பாதிப்புகள் அங்கேயே முடிந்து விடுகிறது. நீங்கள் இங்கு அமர்ந்திருக்கும்போதே உங்களுக்கும் உங்கள் மனதிற்கும் ஒரு இடைவெளி உண்டாகிறது. ஆனால் நீங்கள் கண்களைத் திறந்த உடனேயே மனதில் சிக்கிக்கொள்கிறீர்கள்.

நீங்கள் தினமும் தியானம் செய்து வந்தால், ஒருநாள் நீங்கள் கண் திறந்து பார்க்கையில் நீங்கள் இங்கேயும், உங்கள் மனம் அங்கேயும் இருக்கும். அப்போது உங்கள் பாதிப்புகள் முடிவுக்கு வந்து விடுகின்றன. நீங்கள் இங்கிருந்தாலும் சரி, வேறு எங்கிருந்தாலும் சரி, அப்போதே உங்கள் பாதிப்புகளுக்கு முடிவு வந்துவிடுகின்றன. அப்படியென்றால் உங்களுடைய கர்ம மூட்டைகள் தள்ளிவைக்கப்படுகிறது என்று அர்த்தம். இப்போது அந்த கர்ம பதிவுகள் உங்கள் மேல் தாக்கத்தை ஏற்படுத்த இயலாது. இப்படி இருக்கையில் வாழ்வே ஒரு பெரிய வாய்ப்பாக அமையும்.

இந்த ஷணத்தில் தங்களுடைய இருப்பில் கடந்த காலம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாததால், ஒவ்வொரு மூச்சும் அளப்பரிய வாய்ப்பாக அமையும். நீங்கள் இங்கு அமர்ந்தால் முழுமையான உயிராக இருப்பீர்கள்.

மந்திரம் உச்சரிப்பதால் கிடைக்கும் பலன்கள்:

நீங்கள் "ஆ" சப்தம் உச்சரிக்கும்போது, உங்கள் உடலின் பராமரிப்பு மையம் தூண்டப்படுகிறது. இதனை மணிபூரகா என்கிறோம். மணிபூரகா தொப்புளுக்கு மூன்று நான்கு அங்குலம் கீழே அமைந்துள்ளது. இது விஷ்ணு ஸ்தானம்.

விஷ்ணுவும் லக்ஷ்மியும் எப்பொழுதும் தொடர்புபடுத்தப்படுகிறார்கள். பராமரிப்பவரும் பணம், பொருள் வழங்கும் தேவியும் இணைக்கப்பட்டிருக்கின்றனர். எங்கு பராமரிப்பு இல்லையோ அங்கு பணமும் இருப்பதில்லை, அப்படித்தானே?

விஷ்ணுவினுடைய ஸ்தானம்தான் இந்தப் பராமரிப்பு மையம். நீங்கள் உங்கள் தாயின் கருவில் இருந்தபோது உங்களைப் பராமரிக்கும் குழாய் இவ்விடத்தில்தான் இருந்தது. தற்போது அந்த பராமரிப்புக் குழாய் வெட்டப்பட்டு விட்டது. எனினும் அந்தப் பராமரிப்பு மையம் உங்கள் தொப்புளில்தான் உள்ளது. நீங்கள் "ஆ" சப்தம் உச்சரிக்கும்போது, உங்கள் தொப்புளிலிருந்து முக்கால் அங்குலத்திற்குக் கீழே அதிர்வு மேலெழும்பி உங்கள் உடல் முழுவதும் பரவுவதைக் கவனிக்க முடியும்.

"ஆ" சப்தத்தினால் ஏற்படும் அதிர்வு ஒன்று மட்டுமே உடல் முழுவதும் பரவுகிறது, ஏனென்றால் உடலில், இவ்வோரிடத்தில் மட்டுமே 72,000 நாடிகள் கூடிப்பிரிகின்றன. நாடி என்பது சக்தியைக் கடத்தும் பாதையாகும். 72,000 நாடிகளும் மணிபூரகா சக்கரத்தில் கூடிப் பிரிகின்றன. உடலின் இந்தவொரு பகுதியில் மட்டுமே இச்செயல் நடக்கிறது.

நீங்கள் "ஆ" சப்தத்தை உச்சரித்தால் அதனால் ஏற்படும் அதிர்வு உடல் முழுவதும் பரவுகிறது. இந்த அதிர்வு உங்கள் பராமரிப்பு மையத்தை பேணுவதற்கும் செப்பனிடுவதற்கும் உதவும். இந்த சக்கரத்தைத் தூண்டுவதன் மூலம் ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் வளத்தைப் பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# பரிபாடல் பகரும் பழுத்த பத்திப் பிரார்த்தனை - 10

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

பரிபாடலில் பதினைந்தாம் பாடல் கடவுள் வாழ்த்து. அப்பாடலைப் பாடியவர் இளம்பெரு வழுதியார் என்ற நல்லிசைப் புலவர். இசை வகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனார் என்பார். பண்ணோ திறம்.

அறிவின் எல்லையால் அறிதற் கரிதாகிய புகழுடன் பொலிந்து, நிலத்தின் எல்லையைத் தாங்கும் நிலைமையின் நின்று நீங்காத சக்கரவாளம் முதலாக நல்லிசைப் புலவர் நவின்ற நெடிய மலைகள் பலவுள என்பர். அம்மலைகள் பற்பல உள்ளனவாயினும் நிறைபயன் ஒருங்குடன் உதவுவ குன்றவை சிலவே!

"அச்சில மலைகளுள்ளும் தெய்வங்கள் தாமே விரும்பும் மேகங்கள் படியும் சிகரங்களையுடைய குலமலைகள் சிலவே சிறப்புடையனவாகும்.

அக்குல வரை சிலவற்றினுள்ளும் கடலும் கானலும் நிறம் வேறுபட்டாற் போலக் கருமையும் வெண்மையுமாகிய நிறத்தினையும் சொல்லும் பொருளும் போலத் தம்முள் வேறுபடாத தொழிலினையும் உடைய எல்லாப் பொருளும் தாமேயாகிய மாயோனும் பல தேவனும் ஆகிய இருவரையும் தாங்கும் நீண்ட புகழால் உயர்ந்த இருங்குன்றம் சிறந்தது.

மேல்நிலை உலகத்தில் மணங் கமழும் துளசிமாலை அணிந்த எம்பெருமான் திருவருள் பாலித்தபொழுது ஏறுதலன்றி, அருள் புரியாவிடத்து உயிர்கள் தம் முயற்சியால் ஏறுதல் எளிதன்று.!

அங்ஙனம் அடைதற்கரிய மேல்நிலை உலகினை எளிதில் பெற உரிமை நல்கும் சிறப்புடைய திருமாலிருங்குன்றை உலகத்தவரெல்லாம் கேட்குமாறு ஏத்தித் தொழக்கடவோம்.

"நாறிணர்த் துழாயோ னல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்
அரிதிற் பெறு துறக்க மாலிருங் குன்றம்
எளிதிற் பெறலுரிமை ஏத்துகஞ் சிலம்ப

(பாட்டு வரியெண்- 15-18)

ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேடனுடைய அவதாரமென நம்பி மூத்த பிரானுடைய திருமார்பில் அணிந்த, வெண் கடம்பின் மலரால் தொடுத்த மாலை போல மாட்சிமை உண்டாகக் காணப்பட்டு, அசையா நின்ற அருவி ஆரவாரித்து இழியும்.....

மலையாற்றினை அழகுசெய்து அழகு அமைந்த திரு என்னும் சொல்லோடும் சோலை என்னும் சொல்லோடும் மாலிருங் குன்றம் என்னும் சொல் தொடர் மொழியாகிய திருமாலிருஞ் சோலைமலை என்னும் பெயரின் பெருமை நன்றாக இந்நிலவுலகில் நின்று நிலாவுகின்றது. மகளிரும் மைந்தரும் தாம் ஒருவரை ஒருவர் விரும்புதல் காரணமாக காமத்தை விதைத்து அதன் பயனை விளைவிக்கும் கூதிர் யாமத்தைத் தனக்கு இயல்பாகவுடைய வியக்கத் தக்கது இருங்குன்றம் நிலையான குளிர்ச்சியுடைய இளவெயில் தன்னைச் சூழாநிற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிடை இருள் வளர்தலை ஒத்துப் பொன்னாடை அணிந்து விளங்குபவனாகிய மாயோன் நம்பி மூத்தபிரானோடு கூடி அமர்ந்து நிற்கும்.

அத்திருக்கோலத்தை மாந்தர்களே எல்லோரும் மனத்தில் நினையுங்கள்!!

"....... வையிருங் குன்றத்து மன்புனல்
இளவெயில் வளாவ்விருள் வளர்வெனப்
புன்புனை உடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே
நினைமின் மாந்தீர்...."

(பாட்டு வரியெண் 26-29)

"திருமாலிருஞ் சோலை மலைச் சிறப்பைக் கேளுங்கள்! மலையிலுள்ள சுனையிடமெல்லாம் நறுமணம் கமழும். அழகிய நீலோற்பலம் மலரும். சுனைகளைச் சுற்றிநிற்கும் அசோக மரக்கிளைகள் எல்லாம் மலர்தலால் காய்களும் பழங்களும் நிறம் வேறுபடும். வேங்கை மரம் கொத்தாக அரும்புகள் மலர்தலால் மலையும் திருமாலை ஒத்த காட்சிக்கினிய தோற்றம் உடையதாகும்.

"கடல் சூழ்ந்த பூமியில் இருங்குன்று என்னும் பெயர் பரந்தது. அம்மலை- பழமையான புகழையும் உடைத்து. அம்மலை தன்னைக் கண்ட மாத்திரத்தில் காண்பார் தம் மயக்கத்தைப் போக்குகின்றதோர் வழிபடுங் கடவுளாகும்.

"அதனால் அம்மலைக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் திருமாலை நேரிற் தரிசித்து வழிபட மாட்டாதீர் நும்மிடத்தில் இருந்தவாறே நெடுந் தூரம் தோன்றும் அம்மலையையேனும் பார்த்து வணங்குங்கள்!!

"குட்டியாலே தழுவப்பட்ட குரங்கு சிகரம் விட்டுச் சிகரம் தாவும். அரும்புகள் நெருங்கின முல்லை மகளிரின் கற்பு நிகழ்ச்சியைக் காட்டும். மரக்கிளைகள் தோறும் நீலமணிகள் போலும் மயில்கள் அகவும். குயில்கள் குருக்கத்தியின் இலைகள் உதிரக்கூவும். குழலும் தாளமும் இயம்ப மிடற்றுப் பாடல் முழவு இசை சென்று எதிர்ந்தாற்போல- நேர் நின்று போர் செய்து அவுணரைக் கொன்றவனது நிறத்தையுடைய குன்றத்தில் முழைஞ்சில் முழங்கும் எதிரொலி ஓயாது.

"அம்மலையை நுங்கள் மனைவியரோடும் நும்மைப் பெற்ற இருமுது குரவோடும் குழவிகளோடும் நும்பால் அன்புடைய சுற்றத்தாரோடும் தெய்வமாக மதித்து அம்மலை நிற்கும் திசையை நோக்கிக் கும்பிட்டுச் செல்லுங்கள்!

"தைய லவரொடுந் தந்தா ரவரொடுந்
கைம்மக வோடுங் காத லவரொடும்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் செல்மின்

(பாட்டு வரியெண் 46-48)

"தனது உந்தித் தாமரையையே ஒக்கும் திருக்கண்ணன்! மேக இருள் நீலமணி போன்ற திருமேனியன். எல்லா உலகத்திலும் வெளிப்படுவான்! அவ்வவ்விடத்து உயிர்க் கூட்டங்களின் வருத்தும் பிறவித் துயரை நீக்குவான்! அன்புபட்டு திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தருளியுள்ளான்! ஆதலால்.....

"புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்
வெளவற் காரிருள் மயங்குமணி மேனியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வயின் உலகத்துந் தோன்றி அவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்
அன்பது மேஎ இருங்குன் றத்தான்

(பாட்டுவரியெண் 49-53)

"தேன் துளிக்கும் துளவ மாலையுடையாய்! கரியமலை ஒத்தனை! மிக்க ஒளியினாய்! ஒற்றைக் குழையினாய்! கருடக் கொடியினாய்! கலப்பைப் படையாய்! தண்டாயுதம் தாங்கினாய்! சங்கினோடு ஆழிப்படையினாய்! வில் அம்பினாய்! பாராவளையினை யுடையாய்!

"சீரும் அச்சப்படும் வேதம் நன்மையுண்டாதலை விரும்பி உரைத்ததாகலின் யாமும் உள்ளத்தால் அறிந்தவற்றைக் கூட்டிக் கூறினோம்.

"பெரும் புகழுடைய நம்பி மூத்தபிரானும் வாசுதேவனுமாகிய இறைவர் இருவரையும் வணங்கி திருமாலினாற் சோலைமலை அடியில் உறைந்து வாழும் பேறு பெறுமாறு அருள்புரிக என்று வேண்டிக்கொள்வோம்.

"நலம்புரிஇ அஞ்சீர் நாம வாய்மொழி
இதுவென உரைத்தனெம் உள்ளமாந் திசைத்திறை
இருங்குன்றத் தடியுறை இயைகெனப்
பெரும்பெயர் இருவரைப் பரவுதுந் தொழுதே.

(பாட்டு வரியெண் 63-66)

(முற்றும்)

---

## பாபாவின் பொன்மொழிகள்

**முதலில் பகவான் தூரத்தில் நின்று நம்முடைய முயற்சிகளை கவனிக்கிறார்; மாணவன் தன் கேள்விகளுக்கு விடையெழுதும்போது விலகி நின்று கவனிக்கும் ஆசிரியரைப்போல, போகத்தில் (கேளிக்கையில்) நாட்டத்தை விட்டுவிட்டு, சேவை செய்ய ஆரம்பிக்கும்போது, நம்மை உற்சாகப் படுத்துவதற்காக பகவான் பக்கத்தில் வருகிறார். அவர் சூரிய நாராயணனைப் போல, தாழிட்டிருக்கும் கதவுக்கு வெளியே காத்திருக்கிறார். எஜமானனுடைய அதிகாரங்கள் பற்றியும், தன் வரம்புபற்றியும் அறிந்து, தன் வரவை அறிவிக்காமல், கதவைக்கூடத் தட்டாமல் கதவை எப்போது அவர் திறப்பார் என்று மௌனமாகக் காத்திருக்கும் ஒரு வேலையாளைப்போல, கதவைத் திறக்கவேண்டியதுதான். உடனேயே சூரியனின் ஒளி அறையின் உட்புகுந்து இருட்டை வெளியேற்றுகிறது. பகவானுடைய உதவி கோரப்பட்டால் உதவி செய்யத் தயாராக உடனே அவன் அங்கே பிரசன்னமாகிறான். பகவானை வேண்டிக் கூப்பிடும் புத்தி அவனை நினைத்திருக்கும் ஞானம் இவையே நமக்கு வேண்டியது.**

**உலகம் என்பது சூன்யக் கனவு அல்ல. அது ஒரு குறிக்கோள் உள்ள அழகான கதைத்திட்டம். ப்ளாட் உள்ள நாடகம். உலகமே இறைவனைக் காண உதவுகிறது. உலக இயற்கையின் ஒழுங்கான போக்கு கம்பீரம், அழகு இவற்றில் இறைவனைக் காணுங்கள். மனித இயற்கையின் அன்பு, துறவு, சீலம், நம்பிக்கை இவற்றிலும் அவனைக் காணுங்கள்.**

**-கோபுர தரிசனம்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் தந்த பெண் புலவர் விசாலாட்சி மாதாஜி அம்மையார்

திரு செ. ரவிசாந் அவர்கள்

சிவபூமி எனப்பெயர் பெற்ற ஈழத் திருநாட்டின் வடக்கே செந்தமிழும் சைவ சமயமும் செழித்தோங்கும் சிற்றூர்களில் ஒன்றான குப்பிளான் கிராமத்தை "ஈழத்தின் திருப்பரங்குன்றம்" எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் விதந்து போற்றுவார். இங்கே காலத்திற்குக் காலம் பல கல்விமான்களும் சைவத் தமிழ்ப் பெரியார்களும் தோன்றி நமது ஊரின் பெருமையை உலகறியச் செய்த வண்ணமிருக்கிறார்கள். அந்த வகையில் நாவலரின் மாணவ பரம்பரை சித்தாந்த வித்தகர் செந்திநாதையர் தொடக்கம் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் வரை இவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இவர்களின் வழியில் தற்போது ஆன்மீக அன்னையாக அருள்ஞானத் துறவியாக எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் சைவ நன்மணி புலவர்மணி ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள். 1931ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் நாள் சீனியர் சின்னையா, உமையம்மை தம்பதிக்கு செல்வப் புதல்வியாக பிறந்த விசாலாட்சி அம்மையார் தனது ஆரம்பக் கல்வியைக் குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலும், இடைக் கல்வியை புன்னாலைக்கட்டுவன் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பெற்றாள். இதன் பின் மிகுந்த வறுமையின் மத்தியில் ஏழாலை அரசினர் பாடசாலையில் உயர் கல்வி கற்று தமிழ் S.S.C (சிரேஷ்ட தராதரம்) திறமைச் சித்தி அடைந்தார். தொடர்ந்து இதே பாடசாலையில் மாணவ ஆசிரியராக கடமையாற்றினார்.



1955இல் ஈழத்துச் சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகளைத் தனது மானசீகக் குருவாக அடைந்து உபதேசம் பெற்றாள். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் அப்போதைய அதிபர் சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம் அவர்களிடம் சைவசித்தாந்தம் பயின்ற அம்மையார் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றாள். 1960இல் தம்பியாரின் ஆதரவுடன் தென்னிந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்புலவர் பயிற்சி முடித்த மாதாஜி அம்மையார் நன்னூல், சங்க இலக்கியங்கள், இதிகாச புராணங்கள், தொல்காப்பியம் முதலானவற்றை ஐயந்திரிபரக் கற்றுத் தேறினார். இதன்பின் சிதம்பரம் கவியோகி சுத்தானந்த பாரதியாரைத் தரிசித்தார். தொடர்ந்து வடலூர் இராமலிங்க வள்ளலாரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசமயதீட்சை பெற்று "மாதாஜி" ஆயினார். இதன்பின் தூய துறவறத்தில் தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தார்.

1964இல் இலங்கை திரும்பிய மாதாஜி அவர்கள் ஏழாலை ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் அழைப்பின்பேரில் மலையகம் முழுவதும் சைவப் பிரசங்கம் மூலம் ஆன்மீக நெறி பரப்பினார். 1965இல் திருக்கேதீஸ்வரத் திருவாசக மடத்தில் திரு வெம்பாவைக் காலத்தில் இடம்பெற்ற சிவபூசை மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இலங்கை, இந்தியா சைவத்தமிழ்ப் பெரியார்கள் பலர் கலந்து கொண்ட இவ்விழாவில் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியை முதன் முதலில் சந்தித்தார். இந்தச் சந்திப்பு காலப் போக்கில் இவர்களிடையே ஆழமான நட்புற வாக மலர்ந்தது.

இதே காலப்பகுதியில் மலையக நாவலப்பிட்டிப் பகுதியில் தாமரை வல்லித் தோட்டத்திலும், மாசிவலைத் தோட்டத்திலும் சிறப்பான வகையில் ஆசிரியப் பணியாற்றினார். அப்போது வறுமைக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காய் தன்னாலான பொருளா தார உதவிகளை வழங்கி ஏழைகளின் சிரிப் பில் இறைவனைக் கண்டார்.

1972இல் கிளிநொச்சி குருகுலம் சென்று அங்குள்ள மாணவிகளின் விடுதி மேற்பார்வையாளராக வேதனமின்றிக் கடமை யாற்றினார். அக்காலங்களில் கிளிநொச்சி, வவுனியா முதலான மாவட்டங்களில் சைவப் பிரசாரத்தில் ஈடுபட்டார். 1975இல் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய சிறப்புத் தமிழ் சமய ஆசானாக நியமனம் பெற்றார். 1986இல் யாழ்ப்பாணம் ஊரெழு கணேச வித்தியால யத்தில் கலாநிதி துர்க்கா துரந்தரி அவர் களுடன் ஆசிரியப் பணிபுரிந்தார்.

1995இல் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் கொழும்பிலிருந்தபடி, சைவம், தமிழ் சார்பான நூல்களை யாத்தார். இக்காலத்தில் இந்து கலாசார அமைச்சின் அழைப்பில் இலங்கை வந்திருந்த தவத்திரு கிருபானந்த வாரியார் சுவாமிகளிடம் ஆசீர்வாதமும் விரு தும் பெற்றமை இவரது வாழ்வில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள்.

1997இல் மீண்டும் இந்தியாவின் திருச்சி சென்ற மாதாஜி அம்மா அவர்கள் அங்குள்ள திருஈங்கோய் மலை ஸ்ரீலலிதா சமாஜத்தில் ஸ்ரீ வித்தியாமோகினி அவர் களிடம் சந்நியாசம் பெற்று ஆன்மீக ஞானி யானார். 2003இல் சிவத்தமிழ்ச் செல்வியின் அழைப்பின் பேரில் துர்க்காபுரம் சென்று அங்குள்ள மகளிர் இல்லச் சிறார்களுக்கு சமயம் தொடர்பான கல்வி புகட்டியதோடு, சமய சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். இக் காலப் பகுதியில் கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளர் கலாநிதி தமிழ்வேள் அவர்களால் ஈழத்துப் பூதந்தேவனார் விழாவில் வைத்து "முதுபெரும் புலவர்" என்னும் சிறப்புப் பட்டம் கைவரப் பெற்றார்.

2008இல் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா வின் மறைவுக்குப்பின் மீண்டும் சொந்த மண்ணான குப்பிளானில் கால்பதித்தார். இக் காலப் பகுதியில் தனிச் சைவக்கிராமமான குப்பிளானில் பிரமத ஊடுருவலைக் கண்டு மனம் வெதும்பினார். குப்பிளான் சைவ சித் தாந்த கலாநிதி காசிவாசி செந்தில்நாதையா திருவுருவச் சிலையின் அருகே அமைந்த அருளோங்கு சொக்கர்வளவுசோதி விநாயகர் ஆலய மணிமண்டபத்தில் தங்கியிருந்து முதுமைப் பிணியையும் பொருட்படுத்தாது தற்போது தம்மாலான சமய சமூகப்பணிகளை நிறைவேற்றி வருகிறார்.

இதுவரை ஏறக்குறைய முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ள மாதாஜி அம்மா அவர்கள் இன்னும் சில நூல்களை எழுதித் தம்வசம் வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவற்றை அச்சேற்றுவதற்குப் போதிய பொருளாதார வசதியில்லாது திண்டாடுகிறார். இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்களில் சிறுவர் ஞானத்தமிழ் நாடகம், சிவவிரத மான்மியக் கதைகள், சிவராத்திரி புராணபடனம், திருக்கேதீஸ்வரம்- சிறுகுறிப்பு, கந்தபுராண அமுதம், நல்லூர்க் கந்தன் நான்மணிக்கோவை, குப்பிளான் சோதி விநாயகர் கவசமணி மாலை முதலானவை குறிப்பிடத்தக்கவை. 1965இல் தொடங்கி அண்மைக்காலம்வரை இவரது கட்டுரைகள் பல வீரகேசரி, ஈழநாடு, தினகரன், தினபதி, வலம்புரி, தினக்குரல் முதலான பத்திரிகை களிலும், ஆத்மஜோதி, இலண்டன், கலசம், கோபுரம், இந்துசாதனம் போன்ற சஞ்சிகை களிலும் வெளியாகி இந்துமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

"நீறில்லா நெற்றி பாழ்" என்ற கூற்றிற் கமைய சைவ சமய ஆசார ஒழுக்க நெறி களைத் தவறாது கடைப்பிடித்து வாழும் புலவர் மாதாஜி அம்மையார் ஒரு நடமாடும் ஆன்மீகச் சுரங்கம் மட்டுமல்ல- இன்றைய என்போன்ற இளைய தலைமுறையினருக்கு நல்லதொரு வழிகாட்டியுமாவார். இவரது கனவு தான் வாழும் காலத்தில் மாணவர்களின் அறிவு, ஆற்றல் மேம்பாட்டுக்காக தான் பிறந்த குப்பிளான் மண்ணில் நவீனமயப்படுத்தப்பட்ட விசாலமானதோர் நூலகம் அமைக்கவேண்டும் என்பதே.

கடந்த 12.11.2011 அன்று தனது எண்பதாவது அகவையைப் பூர்த்தி செய்த ஆன்மீக அன்னை மாதாஜியின் சமய, சமூக சேவைகளைப் பாராட்டி 04.02.2012 அன்று குப்பிளான் ஊரவர்கள் முத்துவிழாவும், முத்து விழாச் சிறப்புமலர் வெளியீடும் நிகழ்த்தியமை வரவேற்புக்குரியது.

முதுபெரும் ஈழத்துப் பெண் புலவர் மாதாஜி அம்மையார் இன்னும் பல ஆண்டுகள் நோயில்லாமல் வாழ்ந்து சைவத்தமிழ் உலகுக் குத் தம்மாலான ஆன்மீகத் தொண்டாற்ற மனமாரப் பிரார்த்திப்போம்.

## கேள்வி- பதில்

*** சிவன் கோயிலில் வழிபடும்போது நவக்கிரகங்களை வழிபட்டு சிவனை வணங்குவதா? சிவனை வணங்கிவிட்டு நவக்கிரகம் சுற்றுவதா? எது சரி?**

சிவன் கோயில் என்றால் அந்தக் கோயிலின் பிரதான தேவதை சிவன்தான். நவக்கிரகம் என்பது பரிவார தேவதை. பிரதான மூர்த்தியை முதலில் பார்த்து விடுகிறோம். அதன்பிறகு பிரதட்சணம் செய்யும் வழியில் உள்ள பரிவார தேவதைகளை வணங்குகிறோம். இவர் முன்னால்- அவர் பின்னால் என்பது இல்லை. மூலவரைத்தான் முதலில் தரிசனம் செய்யவேண்டும். நவக்கிரகத்தை வணங்கிவிட்டுத்தான் அங்கே போவேன் என்று வைத்துக் கொள்ளாதீர்கள். சிந்தனையில் பாகுபாடு வந்தால் ஆராதனம் கெட்டுவிடும்.

நாம் ஒரு பொருளை வாங்கக் கடைக்குப் போகிறோம். போனதும் முதற் காரியமாக அதை முதலில் வாங்கி விடுகிறோம். பின்பு அங்கே கண்ணில் படும் வேறு பொருட்களையும் வாங்குகிறோம். அதுபோல்த்தான் இதுவும் மூலவர் என்பவர் முதலில் வந்தவர். பரிவார தேவதைகள் பிறகு வந்தவர்கள். முன்னவருக்கு முதல் வணக்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வாசகர் போட்டியில் வெற்றிபெற்ற வாசகர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாசிமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்ற வாசகர்களின் நிகழ்வு.




கடின உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

தொடர்ச்சி...



## 04. கண்மணி ரமணன்

டாக்டர் கிருஸ்ணமூர்த்தி ஐயரின் மனைவி சுப்பலஷ்மி பகவானின் அதிதீவிர பக்தை. கல்யாணமான புதிதில் தண்டராம்பட்டு கிராமத்தில் வசித்த காலத்தில் டாக்டர் தன் இளம் மனைவியைத் தனியாக விட்டுவிட்டு அடிக்கடி பகவானிடம் வந்துவிடுவார். தன் கணவன் சந்நியாசியாகி விடுவாரோ என்று மிக பயந்திருந்த சுப்பலஷ்மியின் கனவில் ஒருநாள் பகவான் தோன்றி, அவளருகில் அமர்ந்துகொண்டு, "பயப்படாதே! அவர் வழியிலே அவரைப் போகவிடு. நான் அவருடன் இருக்கிறேன். எல்லாக் கவலைகளையும் உதறிவிடு. நான் எப்போதும் உன் கூடவே இருப்பேன்" என்று சொல்லி அவள் தலையில் கையை வைத்து ஆசி வழங்கினார். கனவு கலைந்து கண் விழித்த அப்பெண்மணி பயம் நீங்கிக் குதூகலமடைந்தாள். டாக்டர் கிருஸ்ணமூர்த்தி ஐயர் மறுநாள் இக்கனவை பகவானிடம் தெரிவித்ததும், பகவான் கனிவுடன் புன்னகை புரிந்தார்.

பகவானின் பேரருளை விளக்கும் மற்றொரு அழகான நிகழ்ச்சியை சுப்பலஷ்மி சொன்னார். "ஒருநாள் சேஷாத்ரி சுவாமியின் அலங்கரித்த படத்தை தெருவில் ஊர்வலமாக எடுத்துப்போவதைப் பார்த்த எனக்கு பகவானுடைய ஒரு பெரிய படத்துக்கு அதே மாதிரி அலங்கரித்து அழகு பார்க்கவேண்டுமென்று பேராவல் தோன்றியது. ஊர்வலத்தைப் பார்த்துவிட்டு உள்ளே போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்ட சிறிது நேரத்தில் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுக் கதவைத் திறந்து பார்த்த எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. பெரிய சட்டம்போட்ட, பகவானின் படத்துடன் ஒரு ஆள் நின்றிருந்தான். "திருப்பத்தூரிலிருந்து வருகிறேன். நான் ஒரு 'எலக்ரீஷியன்'. இந்தப் படத்தை இங்கே கொடுக்கும்படி எனக்கு உத்தரவு. நான் போய்வருகிறேன்" என்று சொல்லி படத்தைக் கொடுத்துவிட்டு அவன் போய்விட்டான். பரமானந்தத்துடன் படத்தை அலங்கரித்தேன். பள்ளியிலிருந்து திரும்பிய என் குழந்தைகள், "ஆகா! பகவான் நம் வீட்டிற்கு வந்துவிட்டது" என்று சந்தோஷத்தில் துள்ளினர். என் கணவர் வீடு திரும்பியதும் அதையே அவரிடமும் சொன்னார்கள். அவர்தான் கொடுத்தனுப்பியதாக நான் நினைத்தேன் என்று நான் சொன்னதும் அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது அந்த ஆள் ஆச்ரமத்திலிருந்து திரும்பி வந்தான். அவன் சொன்ன விவரம் மிக அதிசயமாக, நம்பமுடியாத அற்புதமாக இருந்தது.

"ஆச்ரமத்தில் 'சாட்விக்' அறையில் சில மின்சார (எலக்ரிக்) வேலைகளைச் செய்து கொடுத்தேன். அதற்காக அவர் தரவந்த பணத்திற்குப் பதிலாக இந்தப் படத்தை ஆசையாகக் கேட்டுப்பெற்றுக் கொண்டேன்.' இதை என் வீட்டில் பூஜையறையில் வைத்து முறையாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை செய்து ஆராதித்து வந்தேன். ஒருநாள் நான் பூஜை செய்துகொண்டிருந்தபோது, 'நீ இந்தப் படத்தை ஆவாரங்காட்டுத் தெருவிலிருக்கும் டாக்டர் கிருஸ்ணமூர்த்தி ஐயரிடம் கொடு' என்று ஒரு குரல் ஒலித்தது. பிறகு என் தந்தையும் அவ்வாறே கூறவே, நான் இதைக் கொண்டுவந்து தந்துவிட்டேன்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். அன்று மாலையே நாங்கள் எல்லோரும் கூட்டமாகப் போய் பகவானிடம் எல்லாம் விவரமாகத் தெரிவித்தோம். பகவான் மௌனமாக, அருள் கனிந்த பார்வையுடன் எங்கள் எல்லோரையும் அனுக்கிரகித்தார். அங்கு பூரண சாந்தி நிலவியது.

ரமணனின் அன்பில் சிக்கி, ஆச்ரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டவர் மேஜர் சாட்விக் (சாது அருணாசலா). தன் தாய்நாடு திரும்பும் எண்ணம் கூட எழவில்லை அவருக்கு. அவர் ஒருநாள் நடேசனை அழைத்து, ஒரு துண்டுக் காகிதத்தை பகவானிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதில் ஆன்ம சாஷாத்காரம் என்ன என்பதைக் குறள்போல் ரத்தினச் சுருக்கமாக எழுதியிருந்தார். 'ஆத்ம சாஷாத்காரம்- உயிர் பிரிந்தபின் எது வாழ்கிறதோ (அகந்தை), அது உயிர் உள்ளபோதே இறத்தல்'.

நடேசனுக்குப் பால்யத்தில் ஒரு பழக்கம் இருந்தது. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அடிக்கடி திடீரென ஷேத்திர யாத்திரை கிளம்பிவிடுவார். இப்படி நேரும்போதெல்லாம் பெற்றோர் பகவானிடம் வந்து முறையிடுவார்கள். பகவானும் நடேசன் திரும்பி வந்தவுடன், "எங்காவது போகுமுன் தகவல் தெரிவித்து விட்டால், பெற்றோர் நீ ஷேத்திர யாத்திரை போய் இருக்கிறாய் என்று தெரிந்து கவலையின்றி இருப்பார்கள் அல்லவா" என்று அறிவுரை சொல்வார். இதே ரீதியில் எங்கோ போய்விட்டு ஆச்ரமம் திரும்பி வந்த அவரை பகவான் "எங்கெல்லாம் போயிருந்தாய்" என்று கேட்டது. "திருத்தணி, படைவீடு, திருப்பதி" என்று நடேசன் சொன்னதும், "அந்த சமயத்திலெல்லாம் உன் மனதில் என்ன இருந்தது?" என்று பகவான் குறிப்பாகக் கேட்டார். நடேசய்யரிடமிருந்து தன்னிச்சையாக நேரே வந்தது பதில், ரமண கீதையின் ஒரு சுலோகமாக!

ந த்வம் ஸ்வாமி கிரௌ நாத  
ந த்வம் க்ஷணிக பர்வதே  
ந த்வம் வேங்கட சைலாக்ரே  
சோணாத்ரா வஸி வஸ்துத:

ஸ்ரீ ரமண கீதை, 11-8

(திருவேரகத்தும் தணிகையிலும் திருவேங்கடத்தும் நீயில்லை. ஐய! நீ அண்ணாமலையி லுளதுண்மை) பகவான் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"பகவானிடம் கடைசியாக நீங்கள் கேட்ட கேள்வி என்ன?" என்று கோஹன் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்,

"ஒருநாள் 1949இல், ஹாலுக்கு வெளியே பகவான் அருணாசலத்தை நோக்கி அமர்ந்திருந்தார். முருகனாரும் வேறு சிலரும் அருகில் இருந்தனர். நான் அவரை அணுகி மிகப் பணிவாக, "பகவானே! நான் நேர்மையானதையே செய்ய விரும்புகிறேன். சரியான முடிவெடுப்பதற்காக பகவானே எனக்கு ஏதாவதொரு சூத்திரம் அல்லது அளவுகோல் போன்று அருளினால், அதன்படியே நான் நேர்மையானதைத் தவறாமல் செய்வேன். பிறழமாட்டேன்" என்று வேண்டினேன். பகவான் கடுமையாக, "வாழ்க்கைக்கு அப்படி குறுக்குவழி ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. நீயேதான் உன் முடிவைத் தீர்மானிக்க வேண்டும். அந்தப் பொறுப்பு உன்னுடையது. விளைவுகளையும் நீயே சந்தித்து ஏற்கத்தான் வேண்டும் என்றார்" என்று கோஹன் தெரிவித்தார்.

இதை விளக்கும்படி கேட்டதற்கு அவர் தயவுடன் விவரமாகக் கூறினார்.

"முடிவெடுப்பதற்கு குறுக்கு வழி தேடுவது மனத்தின் சேஷ்டையே. அது பொறுப்பை ஏற்காமல் தவிர்த்து, தன்னைக் காத்துக்கொள்ள விரும்புகிறது. கர்மாவையும், கர்ம பலனையும் பிரிக்கமுடியாது. முடிவை நிச்சயம் செய்ய விரும்புவதிலிருந்தே, மனது இயங்குகிறது என்பதைத்தான் அது குறிக்கிறது. விருப்பு, வெறுப்பு முதலிய துவந்துவங்களை (இரட்டைகள்) நீக்கி, மனம் இயங்க முடியாது. அவைதான் நமது தீர்மானங்களை நிலைதடுமாறச் செய்கின்றன. பூரண சரணாகதி நிலையில்தான் நேர்மையுடன் துல்லியமாகச் செயல்பட முடியும். அதற்கும் அருள் வேண்டும். எந்தச் செய்கையும் செய்யுமுன், மனதை பகவானிடம் அர்ப்பணித்து விட்டுச் செய். செயலெல்லாம் நேர்மையானதாகவே இருக்கும். மனதை முடிவாக ஒழிக்கவேண்டும் என்ற உண்மையை பகவானுடைய ஒவ்வொரு சொல்லும் வலியுறுத்துகிறது.

# வைகுண்டம் எவ்வளவு தூரம்?

ஒரு மகாராஜாவின் அரண்மனையில் பெரிய பண்டிதர்களின் சபையைக் கூட்டினார் ஓர் ராஜா. அதில் ஒரு மகாபண்டிதர் கஜேந்திர மோக்ஷத்தினுடைய கதையைப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். அதில் கஜராஜா முறையிடுகிறார். "ஸ்ரீமன் நாராயணன் சங்கு சக்கரங்களை தன்னுடன் எடுத்து வராமல் லக்ஷ்மீ தேவிக்கும்கூட சொல்லாமல், பக்தர்களைக் காப்பாற்றும் பொருட்டு ஓடினார்" என்று சொல்லியதைக் கேட்ட மகாராஜா, அதே கணத்தில் வைகுண்டம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது சரியாகத் தெரியப்படுத்துங்கள் என்று அவரைக் கேள்வி கேட்டார். அதற்கு மற்றுமுள்ள பண்டிதர்களும் கூட பதில் சொல்ல முடியாமல் திணறினார்கள்.

அப்பொழுது மகாராஜாவின் சிம்ஹாசனத்திற்கு பின்புறமாக நின்றுகொண்டு விசிறிக்கொண்டிருந்த ஒரு காவலன், "மகாபிரபு! நீங்கள் தயவுசெய்து எனக்கு உத்தரவு கொடுத்தால், அது எவ்வளவு தூரமென்று நான் தெரியப்படுத்துகிறேன்" என்றான். சொல் என்றார் ராஜா. யானை சத்தம் போட்டதும் அந்த சப்தம் எவ்வளவுதூரம் வரை கேட்கின்றதோ அவ்வளவு தூரத்திலிருக்கிறது "வைகுண்டம்" என்றான் அந்தக் காவலன். ஆவேசத்துடனும், ஆர்வத்துடனும் கூப்பிட்டால், பரமாத்மா எங்கோ தூரத்திலிருந்து வரத்தேவையில்லை. அந்த சப்தம் கேட்கும் தூரமே நமக்கும்; மாதவனுக்கும் தவறாமல் கேட்கும், அதைக் கேட்டதுமே கூடவே வருகிறார் என்றான்.

-கோபுர தரிசனம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்

"மாக விசும்பினன் வெண்டிங்கள்
மூவைந் தான் முறைமுற்ற"

(புறம்-400)

பதினைந்து நிலைகளை மதி அடைகிறது என்பதையும் பின்வரும் பாடல் விளக்குகின்றன.

"வெள்ளி தென்புலத்துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை"

வெள்ளியாகிய மழைக்கோள் தெற்கே விலகியிருப்பது மழையில்லாமைக்கு அறிகுறியென்பதையும்

"மைம் மீன் புதையிலும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்
வயலக நிறையப் புதற் பூ மலர"

(புறம்-17)

என்ற அடிகளால் கோள்களைப்பற்றியும் கூறியுள்ளதைக் காணலாம். இவற்றில் பலவகையான அறிவியல் சிந்தனைகள் மறைந்து இருப்பதை காணலாம். இவற்றைத் தோண்டத் தோண்ட பல சிந்தனைகளை வெளிக்கொண்டு வரமுடியும்.

வைணவ தத்துவங்கள் காலத்தை சத்துவதனியம் என்று குறிப்பிடும். இதுவே காலத்துவம் ஆகும் என்பது அவர்கள் கொள்கை. இதில் சத்துவம், இராசதம், தாமசம் ஆகிய முக்குணங்கள் இல்லை, எதிர், நிகழ்வு, கழிவு என்ற காலநிலைக்கு இதுவே காரணமாகும். இது விநாடி, நிமிடம், நாழிகைமுதல், பரார்த்தம் வரையிலுள்ள பகுதிகள் இக்காலத்தினுடையனவேயாகும்.

நிமிடம் பதினைந்து கொண்டது காழ்டை
காழ்டை முப்பது கொண்டது கலை
கலை முப்பது கொண்டது முகூர்த்தம்
நாள் முப்பது கொண்டது மாதம்
மாதம் இரண்டு கொண்டது இருது
இருது மூன்று கொண்டது அயமை
அயமை இரண்டு கொண்டது ஆண்டு பரார்த்தம்

இப்படி குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு காலம் பற்றி சங்க நூலாகிய தொல்காப்பியம் குறிப்பிடும் இடத்து

"காலம் தானே மூன்றென மொழிவர்"

இதன்படி மிகச் சிறிய பொழுது கண் இமைக்கும் கை நொடிக்கும் காலம் மாத்திரை எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககால புறநானூறும் பகல், இரவு என்ற கால வேறுபாட்டை காட்டி நிற்கின்றது.

"அகல் இரு விசும்பினாலும் பகல் விளங்குதியாய்
பல கதிர் விருந்தே"

என்ற பாடல் காலை முதல் மாலை வரையுள்ள காலத்தையும், சூரியனையும் குறிப்பிடுகின்றது.

மாதம் பற்றிய கருத்துக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

"பங்குனி உயர் அழுபத்துத்தலை நான்
மீன் நிலை திரிய"

தாவரங்களின் ஒளிச்சேர்க்கை பற்றியும் அதனால் பொங்கல் விழாவின் முக்கியத்துவத்தினையும் அறியலாம். நக்கீரர் பெருமானும்,

"உலகம் உவப்பு வலனேர்பு விரிதரு
பலர் புகழ் ஞாயிறு"

இதனை தொல்காப்பியரும்,

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்று கூறுகிறார்.

இன்றைய உலகில் உயிர் கொல்லியாக அணு விபரிக்கப்படுகின்றன. இத்தகைய அணு பற்றிய சிந்தனைகள் ஆரம்ப காலத்தில் இருந்ததைவிட பெருவளர்ச்சி கண்டு உள்ளது. இதனை நாம் அறிவியலின் உச்ச கட்டத்தில் வைத்து பார்க்கவேண்டிய தேவை இருப்பினும் நாம் பழந்தமிழ் இலக்கியங்களில் அணு பற்றிய கருத்தினைக் கருத்தில் கொள்வோம். இயற்பியலின் ஒரு பகுதியாக விளங்குவது அணுவியல். அன்றைய நிலையில் அணுபற்றிய நுண்மையான கருத்து கூறப்பட்டு உள்ளன.

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப்புகட்டி
சிறுகத் தறித்த குறள்"

திருக்குறளின் மேன்மையை கூறவந்த ஔவையார் அணுவைவிட மிக நுண்ணிய கருத்தினை கொண்டது என்று அவர் கூறவந்த கருத்தின் ஊடாக அவர் காலத்தில் அணுவைப்பற்றிய விடயம் அவர் முன்னரே அறிந்திருத்தல் வேண்டும். அந்த அளவிற்கு அணுவைப் பற்றிய சிந்தனைகள் வேரோடி இருப்பதைக் காணலாம். மேலும் ஔவையாரின், விநாயகர் அகவலில் "அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்..." என்ற பாடலடிகள் காட்டி நிற்கின்றன.

கம்பனின் இரணிய வதைப் படலத்திலும் இரணியனுக்கும், பிரகலாதனுக்கும் நடந்த உரையாடலில் அணுவைப் பற்றிய கருத்து பிரகலாதன் உடைய கருத்தின் ஊடாக வெளிவருவதைக் காணலாம். இரணியன் பிரகலாதனை பார்த்து நீ சொல்லும் நாராயணன் எங்கு இருக்கிறான் என்று கேட்க அவன் அதற்கு அவர் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்று கூறும் கருத்து பாடலாக,

"சாணிலும் உளன் ஓர் தன்மை
அணுவினைச் சத்கூறு இட்ட
கோணிலும் உளன்"

என்று கூறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அணு என்பது ஓர் சிறிய பகுதி. அதில் நூலில் ஒரு பகுதி கோண் என்பது என்ற கருத்துக்கள் குறிப்பிடப்பெறுகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களில் பொறியியல் பற்றிய கருத்துக்கள் ஆங்காங்கு இழையோடி இருப்பதை காணமுடிகின்றன. அக்காலத்தில் பொறியியலிலும் கட்டிட நிர்மாண வேலை செய்தலிலும் சிறந்த திட்டமிட்டு செயற்படும் தன்மை கொண்டவர்களாக இருந்து இருக்கிறார்கள் என்பது தெரிய வருகின்றன. இயந்திரம் பூட்டிய ஊர்திகள் உருவாக்கி இருந்து இருக்கிறார்கள். யவனவீரன் ஒருவனால் இயற்றப்பெற்றது. ஞாயிற்றின் தேர் விண்வெளியில் இயங்குவது போன்று வேகத்துடன் இயங்கக் கூடியது. குதிரை பூட்டப்படாமை இயந்திரத்திலேயே இயங்கும் தன்மை கொண்டது.

பழந்தமிழ் இலக்கியங்களில் கலையில்கூட அவர்கள் அறிவியலை நன்கு பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பது அக்கால நகர அமைப்புக்கள் எமக்குச் சான்று பகரும் மதுரை நகரில் நிலத்துக்கு அடியில் கழிநீர் செல்லும் வழியாக அமைக்கப்பட்டிருந்த சுருகை யானை செல்லும் அளவு வசதி பெற்றிருந்தது என்றால் அக்காலத்தில் கட்டடக்கலையின் நுற்பமான அறிவியலைப் பயன்படுத்தி செயற்பட்டு இருக்கிறார்கள் என்பது புரிகிறது.

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதோறும்
மையறு படிவந்து வானவர் முதலா....."

எனவரும் மணிமேகலை அடிகள் மனைகளின் மாண்பு கூறுவனவாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் சமூக சீர்திருத்த சிந்தனைகள் அறிவியல் ரீதியாக விளக்கப்பட்ட தன்மையினையும் காணமுடிகின்றன. மக்களை நன்னெறிப்படுத்தும் போதனைகளாக மனக்கட்டுப்பாடு சமூக ஒழுக்க நெறி என்பன மட்டுமன்றி "கற்புடைய பெண் அமிழ்து", "பொய்யாமை நன்று", "கொல்லாமை நன்று". "நீர் அறம் நன்று" "நிழல் நன்று", "ஈவது விலக்கேல்" முதலான பொதுக் கோலங்களும் மனித சமூகத்தை ஆரோக்கிய நெறிப்படுத்தும் தகையனவாக இந்நூற் காட்டப்படுகின்றமையைக் காணலாம்.

தொகுத்துப் பார்க்கும்போது பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியலில் சிந்தனைகள் பல இருந்தாலும் அத்தகைய கருத்துக்கள் அதற்கு முன்னைய இலக்கியங்களின் தொடர்ச்சியாக காணப்பட்டமையினை அவதானிக்கலாம். வேதங்கள், ஆகமங்கள், இதிகாச புராணங்கள், தர்மசாத்திரம், அர்த்த சாத்திரம் போன்ற வரலாற்று நூல்களில் கூறப்பட்டவற்றினைக் கொண்டு பின்னர் வந்த இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் நூலுக்கு அணி சேர்த்து இருக்கின்றமை இவை பாரம்பரியமாகத் தொடர்ந்து வரும் ஒரு சங்கிலித் தொடர்போன்றது. அந்த வகையில் பழந்தமிழ் இலக்கியங்களில் மருத்துவம், சோதிடம், வானியல், பொறியியல், அணுவியல், விவசாயவியல், கலையியல், சமூகவியல் சிந்தனைகள் போன்ற அனைத்து விடயத்தினையும் தன்னகத்தே கொண்ட ஒரு அறிவியல் நூலாக பழந்தமிழ் இலக்கியங்கள் விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணபடன மகிமை

திரு தி. பொன்னம்பலவாணர் அவர்கள்



புராணபடனம் செய்தல், கேட்டல் என்பன சைவ சமயிகளுக்கு அவசியமாக இருக்கவேண்டிய கடமைகளாகும்.

இக்காலத்தில் புராணபடனம் அருகிவிட்டது. இதுமட்டுமன்றி புராணபடனம் பெருமையற்றது- விவேகிகள், கல்விமான்களுக்கு தேவை இல்லாதது என்ற கருத்தும் பரவி வருகின்றது.

இது மிகவும் வருந்தத்தக்கது. ஆபத்தானது. புராணபடனத்தின் மகிமைபற்றியும் அவசியம் பற்றியும் சமீபத்தில் ஒரு அறிஞர் எழுதிய கட்டுரையை வாசித்தேன். அக்கட்டுரையில் பல நல்ல குறிப்புக்கள் காணப்பட்டன. எனினும் அவசியமான சில குறிப்புக்கள் தவறிவிட்டன. அப்படித் தவறிய கருத்துக்களை வெளிப்படுத்துவதும், புராணங்கள் மீதும் புராணபடனத்தின் மீதும் நல்லெண்ணத்தை உண்டாக்குவதுமே என் நோக்கம்.

நாவலர் பெருமான் தான் பதிப்பித்த கந்தபுராணத்தில் "சிவபுராணபடன விதி" என்றோர் கட்டுரை எழுதியிருக்கிறார். இருபத்தொன்பது பிரிவுகளை உடையதாக அக்கட்டுரை உள்ளது. அக்கட்டுரை தனிச் சிறு நூலாக வெளிவந்தால் நல்லது. இல்லையேல் சமய சஞ்சிகைகளில் அதை வெளியிட்டாலும் பயன் உண்டாகும்.

அக்கட்டுரையில் சிவனடியார்களுக்கு உரிய இலக்கணம் 23என்று வரிசைப் படுத்தியிருக்கிறார். இந்த இருபத்திமூன்று இலக்கணங்களில் ஒன்று சிவபுராணம் கேட்டல். நாவலர் இக்கட்டுரையில் எட்டாவது பிரிவில் சிவபுராணங் கேட்டலின் மகிமைபற்றி தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இவ்விருபத்து மூன்று இலக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணங்கேட்டல் ஓர் இலக்கணமாய் நிற்றல் அன்றி தன்னையும், தன்னை ஒழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொது இலக்கணங்களையும் வருவித்தற்கு கருவியாயும் நிற்றல் உடையது. எதனால் எனின் விபூதி உருத்திராட்சதாரணம் முதலிய புண்ணியங்களையும்- அவற்றின் பயனாகிய இன்பத்தையும், கொலை முதலிய பாவங்களையும்- அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணம் ஆதலின் என்க. ஆதலால் சைவ சமயிகள் யாவரும் சிவபுராணங் கேட்டல்வேண்டும் என்பது துணிபு. இத்தகைய சிறப்புக்கு மேலாகவும் நம் நாட்டில் புராணபடனத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. அதனையும் நாவலர் யாழ்ப்பாணச் சமயநிலை என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

நம் ஆலயங்களில் நடைபெற்ற புராணபடனங்கள் சிறந்த வழிபாடாகவும் அமைந்திருந்தது. விரத நியமத்துடன் புராணபடனம் நிகழ்த்திக்கேட்டு சற்புத்திரப்பேறு முதலிய பயன்களை நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர் தாம் விரும்பியவாறு அடைந்திருக்கிறார்கள். இத்துடன் சமய அறிவு- வழிபாட்டுமுறை- இறை அனுபவம் போன்றவற்றையும் அடைந்திருக்கிறார்கள்.

புராணபடனமூலம் நல்லறிவு பெறாத இன்றைய சைவ சமுதாயம் தம் மனம் போனவாறு வழிபடவும் அப்படியான வழிபாட்டால் தாம் விரும்பியதை அடைய முடியாமலும் ஏமாற நேரிடுகின்றது.

சில ரூபாய்களைக் கொடுத்து பலரது பெயர், நட்சத்திரங்களைக் கூறி அருச்சனை செய்துவிட்டால் போதும் எனவும் அப்படியான அருச்சனைக்கு அருளாவிட்டால் கடவுள் என்ன கடவுள் எனவும் கருதும் நிலை நீங்கவும், காவிய- இரசனை தெய்வீக மகிமை வழிபாட்டு முறைமை போன்றவற்றை நம் சமுதாயம் சரிவரப்பெற ஒரேவழி "புராணபடனம் அல்லது புராண பாராயணம்" என்ற தீர்மானத்தை நம் சைவமக்கள் அடையும் நாளே நமக்கு மகிமை உண்டாக்கும் ஆரம்ப நாளாகும்.

## கோயில் தரிசனத்தின்போது ஆண்கள் மேல் உடைகள் அணியலாமா?

இன்று நம்மவர்கள் பலர் உலக நாடுகளில் வாழ்வதால் அங்கு கடைப்பிடிக்கின்ற நடைமுறைகளை இங்கு வந்தும் அதை செய்வதால் எமது பண்பாடு கலாச்சாரம் அழியும் நிலை ஏற்படலாம். சில கோயில்களில் தரிசனம் செய்யும்போது ஆண்கள் மேற் சட்டை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆசாரத்தை பலரும் ஏளனம் செய்கின்றனர். ஆனால் இந்துமத பிரமாணத்தின்படி மேல் ஆடைகள் ஆண்கள் அணியாமல் ஆராதிக்க வேண்டும் என விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

கோயில் தரிசனம் செய்யும்போது நாம் மனதில் கொள்வது இறைவன் அருள் நம்மில் வந்து நிறையவேண்டும் என்பதே. கோயில் வாசலுக்கு முன் தெய்வ விக்கிரகத்துக்கும் சமாந்தரமாக வணங்கி நிற்கும் பக்தரில் இறையருள் வந்து நிறையும் என்பது நம்பிக்கை. விக்கிரகத்தின் மூலாதாரம் முதல் எல்லாப் பாகங்களிலிருந்தும் இறை வல்லமை புறப்பட்டு பக்தனின் ஒவ்வொரு பாகத்தையும் நோக்கி வந்து சேர்ந்து ஒவ்வொரு பாகமும் உணர்வடைகின்றன.

பெண்கள் கோயில் தரிசன வேளையில் உடை அணிவதில் அதிக கட்டுப்பாடுகள் இல்லையென்பதைச் சாதகமாக்கி, இந்நாளில் கோயில் தரிசன வேளையில் "துப்பட்டா போடாமல் சுடிதார் அணிவது போன்றவை" படிப்படியாக அதிகரித்து வருவது வேதனைக்குரியது. ஆகவே இந்நாளைய பெண்களும் தரிசன வேளைகளில் அணிய வேண்டிய ஆடைகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது.

பொதுவாக அதிகாலையிலும் மாலையிலும் கோயில் தரிசனம் செய்வது வழக்கம். இந்நேரங்களில் ஆண்கள் மேலாடை இன்றி ஆலய தரிசனம் செய்யவேண்டும் என்பது விதி. உதய சூரியனிலும் மறையும் சூரியனிலும் இருந்து புறப்பட்டு வரும் ஒளிக்கதிர்கள் ஆடை அணியாத உடற் பாகங்களில் பதிந்து விட்டமின் "டி"யை உள்வாங்க உதவுவது உடல்நலத்துக்கு மிகச் சிறப்பானது என்று விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது. எனவே முன்னவர்கள் வகுத்த பண்பாடு கலாச்சாரங்களை பேணுவது காலத்தின் தேவையாகும்.

*க. சிவசங்கரநாதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய விழுமியங்கள் காட்டும் சித்தாந்த உண்மைகள்

(தொடர்ச்சி...)

திரு நா. சிதம்பரநாதன் அவர்கள்

**1:14: சரியைத் தொண்டு:-**

சரியைத் தொண்டு என்பது கடவுளை எஜமானனாக ஒரு உருவத்தில் கொண்டு எஜமானனுக்கு எந்தெந்த உபசாரங்களையெல்லாம் செய்யக்கூடுமோ அவைகளையெல்லாம் அவ்வுருவத்துக்குச் செய்தல். அலகிடுதல், மெழுகுதல், பூக்கொய்தல், பூமாலை கட்டுதல் இன்னும் இவை போன்ற மற்ற காரியங்களெல்லாம் செய்தல். இவ்வாறு செய்வதால் உலகப்பொருள்களில் தான் வைத்துள்ள பற்று கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக்கொண்டே வரும். தனக்கென ஒன்றும் செய்யாமல் கடவுளுக்கென்றே செயல் நிகழ்வதனால் ஆணவமலமும் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்துகொண்டே வரும். இத்தொண்டை தாசமார்க்கம் என்று கூறுவர். உதாரணமாக சமயாசாரியார் ஒருவரான அப்பர் சுவாமிகளைக் கூறலாம்.

**1:15: கிரியைத்தொண்டு:-**

கிரியைத் தொண்டாவது கடவுளின் உருவத்தை எழுந்தருளச்செய்து அபிஷேகம் போன்ற பதினாறு வகையான உப்சாரங்களைச் செய்து தீயை வளர்த்து அதையும் கடவுள் உருவாக எண்ணி உயிர்வதையில்லாத வேள்வி செய்தல். இங்கே "நான்" என்ற பற்றும் "எனது" என்ற பற்றும் மிகுதியாக நீங்கும். அம்மாதிரியான வேலை கடவுளைத் தகப்பனாராகப் பாவித்து பிள்ளை செய்யும் உபசாரத்துக்கு ஒப்பிடப்பட்டு கிரியைத் தொண்டிற்கு சற்புத்திர மார்க்கம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக பூமியர்கோன்வெப் பொழித்த புகழியர்கோன் திருஞானசம்பந்த நாயனார் அவர்களைக் கூறலாம்.

**1:16: யோக மார்க்கம்:-**

யோகம் என்பது உடம்பின் கூறுகளை பிராணவாயுவைத் தன்வசப்படுத்தி தொழிற்படுத்தி உடம்பினுள்ளிருக்கும் ஒளிவடிவான கடவுளைக் கண்டு வழிபட்டு ஆனந்தமடைதல். இதைக் கடவுளும் தானும் சிநேகிதர்கள்போல் அளவளாவி தோழமைபூண்டு ஒழுகுவர். இந்த வழிக்கு சகமார்க்கம் என்றும் கூறுவர். உதாரணம் தம்பிரான் தோழர், சுந்தரமூர்த்தி நாயனார்.

**1:17: ஞான மார்க்கம்:-**

எல்லாவற்றிற்கும் மிகவும் சிறந்தது ஞானமார்க்கம். இதில் ஞான சாத்திரங்கள் எல்லாவற்றையும் கசடறக்கற்று அவைகளின் முடிவுகளைத் தனது வாழ்க்கையில் பதித்து ஒழுகுவது முதலிய செயல்கள் நடைபெறும். இவ்வழியைப் புருஷன், பெண்சாதி இருவரும் களங்கமின்றிப் பரிசுத்தமாக நடத்தும் வாழ்க்கைக்கு ஒப்பிட்டு இதற்கு சன்மார்க்கம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைக் கொடுத்துள்ளார்கள். இதற்கு உதாரணமாக வாழ்ந்தவர் திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமான்.

இந்த நான்கு சாதனமுறைகளால் ஆன்மாவுக்கு கிடைக்கும் ஆன்மலாபங்கள் மூன்று. அவை இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், இருவினையொப்பு என்பது இன்பத்தையும் துன்பத்தையும் விருப்புவெறுப்பின்றிக் காணுதல். மலபரிபாகம் என்பது ஆணவ மலத்தினுடைய சக்தி குறைந்தொழிதல். சத்திநிபாதம் என்பது கடவுளுடைய திருவருளானது ஆன்மாவில் வந்து பதிதல். இவ்வாறு திருவருள் கைகூடினால் ஆன்மாவானது எடுத்த அப்பிறவியுள்ளவரை பிராரத்துவ கன்மத்தை அனுபவித்துவிட்டுப் பிறகு சிவசாயுச்சிய பதவியென்ற முத்தியை அடையும்.

எவ்வளவு ஞானம் முதிர்ந்தவனாயிருந்தாலும் கோயில் வழிபாடும் அன்பர் கூட்டுறவும் வேண்டும். இல்லாவிடின் ஆணவமலம் மீண்டும் தொடர்ந்து வலி பெருக்கும். ஜீவன் முத்தனுக்கும் ஆணவமலம் "மாயாநேதன் சக்தி மாய்ந்து" நிற்கும் நிலைதான் கிடைக்கிறது.

## 1:18: திருவருள் அணைந்தோர் தன்மை:-

இந்த முடிந்த முடிவாகிய நிலையில் இருப்பவர்கட்கு ஜாதி, குலம், கோத்திரம், நாடு, மொழி, உற்றார், உறவினர், நண்பர், பகைவர், நன்மை, தீமை முதலிய உலகத்திலுள்ள தொடர்புகள், வேற்றுமைகள் எவையும் கிடையாது. இவை இல்லாதிருப்பதே சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபான நிலை.

## 1:19: சைவநூல்கள்:-

சைவசித்தாந்தத்தின் உண்மைகளெல்லாம் தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளிலும், சிவபுராணம் முதல் என பதினெண் புராணங்களிலும் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலான பதினான்கு சாத்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இம்மட்டில் இக்கட்டுரையை நிறைவு செய்து சைவ உலகின் இளைஞர்கள் தெரிந்து கொள்ளவேண்டியவைகளையும் மிகச்சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாமென நினைக்கிறேன். அவையாவன:-

1. கடவுள் ஒருவர் இருக்கிறார் என நம்பவேண்டும்.
2. அவரே இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து தீயனவற்றை அழித்து மறைத்து அருளுகிறார் என்பதை அறியவேண்டும்.
3. உயிர்கள் இயல்பாகவே உலகத்தில் பற்றுடையனவாகவுள்ளன என்பதை அறிய வேண்டும்.
4. இந்தப் பற்று நான், எனது என்று இருவகையாக உள்ளன என்பதை அறியவேண்டும்.
5. இவ்வுலகத்திலே உயிர்கள் செய்கின்ற காரியங்கள் எல்லாம் இப்பற்றுக்களின் காரணத்தால் உண்டாகின்றன என்று அறிய வேண்டும்.
6. உலக வாழ்வில் உயிர்கள் இன்பம் அனுபவிப்பது போலக் காணப்படினும் மிகுதியாகத் துன்பம் அனுபவிக்கின்றன என்பதை நன்றாக உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஆகையால் உலகப்பொருட்கள் மீதுள்ள பற்றுக்களை விட்டு என்றும் உள்ளவரான கடவுள்மீது அன்பு செலுத்தவேண்டும்.
8. ஆகையால் உலகத்தில் உள்ள பற்றுக்களை ஒழித்தால்தான் உயிருக்கு உண்மையான இன்பம் கிடைக்குமென அறியவேண்டும்.
9. கடவுள் உயிர்களிடத்து அளவற்ற கருணை உள்ளவரென்றும் தன்னைச் சரண் அடைந்தவர்களின் துன்பத்தைப்போக்கி நிலையான இன்பத்தைக் கொடுக்கிறார் என்று உணரவேண்டும்.
10. கடவுளை அடைவதற்குச் சிறந்த உபாயங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகள் என்பதை உணரவேண்டும்.
11. இவ்வழிகளில் சென்றால் கிடைக்கும் இலாபங்கள் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், சிவசாயுச்சிய பதவி உண்டாகும் என்று மிகவும் நன்றாக உணரவேண்டும்.
12. எவ்வளவு ஞானம் முதிர்ச்சியடைந்தாலும் திருக்கோயில் வழிபாடு தொண்டர்கள், அன்பர்கள் ஆகியோரின் கூட்டுறவு கைவிடக்கூடாது என்று அறிய வேண்டும்.
13. எக்காலமும் எல்லா உயிர்கட்கும் நன்மையே செய்யவேண்டும் அவர்களின் துன்பத்தை போக்குதலாலும் அவர்களின் இன்ப உணர்வே எம்மை எப்போதும் காக்கும் என்பதையும் அறியவேண்டும்.
14. பேரின்பத்துக்குச் சாதனமான அறிவு அல்லது ஞானம் அடையவேண்டும். ஆனால் சமயநூல்கள், திருமுறைகள், நீதிநூல்கள் பலவற்றையும் கற்கவேண்டும் என்பதை அறியவேண்டும்.
15. அருளுக்கு அடிப்படையான அகிம்சையை கைக்கொண்டு எல்லா உயிர்களையும் நேசிக்கவேண்டும்.
16. எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவனென்று, எவ்வுயிரும் தன்னுயிர்போல் நேசித்து ஆன்றோர் வாக்குப்படி எமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நடத்த வேண்டும்.

ஓம் சாந்தி- ஓம் சாந்தி- ஓம் சாந்தி.

((முற்றும்)

## மன அழுத்தம்

எந்த ஒரு செயலையும் உடனடியாகச் செய்யாமல் தள்ளிப்போட்டுக்கொண்டே இருந்தால் மன அழுத்தம் அதிகமாகி அவதிக்குள்ளானார் ஒருவர். தன் மன அழுத்தம்போக என்ன வழி என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தார். மிக மனவேதனையுடன் அந்த ஊருக்கு வந்திருந்த ஒரு அறிஞரிடம்போய் தன் மன அழுத்தம் குறித்து விளக்கினார்.

அறிஞர் உடனே ஒரு பேப்பரைத் தரையில் விரித்து, அதில் ஒரு கோடு கிழித்து சுட்டிக்காட்டி, "ஒரு கோடு வரைவதாக இருந்தால்கூட அந்தக் கோட்டின் ஒவ்வொரு புள்ளியிலும் அடுத்த புள்ளியின் திசையை முடிவு செய்தால்தான் கோடு வரைய முடியும். தீர்மானம்தான் வாழ்க்கையை நகர்த்துகிறது: செய்ய வேண்டிய செயலை உடனுக்குடன் செய்யாமல் தள்ளிப்போடுவதால்தான் உனக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. எந்த ஒரு செயலையும் உடனுக்குடன் ,செய்து முடித்தால் மன அழுத்தம் குறைந்து வாழ்க்கை விரைவாய் நகரும்" என்றார் அறிஞர்.

-பக்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| மா. தங்கவேல் போடிங்றோட் | பருத்தித்துறை (பலாலி) | 3000. 00 |
| S. சத்தியமூர்த்தி ஆசிரியர் நினைவாக | வல்வை | 30000. 00 |
| இ. கௌரிபாலன் மிதிலை | கரவெட்டி | 1000. 00 |
| T. சுதாகரன் | லண்டன் | 10000. 00 |
| பாலதாஸ் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| தனபாலசிங்கம் புவனேஸ்வரி | | 5000. 00 |
| சகிலா இராசகுரு | கனடா | 5000. 00 |
| கு. தியாகராஜசர்மா | நீர்வேலி 2மூடை அரிசி | 4000. 00 |
| பொன்னம்பலம் தம்பிராசா | அவுஸ்திரேலியா | 6000. 00 |
| சி. பஞ்சாச்சரம் வல்லை வீதி | சங்கானை | 11000. 00 |
| கௌசலாதேவி அரியரத்தினம் | உடுவில் | 10000. 00 |
| தம்பிஜயா | துன்னாலை | 10000. 00 |
| அருள்மொழி சூரியகுமார் | லண்டன் | 5000. 00 |
| தேவராஜா ராஜகுமார் | கரணவாய் | 5000. 00 |
| மன்மதராஜா | குடத்தனை வடக்கு (லண்டன்) | 10000. 00 |
| ஜனகன் சக்திவேல் | நல்லூர் | 3000. 00 |
| சந்திரசேகரம்பிள்ளை உருத்திரகுமாரன் கற்குழி | வவுனியா | 15000. 00 |
| திருமதி ஜமுனா வர்ணன் }<br>கமலா குணரெட்ணம் } | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| S. சந்திரசேகரம் ஹேம்பிரிச் ஹாட்வெயர்ஸ் | கொழும்பு | 15000. 00 |
| பரஞ்சோதி லீலாவதிமூலம் கந்தையா வடிவேற்கரசன் நினைவு | இன்பர்சிட்டி | 25000. 00 |
| ஆ. கந்தையா வாமநாயகி | பருத்தித்துறை (U.S.A) | 25000. 00 |
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி | 10000. 00 |
| திருஞானம் கணேசலிங்கம் | மயிலிட்டி வடக்கு | 5000. 00 |
| சதீஸ்குமார் நிஷா | கரவெட்டி | 4000. 00 |
| நா. ராசையாமூலம் திருமதி ஆ. தயாநிதி (லண்டன்) | கந்தர்மடம் | 6000. 00 |
| பொன்னம்பலம் ராஜகுமார் | பருத்தித்துறை | 1000. 00 |
| வே. வில்ராஜன் | ஏழாலை | 3000. 00 |
| நல்லதம்பி ஜெயராமச்சந்திரன் | லண்டன் | 5000. 00 |
| வேலும்மயிலும் ஜெயராஜா | வல்வை | 6000. 00 |
| சிவராசா சிவபாதசுந்தரம் | | 17570. 00 |
| K. சுகந்தன் அம்பன் | குடத்தனை | 2000. 00 |
| செல்வி சிவசக்தி சிவகுமாரன் பழமுதிர்சோலை | பொலிகண்டி | 20000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சி. நிமலன், T. சதாசிவம் நினைவாக | | அந்திரான் | 2000. 00 |
| சிவஞானபிரகாசம் | | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| சந்திரமோகன் அபிராம் | | நெல்லியடி | 5000. 00 |
| க. வசந்தகுமார் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வை. துரைராஜா | ஒஸ்காலேன் | உரும்பராய் | 2500. 00 |
| திருமதி தேம்பாமலர் நினைவாக ஆ. இந்துசேகரம் | | அவுஸ்திரேலியா | 80000. 00 |
| நா. பத்மலீலா | | அச்சுவேலி | 5000. 00 |
| சிவசிதம்பரலிங்கம் | கேணியடி | குப்பிளான் | 5000. 00 |
| N. கிருசிராம் | | வெள்ளவத்தை | 10000. 00 |
| மகாலிங்கம் கஜன் | | கோப்பாய் தெற்கு | 20000. 00 |
| ராமநாதன் பார்வதி | | கரணவாய் மத்தி | 15000. 00 |
| சு. அபிராமி | | சித்தங்கேணி | 1000. 00 |
| ஞானவைரவர் கோவில் பூம்பதிவீதி | | வடலியடைப்பு | 4000. 00 |
| நந்தகுமார் துஷியா | | ஜேர்மனி (நாயன்மார்கட்டு) | 5000. 00 |
| சுபாஜினி மகானுஜம் | | கனடா | 6000. 00 |
| யோகேஸ்வரன் குடும்பம் | | கனடா | 9000. 00 |
| க. தனஞ்சயன் | சுதுமலைச்சந்தி | மானிப்பாய் | 1000. 00 |
| குமரகுருநாதன் பிரதீபன் | | திருநெல்வேலி | 2000. 00 |
| Dr. குகமூர்த்தி | நாவலர்வீதி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சண்முகநாதன் | சாலமன்வீதி | கொழும்பு | 10000. 00 |
| சிவகுரு துரையம்மா | | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| மகராசி நகைமாளிகை | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. காசிநாதர் | | நீர்வேலி வடக்கு | 2000. 00 |
| சுகுமாரி சிவசுந்தரம் | V.M. றோட் | பருத்தித்துறை | 30000. 00 |
| க. மாணிக்கவாசகர் | | அல்வாய் | 1000. 00 |
| V.S. கந்தையா ஞாபகார்த்தம் | | கொழும்பு | 7500. 00 |
| சங்கமி நந்தகோபால் | | நோர்வே | 10000. 00 |
| கமலதாசன் நிஷாந் | | சாவகச்சேரி (லண்டன்) | 10000. 00 |
| M. இரத்தினபாலன் | | லண்டன் | 10000. 00 |
| தர்ஷினி மகாதேவன் | | அமெரிக்கா | 10000. 00 |
| இராசையா ஸ்ரீதரன் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| T. சிவா | | உரும்பராய் | 2000. 00 |
| த. வெங்கடாசலம் | தம்பாலை | அச்சுவேலி | 1000. 00 |
| பத்மநாதன் தயாபரன் | | கெருடாவில் | 5000. 00 |
| மு. சிவராசா | இயற்றாளை | வறணி | 5000. 00 |
| ந. விக்னேஸ்வரமூர்த்தி | கோயிற்கடவை | துன்னாலை | 3000. 00 |
| கு. விஜயபாலா | | துன்னாலை தெற்கு | 2000. 00 |
| செல்வி வேலுப்பிள்ளை நேசமலர் ரீச்சர் | | கனடா | 21500. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உயர்ந்த பிள்ளை

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (குறள்: 43)

கௌசிகன் என்ற பிராமணன் யோகம் செய்யப் போனான். அவன் ஒருநாள் சமாதியிலிருந்து விழித்தபோது ஒரு கொக்கு மரத்தின்மீதிருந்து அவன்மேல் எச்சமிட்டு விட்டது. அதனை அவன் விழித்து நோக்க அது எரிந்து விழுந்தது. தன் அற்புதச் சக்திமேல் அபிமானம் கொண்ட அவன் பிட்சைக்குப் போனான். "பவதி பிட்சாம் தேகி" என்றான். "கொஞ்சம் இரு" என்று வீட்டம்மாள் அவனைக் காக்க வைத்தாள். அப்புறம் வெளியே வந்து அவனுக்குப் பிட்சை போடுகையில் அவன் அவளை முறைத்துப் பார்த்தான். அவள் கூறினாள். "அப்பா, நான் கொக்கன்று; நீ பார்த்ததும் எரிந்துவிழ" என்றாள்.

அவனுக்குப் பெரும் வியப்பு. "நான் காட்டில் கொக்கை எரித்தது வீட்டிலுள்ள உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான். "நான் எனக்குரிய வீட்டுக் கடமைகளைத் தவறாமல், தவறின்றிச் செய்கிறேன். இப்படி ஏதோ தூரப்பார்வை வாய்த்துள்ளது. இதுபற்றிஅதிகம் அறிய வேண்டுமானால் மிதிலை தேசம் போ. தரும வியாதரைப் பார்!" என்று உள்ளே சென்று விட்டாள்.

மிதிலை நாட்டிற்குச் சென்று கௌசிகன் தரும வியாதரின் இருப்பிடத்தை விசாரித்துச் சென்றடைந்தான். அது ஒரு கசாப்புக்கடை. தரும வியாதர் புலால் விற்றுக்கொண்டிருந்தார். "இதென்ன இங்கே அந்தம்மாள் அனுப்பியிருக்கிறாள்?" என்று எண்ணியவாறே அவரைப் பார்த்தான். உடனே "அந்த அம்மாள் அனுப்பினாளா" என்று அவர் கேட்டார். பிறகு அதிசயப்பட்டுக் காத்திருந்த அவனுடன் வியாதர், வியாபாரத்தை முடித்துக்கொண்டு தம் வீட்டிற்குச் சென்றார். தம் வயோதிகரான தாய் தந்தைக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து, உணவிட்டு, அவர்களை உபசரித்து, கடைசியில் கௌசிகனுடன் நீராடி நன்கு உணவு உண்டபடியே பேசினார்.

"இல்லறம் நடத்துபவன் இயற்கைப்படியே தனக்குச் சம்பந்தப்பட்ட மனைவி, மக்கள், பெற்றோர் மூவரைக் காக்க வேண்டும். அவர்களுக்கு வீட்டிலிருப்பவன் உற்ற துணையாவான். பிறகு, துறந்தவர்களுக்கும் துறவேற்காத பிரம்மச்சாரிகட்கும், உயிர்நீத்த முன்னோருக்கும் துணையாகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்விட்ட முன்னோர் (பித்ருக்கள்), தெய்வம், விருந்தாக வருபவர், உறவினர், தான் ஆகிய ஐவகையினரையும் ஆதரிக்க வேண்டியது இல்லறத்தானின் தலையாய கடமை" என்று வியாதர் கூறினார். "ஆகா, இது தெரியாமல் அற்புதச் சக்திகளைத் தேடி யோகம் என்று என் பெற்றோரை விட்டுவிட்டு, ஆதரிக்க வேண்டியவரையும் நிராதரவாக்கி வந்துவிட்டேனே!" என்று கௌசிகன் வருந்தினான்.

"ஐயா, இல்லறத்தானே சமுதாயத்தின் உயர்ந்த பிள்ளை எனத் தெரியாமல் இருந்து விட்டேன். இல்வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுங்கள்!" என வேண்டினான்.

"வருணாசிரம தருமத்தில் துறவறம், பிரம்மச்சரியம், வானப்பிரஸ்தம், இல்லறம் ஆகிய நான்கில் எதில் இருந்தாலும் அந்தத் தருமப்படி வாழவேண்டிய முறையுடன் வாழ்ந்தால், ஒருவன் வானிலுள்ள தெய்வங்களில் ஒருவனாகக் கருதப்படுவான்.

ஆனாலும், அறம் என்ற சிறப்பைப் பெறுவது இல்லறமே! பழியில்லாததாகுமானால் அதுவே நன்று. ஏனெனில் பிற ஆசிரமத்தாரையும் அவரவர் கடமையில் ஈடுபட ஆதரிப்பது இல்லறத்தானே. ஆகவே, முறைப்படி இல்வாழ்க்கை நடத்தினால் பிற ஆசிரமத்தார் முயன்று பெறும் உயர்நிலையும் அடையப்படும். எனவே, தவம், யோகம், துறவு என வேறு வழியில்போய் இதில் அடையப்படாத எதைப் பெறுவான்?

பழிக்கு அஞ்சி அறப்படி ஈட்டிய பொருளில் பெற்ற உணவைப் பிறருக்கும் கொடுத்து உண்ணும் இல்லறத்தானின் பரம்பரை என்றும் தொடர்ந்திருக்கும். அன்பும் அறமுமாக நடக்கும் இல்வாழ்க்கையே மனிதப் பண்பை ஒட்டியது. இதுவே வாழ்வின் பயன் மிக்கதுமாகும் என்று கௌசிகனை தரும வியாதர் கடமைமிக்க இல்வாழ்வில் ஏவினார்.

"பிறப்பால் எக்குலம், எத்தொழில் அமைந்தாலும் வெறுக்காமல், நான்கு நிலைகளில் எதில் இருந்தாலும் தன் கடமையைச் செவ்வையாகச் செய்து வாழ்வாங்கு வாழுபவனே தெய்வம் போன்றவனாவான்" என்றுணர்ந்த கௌசிகன் வீடுதிரும்பி உயர்ந்த பிள்ளையாகப் பெற்றோருக்கு விளங்கினான்.

# அம்பலத்தரசே அருமருந்து

அண்டத் திலுள்ள பொருளும்
அணுவில் உள்ள பொருளும்
உண்மையில் ஒன்று ஆகும்
உள்ளது எங்கும் பரந்து
ஒன்றும் இல்லா ததான
ஒருவெற் றுப்பொரு ளதாக
அண்ட வெளியில் கலந்தவன்
அவனே எமக்கரு மருந்து

-கவிஞர் வ. யோகானந்தசிவம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு: கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

சிவனின் வீரச்செயல்களைப் புராணங்கள் பெரிதும் விளக்கிக் கூறுகின்றன. இவற்றுட் தலைசிறந்தது எட்டுச் செயல்கள். இவற்றிற்கு அட்டவீரட்டங்கள் என்ற பெயர் உண்டு. வீரச் செயல் புரிந்த இந்நிலையில் வைத்து இறைவனைத் தியானித்து வழிபட வழிகாட்டியவை சிவாகமங்களே. இச் சிவாகமங்கள் காட்டிய வாறு திருவுருவங்களைக் கோயிலில் நிறுவி, அதனால் அவன் திருக்கோலங்கண்டு எம் கண்கள் பெரும் பேறடையும் வண்ணம் தென்னாட்டுத் தேவாலயங்களே மிகவும் முனைப் பாயிருந்தன. அதில் வெற்றியுங் கண்டன. இவ்வெட்டுச் செயல்களும் இன்னும் சிலவும் இறைவனைப் புதுப்புதுத் தோற்றங்களிற் காணும் வாய்ப்பை எமக்கு உண்டாக்கி யுள்ளன. இவற்றுள் முக்கியமான எட்டுச் செயல்கள்: பிரமன் தலை கொய்தது; அந்தகனை அழித்தது; முப்புரங்களைச் செற்றது; தக்கன் செருக்கை அடக்கியது; சலந்தரனைச் சங்கரித்தது; கஜாசுரன் தோலுரித்தது; காமனைக் காய்ந்தது; யமனை உதைத்தது என்பனவாம். இச்செயல்களெல்லாம் தென்னாட்டில் நிகழ்ந்ததாக ஐதீகம் உண்டு. இங்குதான் இந்நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட நிலையில் இறைவனை உருவாக்கிக் கோயில்களில் நிறுவி வழிபடும் மரபு உண்டு. வடநாட்டில் இவ்வாறு உருவவழிபாடு காணப்படுவதில்லை. இவற்றை விட மேலும் சில புராண நிகழ்ச்சிகளும் உள. அவை கங்கையைச் சடையுள் வைத்தல்; தாருகாவனத்து இருஷிகளின் கர்வமடக்கல்; பிறைச் சந்திரனைச் சடைமுடியிற் சூடல்; வராக, நரசிங்கவதாரங்களையடக்கல்; மாலுக்குச் சக்கரமருளல் முதலியன இவற்றையுஞ் சித்தரித்துக் கோவில் வழிபாட்டில் இடம்பெறுவதற்காகச் சிற்பிகள் திருவுருவங்களாகச் செதுக்கி இருக்கிறார்கள்.

இறைவனின் திருநாமங்கள் பல. அவை இவன் பெருமையைக் கூறுவன. இதுவரை கூறப்பட்ட திருவுருவச் சிறப்புக்களுடனும், அவன் செய்த அரும்பெருஞ் செயல்களுடனும் தொடர்பு கொண்டவை. தென்னிந்தியக் கோயில்களிலும் இலங்கைக் கோயில்களிலும் வழிபடும் வேளைகளில் இப்பெயர்கள் பிரயோகிக்கப்படுவன. இப்பெயர்களுட் சில வேதங்கள் கூறும் பெயர்கள் இவை. உருத்திரன், பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்கிரன், மகாதேவன் என்பன. அரன், சங்கரன், சதாசிவன், சம்பு, தேவன், தேவதேவன், தானு என்பன புராணங்களால் சிவனுக்கே சிறப்பாக உரிமையாக்கிக் கூறும் பெயர்கள். தூர்ஜடி, கபர்தி, ஜடாதரன், வியோமகேசன், முத்தகேசன், கங்காதரன் முதலியன இவன் புனைந்து விளங்கும் தலைக்கோலத்தினையும், அங்கு கங்கையை அணிந்து நிற்பதையும் குறிப்பன. திரிநேத்திரன், திரியம்பகன், லலாடநயனன், சசாங்காதித்ய நேத்திரன், சோம சூர்யாக்னி லோசனன் எனும் பெயர்கள் இவன் கண்களைச் சிறப்பிக்கும் பெயர்கள். இவனது நீலமிடறு நீலகண்டன், நீலக்கிரீவன், ஸ்ரீகண்டன், சிதிகண்டன் என்னும் பெயர்களை இவனுக்கு உரிமையாக்கி விடுகிறது. பத்துப் புஜங்களை உடையவனாதலால் தசபாகு என்றும், பாதி உமைகொள்ளும் வடிவினனாதலால் அர்த்தநாரி என்றும் இவன் பெயர் பெறுவான். இவ்வாறு புராணங்கூறும் பெயர்கள் இவன் உடற்சிறப்பைக் காரணமாகக் கொண்டு சூட்டப்பட்டவை. மேலும் கிருத்திவாசஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகேந்திர சர்மதரன், திகம்பரன் முதலிய பெயர்கள் இவன் உடையைக் குறிப்பன. சந்திர சேகரன், இந்து (சந்திர) மௌலி முதலியன இவன் பிறைசூடியதைச் சுட்டுவன. புஜங்ஹரன் முதலிய பெயர்கள் பாம்பணி மேனியன் என் பதைக் கூறுவன. பிநாகி, சூலி, கண்டபரசு என்பன இவனது படைக்கலங்கள் பற்றியவை. கைலாசவாசி, கிரீசன், ஸ்மசானவாசி முதலிய பெயர்கள் இவனுறைவிடங்களைக் குறிப்பன. அம்பிகாபதி, உமாபதி என்பன இவன் உமை யின் கணவன் என்பதைப் பகருவன. விருஷா ரூடன், விருஷபத்வஜன் என்னும் பெயர்கள் வெள்ளேறு இவன் ஊர்தியாயும் கொடியின் அடையாளமாயும் விளங்குவதைக் கூறுவன. இவன் புரிந்த அட்டவீரட்டங்களைக் குறிக்கும் பெயர்களும் உள. இவை அனைத்தும் திருக் கோயில் வழிபாட்டில் நிரந்தர இடம்பெறுவன வாகையால் மிக முக்கியமானவை. புராணங் களைத் தவிர வேறெந்த நூல்களிலும் நாம் இவற்றை விரிவாகப் பெற்று விளங்குதல் அரிது.

வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டு வேள்விமுறை இருக்குவேதகாலம் முதல் மக்கள் வழிபாட்டில் நிரந்தர இடம் பெற்று விளங்கியது. வேதாங்க நூல்கள் இந்நிலை தளர்ந்துவிடாது, மக்கள் எளிதிற் கடைப்பிடிக்கும்வண்ணம் தொடர்ந்து விளங்க மேலும் உதவின. பூர்வமீமாம்சை விளக்கும் நூல்களும் வேள்விமுறை வளர மேலும் வழி வகுத்தன. உபநிடதக் கருத்துக்கள் செயல் வழியிலும் அறிவு வழியையே பெரும் சிறப் புடையதாகக் குறிப்பாய் உணர்த்திய இடத் தும் பௌத்தம், ஆருகதம், உலகாயதம் முதலிய புறச்சமயங்கள் வேள்விக்கு எதிர்ப் பிரசாரம் செய்த இடத்தும், வைதிகச் சமய உணர்ச்சி மக்கள் மனதில் ஆழப்பதிந்து வேரூன்றிய காரணத்தால் கிரியைகள் மக்கள் வாழ்வில் நிரந்தரமான இடத்தைப் பெற்று விட்டன. இதுபற்றியே இதிகாச புராணங்களில் கிரியைகள் உயர்நிலை வகித்தன. இக் கிரியைகள் வேள்வி, தபம், தீர்த்தம், தோத் திரம், தியானம், பூசை எனப் பல்வேறு தோற் றங்களில் தோன்றிக் காணப்படும் வகையினை ஒவ்வொன்றாகக் காண்போம்.

(தொடரும்...

## ஐயனே உய்ய வழிகாட்டு

கா. கார்த்திகேசு

தன்னிகரில்லாத தற் பராபரமே
தடையற்ற கொடை யாளனே
சந்நிதி எனும் செல்வச் சந்நிதி மேவிய
சடாட்சர சண்முகனே
பின்னலிடு துன்பங்கள் பின் நகர வைக்கும்
பெருங்கருணைப் பேராளனே
மின்னலிடை வள்ளியின் கண் எதிரே
தோன்றும் தென்பழனி ஆண்டவனே
உன்னுடைய அருளன்றி வேறு ஒன்று இருப்பதாய்
உணர்கிலேன் உமை பாலனே
கன்னலே தேனே அமுதே என்றுனைக்
கசிந்துருகி அழைக்க மாட்டேன்
என்னமோ மனிதப் பிறப்பிலே உள்ளேன்
உய்ய வழிகாட்டு ஐயனே
மன்னவா மலை தோறும் ஆடல் செய்வாய்
மலரடியைத் தொழவைத்து ஆள்வாய்
என்னுடைய குறை எல்லாம் அறிய வல்லாய்
எக்குறையும் மன்னித்து இரட்சிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்- படலம்- 63

## சமணரைக் கழுவேற்றிய படலம்

மங்கையற்கரசியாரும்- குலச்சிறையாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவடிகளை வணங்கி, "சுவாமி! அரசனுடைய வெப்புநோயையும், கூனையும், பாசத்தையும் மாற்றி வீபூதியணிவித்து அருளினீா. இனிச் சமணர்களை வென்று இத்தென்னாடு முழுவதும் திருநீற்றின் ஒளிவிளங்கச் செய்ய வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்கள். திருஞானசம்பந்தர், "திருவாலவாயுடையாருடைய திருவுள்ளத்தை அறிவோம்! வாருங்கள்" என அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு திருக்கோயிலை அடைந்து- பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் செய்து- சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "வேதவேள்வி" எனும் திருப்பதிகத்தை அருளிச்செய்து, சமணர்களை வெல்லத் திருவுளஞ் செய்யுமாறு வேண்டி நின்றார். சோமசுந்தரக் கடவுள் ஆகாயத்திலேயே அசரீரியாகத் தோன்றி, "அன்பர்களே! உங்கட்கு இசைவானது எனக்கும் சம்மதமே! அவர்களை வெல்லத்தக்கவர் நீரே. பாண்டியன் அவைக்களத்தில் சமணர்களோடு வாது செய்யின் அவர்கள் தோற்றுக் கழுவிலேறுவார்கள்" என அருளிச் செய்தார். இதனைக் கேட்டபின், நாயனார் தமது திருமடத்துக்கு எழுந்தருள, மங்கையற்கரசியாரும் குலச்சிறையாரும் தத்தம் மாளிகை புகுந்தனர்.

மறுநாட்காலை பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரும் நாயனாரை அழைத்து அரசன் மாளிகையை அடைந்து வணங்கி, சமணர்களை வாதுக்கழைக்க அனுமதி கேட்டனர். அரசனும் "அப்படியே ஆகுக" என என்றனன். நாயனார் இறைவன் திருவருளை நினைந்து மகிழ்ந்திருந்தார்.

அரசனுடைய நோயை மாற்ற முடியாது தோற்றுப்போன சமணர்களை அவர்கள் மனைவியரும் மக்களும், "ஒரு சைவச் சிறுவனிடம் தோற்று சமணர்கள் எல்லோருக்குமே தீராப்பழியை விளைவித்தீர்கள்" என இகழ்ந்து பேசினர். அதனால், தன்மானம் உந்தித்தள்ள சமணர்கள் திருஞானசம்பந்தருடன் வாது செய்யப் புறப்பட்டனர். அரசவையிலே சமணர்களும் திருஞானசம்பந்தரும் சந்தித்துக் கொண்டனர். "காகம் இருக்கப் பனம்பழம் விழுந்ததைப்போல, உமது மருந்தும்- மந்திரமும் அரசன் நோயைத் தீர்த்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சியே இதை மட்டுமே வைத்துக்கொண்டு நீர் வென்றதாகக் கருதக்கூடாது. உம்முடைய மந்திரத்தையும்- எமது மந்திரத்தையும் ஏட்டிலெழுதி, அரசன்முன் அக்கினியிலிடுவோம். யாருடைய ஏடு வெப்பத்தில் வேகவில்லையோ அவரே வென்றவர். அதை இந்தச் சிவனுறைகின்ற திருவாலவாயை விட்டு வெளியே ஓரிடத்தில் செய்வோம்" என்றார்கள் சமணர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணாசிரியர்கள் சொல்லியபடியே அங்கிருந்து புறப்பட்டுப்போய், மதுரைக்குக் கீழ்த் திசையிலே ஒரு கிடங்கு வெட்டி அதில் தீ மூட்டிக் காத்திருந்தனர். திருஞானசம்பந்தரும், தன் திருக்கூட்டம் பின்னேவர அவ்விடம் சென்று சேர்ந்தார். பாண்டியராசனும், பாண்டிமாதேவியாரும், குலச்சிறையாரோடும் அவ்விடம் சென்றான். தன் புதல்வரின் செய்கையினைப் பார்த்து மகிழ சோமசுந்தரக்கடவுளும் மீனாட்சியம்மையாரோடும் ஆகாயத்திலே எழுந்தருளினார். சமணாசிரியர்கள் தங்களுடைய மந்திரங்களைப் பச்சையோலை ஒன்றில் எழுதித் தீயில் இட்டனர். அது உடனே எரிந்து சாம்பரானது. திருஞானசம்பந்தர் தாம் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் எழுதப்பட்ட ஓலைச் சுவடிக் கட்டினில் கயிறு சார்த்திப் பார்க்க "போகமார்த்த பூண்முலையால்" என்ற திருப்பதிகம் வந்தது. அதனைத் தனது திருக்கரத்தில் தனியாக எடுத்து அக்கினியிலிட்டார். அவ்வேடு சுடுநெருப்பில் வெந்து போகாமல் பச்சையாய்த் தோன்றிற்று. அதுகண்டு, அரசன்- அரசி- மந்திரி உட்பட அங்கு நின்றிருந்த அனைவருமே கண்டு ஆனந்தித்து இன்பவெள்ளத்தில் மூழ்கினர்.

நாயனார் அவ்வேட்டை எடுத்து திருமுறைக் கட்டினில் சேர்த்துக் கொண்டார். சமணர்கள் மீண்டும் வெட்கமின்றி, "நாங்கள் இட்ட ஏடு எரிந்து போக, நீரிட்ட ஏடு பச்சையாய்த் தோன்றிற்று. இது நீர் அக்கினியை வசியப்படுத்திக் கட்டிக்கொண்டதனாலே நிகழ்ந்தது. உங்களுடைய ஏட்டையும், எங்களுடைய ஏட்டையும் வைகையாற்றில் இடுவோம். யாருடைய ஏடு எதிரேறுமோ அவரே வென்றவர் ஆவார். வென்றவர் தோற்றவருக்கு அடிமையாக வேண்டும்" என்றார்கள். "சிவனையும் சிவனடியார்களையும் நிந்தை செய்து நீங்கள் தோற்று நாம் வெல்வோமாயின் உங்களைக் கழுவிலேற்றுவோம்" என்றார் திருஞானசம்பந்தர். ஊழ்வினை அதுவாக இருந்ததினால் சமணர்களும் அதற்கு உடன்பட்டார்கள். குலச்சிறையாரும், தச்சரை அழைத்து கழுமரங்களைத் தயார் செய்தார். திருஞானசம்பந்தர், சமணர்கள்மீது கொண்ட இரக்கத்தினாலே, "வாரீர்! வாது செய்வதை விடுத்து, விபூதி உருத்திராட்சம் தரித்து பஞ்சாட்சரத்தை ஜெபித்து உய்யும் வழி தேடுங்கள்" என்றார். சமணர்கள் இதுகேட்டு கொதித்தெழுந்தனர். "அக்கினியில் வென்றீர் நீரில் எப்படி ஆகுமோ என அஞ்சியே சமாதானம் பேசுகிறீர்" என சமணர்கள் மறுத்துரைத்து வேகமாகப் பாய்கின்ற வைகை நதியிலே, தம் மந்திரம் எழுதிய ஏட்டினை உச்சரித்து இட்டனர். திருஞானசம்பந்தர், "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பதிகத்தை ஏட்டிலெழுதி- சிவபெருமானை மனதில் நிறுத்தி- அவ்வேட்டினை ஆற்றிலே இட்டார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இட்ட ஏடானது சோமசுந்தரக் கடவுளின் திருவருளினாலே எதிரேறிச் சென்றது. இதைப் பார்த்த தேவர்கள் பூமாரி பொழிந்தனர். நாயனார் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். சமணர்கள் தலைகுனிந்து நாணிக்கோணி நின்றார்கள். பாண்டியராசனும் தேவியாரும் மந்திரிமாரும் திருஞானசம்பந்தரை வணங்கி வியந்து நின்றனர். சமணர்கள் நாயனார் எதிரே வந்து "யாங்கள் உமக்குத் தோற்றோம்! நீரே வென்றீர்!" என்றனர்.

இந்த வேளையிலும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், தோற்ற சமணர்களை நோக்கி, "எம்முடைய சிவபெருமான் உயிர்களுக்கெல்லாம் தாய் போன்றவர். நீங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு ஆட்பட்டு உய்யுங்கள்" என அறிவுரை கூறினார். ஆனால் இதனை ஏற்காத சமணர்கள் தாமாகவே கழுவிலேறினார்கள். சிலர் நெற்றி நிறையத் திருநீறு அணிந்து உயிர் பிழைத்தார்கள்.

பாண்டியன் திருஞானசம்பந்தரை வணங்கி, "தேவரீரிட்ட ஏடு எதிர் சென்றதே! எங்கே போயிற்று" என்று கேட்டான். "அதனை வருவிப்போம்" என்று சொல்லி நதிக்கரை வழியே சிலகாத தூரம் நடந்து சென்ற நாயனர், அருகிருந்த காட்டில் ஒரு சிவலிங்கமூர்த்தி எழுந்தருளி இருப்பதுகண்டு வணங்கி நின்றார். "அடியேனிட்ட ஏடு இவ்வழியே வந்து தங்கள் வசமே சேர்ந்துகொண்டது. தாங்கள் அதனைத் தந்தருள வேண்டும்" என விண்ணப்பித்து நின்றார். லிங்கத்தினின்றும் ஒரு பிராமணர் வடிவில் தோன்றிய இறைவன் திருஞானசம்பந்தர் நெற்றியில் திருநீறு இட்டு அவரை வாழ்த்தி, "மைந்தனே! இன்னும் பலநாள் நம் தலங்கள்தோறும் சென்று பாடிப்பரவி, பரசமயத்தவரை வென்று, திருநீற்றின் மகிமையினை எல்லா இடங்களிலும் மிளிரச் செய்வாய்" எனத் திருவாய் மலர்ந்தருளி ஏட்டினைக் கையில் கொடுத்தார். நாயனார் பின்னே தொடர்ந்துவந்த பாண்டியனும், சிவலிங்கத்தினை வணங்கி, அச்சிவபெருமானுக்குக் கோயிற்கோபுரம், மண்டபம் ஆகியன அமைத்துக் கொடுத்து, சமணரோடு தான் சிலகாலம் சேர்ந்திருந்த பாவத்தைப் போக்கிக்கொண்டான். அது முதல் அத்தலம் "திருவேடகம்" (திரு+ஏடு+அகம்) என வழங்கப்படுகிறது.

திருவேடகத்தில் ஒரு வருடம் தங்கியிருந்த திருஞானசம்பந்தர், பாண்டியனிடமும் மற்ற அனைவரிடமும் விடைபெற்று, பாண்டிய நாட்டை விட்டு சோழநாடு நோக்கிப் புறப்பட்டார். பாண்டிய மன்னனும் பரிவாரங்களும் திருவேடகப் பெருமானையும் திருஞான சம்பந்தரையும் வணங்கி மதுரைத் திருநகர் நோக்கிப் புறப்பட்டனர். பூமி எங்கும் விபூதியின் ஒளி பரவி விளங்கிற்று.

---

## வேற் சுடரே!

**தன்னிலும் நிகரான தெய்வ**
**மில்லா தமிழ் கடவுளே!**
**விண்ணிலும் மண்ணிலும்**
**எங்குமாய் உறைபவனே!**
**என்னிலும் வந்துதித்து**
**தமிழ் செய்யுமாறு அருளும்**
**சந்நிதி வேற் சுடரே!**
**உன்பாதம் போற்றி! போற்றி!!**

**-இராம ஜெயபாலன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடமல்ல... இது திருமாடம்

திரு அன்னைதாசன் அவர்கள்

அன்னதான மடங்களொடு ஆச்சிரமங்களும்
அறப்பணி செய்ய நிற்கும் அரிய நிறுவனங்களும்
அவனியெங்கும் ஆங்காங்கே நிறைந்துள்ளன அறிவோம்
சந்நிதியானது நாமந்தாங்கி நின்று சேவை செய்யும் இவ்
ஆச்சிரமத்தைப் போன்று அவனியிலுளதாமோ?
என்று சொல்ல வைத்த இனிய ஆவணமாம்
பாகம் இரண்டினைப் பார்த்த உணர்வுந்த
வார்த்தைகளை வரிகளாக்கி வடிக்கின்றேன் கவிதையினை.

பெருந்திருவிழா தொடங்கமுன்னர் விளம்பரங்கள்
அன்னதானஞ் செய்யப் போகிறோம் அள்ளிவழங்குவீர்என
அடியார்களிடமேந்தும் அமைப்புக்கள் பலவுண்டு
வேண்டி நிற்பதில்லை வீடு சென்றும் கேட்பதில்லை
அறப்பணிகள் பலவுடன் அன்னதானப்பணியும்
தினந்தோறும் இங்கே தேசுடன் நடாத்துகின்ற
சூக்குமந்தான் என்ன என்று கேட்டேன் முருகனிடம்
ஆற்றங்கரையானின் கருவறையில் மட்டுமல்ல
ஆச்சிரமத்தின் இந்த அன்ன அறையிலும் நான்என
அடியார்கள் உணர்ந்து கிள்ளி அவர்கள் தர
அள்ளி அவருக்கு ஈய்ந்து ஆன்ந்தமாக்கி வைக்க
அதற்கு உறுதுணையாய் என் ஆனந்த ஆச்சிரமக்
குருவின் சீடனிந்த மோகனதாஸன் என்னை
அருமையாக இங்கு ஆவாகனம் பண்ணி
அர்ச்சித்து ஏத்தி அன்னத்தை மருந்தாக்கி
அடியவர்க்கு அளித்து அறப்பணிகள் பல செய்து
மடிக்குள் சுருட்டாது மக்களுக்கு ஈய்வதை
தெளிவாக்கும் திட்டமடா தெரிந்துகொள் பாகம் இரண்டாலென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷங்கள்.....

ஆற்றங்கரையானின் அருளை உணர்த்தவல்ல
அழியா அருளின் சான்றைத் தெளிவாய்க் காட்டிநிற்கும்
குருவாம் எங்கள் முருகேசுச் சுவாமிகளின்
அருமை நாமந்தாங்கும் அரிய இம்மடத்தோடு
அறப்பணியினூடு நல்ல ஆன்மீகப் பணியில்நின்று
தனக்கென ஓர் தனிப் பாணியமைத்து
மனங்களில் அழியாப் பல மண்டபங்களையமைத்து
மறைந்த எம் மகேஸ்வரனின் நாமந்தாங்கி நிற்கும்
வைத்தியசாலையும் எம் வரலாற்றுப் பொக்கிஷமே
அத்தனைக்கும் மேலாய் அவனியெங்கும் பரந்து
முருகனின் எழிலைத் தன் முகப்பினிற் தாங்கிவரும்
"ஞானச்சுடரோடு" சேவைகள் பணிகள் என்ற
பாகம் இரண்டும் பார்போற்றும் பொக்கிஷங்கள்.

புராண இதிகாசங்கள் புத்தகங்களானதாற்தான்
படித்துச் சுவைக்க நல்ல பொக்கிஷங்கள் ஆச்சுததையா
சத்துணவும் சற்குருவும் சொத்துக்கள் ஈயும் சொர்க்கம் இச்
சந்நிதியான் ஆச்சிரமம் எனச் செப்பும் இப் பொக்கிஷங்கள்.

பிரபலங்களை மட்டும் பீற்றிப் புகழ்ந்திடாது
அனைவரையும் அரவணைத்து அருங்கலைகள் வளர்த்து
அன்னத்தை மருந்தாக்கி அறப்பணிகள் செய்யவைக்கும்
வண்ண முருகனிவன் வாழ்கின்ற மடமல்ல இது திருமாடம்.

**பங்குனி மற்றும் சித்திரைமாத குருபூசைத் தினங்கள்**

02.04.2012 பங்குனி 20 திங்கள்
யோகர்சுவாமி குருபூசை

08.04.2012 பங்குனி 26 ஞாயிறு
காரைக்காலம்மையார் குருபூசை

17.04.2012 சித்திரை 05 செவ்வாய்
திருநாவுக்கரசர் குருபூசை

22.04.2012 சித்திரை 10 ஞாயிறு
சிறுத்தொண்டர் குருபூசை

24.04.2012 சித்திரை 12 செவ்வாய்
மங்கையர்க்கரசியார் குருபூசை

**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட தினங்கள்**


05.05.2012 சித்திரை 23 சனி
சித்திரா பூரணை விரததினம்

20.05.2012 வைகாசி 07 ஞாயிறு
கார்த்திகை விரததினம்
பகல் விசேட உற்சவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோடைக் கந்தன்



**திரு அற்புதன்** அவர்கள்

யாழ் குடாநாட்டில் பிரசித்திபெற்று விளங்குகின்ற ஆலயங்களில் ஒன்றாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் விளங்கிக் கொண்டிருப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இங்கே இருந்து அருள்பாலிக்கும் வேலவனை சந்நிதியான், ஆற்றங்கரையான், கல்லோடைக் கந்தன் அன்னதானக் கந்தன் என்று அடியார்கள் பக்திப் பரவசத்துடன் கூடிக்கொண்டாடுவதை நாம் கண்கூடாகக் காணலாம். இவ் ஆலயத்தின் தோற்றம் அமைப்பு நடைமுறை என்பன வேறு எந்த ஆலயங்களிலும் காணப்படாத தனித்துவம் மிக்கது. இதன் புதுமைக்கும் பொலிவிற்கும், இங்கே வீற்றிருந்து அருள்பாலிக்கும் வேலவனது திருவருட் தன்மைக்கும் அளவே கூறமுடியாது. இதனை நன்குணர்ந்த முருகன் அடியார்கள் சந்நிதி ஆலயத்தில் ஒன்றுகூடி அவன் அருளை வேண்டிப் பிரார்த்தனை செய்வதன்மூலம் அவர்களைப் பீடித்திருந்த பலவகைப்பட்ட பிணிகளிலிருந்து மீண்டிருப்பதை பாதிக்கப்பட்டவர்கள் உணர்வுபூர்வமாக கூறியதை நாம் கேட்டுள்ளோம்.

இவ்வகை அருளாட்சித்திறன் படைத்த சந்நிதிவேற் பெருமானது மீளா அடியார்கள் பலர் தம் மனக்கவலைகளை மாற்றுதற் பொருட்டு காவடி எடுப்பதும், அன்னதானம் வழங்குவதும், அபிஷேகம் செய்வதும், கற்பூரச்சட்டி எடுப்பதுவும் ஆக பலவிதமான முறையில் தமது நேர்த்திக்கடன்களைச் செய்து தமது நேர்த்திக்கடன்கடமைகளைச் செய்வார்கள். அப்படிச் செய்பவர்கள் தங்களால் அக்காரியங்களை நடைமுறைப்படுத்தமுடியாத பொழுது தமது சந்ததியினை அப்பணிகளில் ஈடுபடவைத்து முருகனது காரியங்களை நிறைவேற்றுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி ஆலயத்தில் இத்தகைய செயற்பாடுகள் ஒருபுறம் இடம்பெற்றாலும் இன்னொரு புறத்தில் முருகன் சந்நிதியில் இடம்பெறும் திருமண நிகழ்வுகள் மற்றெந்த ஆலயங்களிலிலும் இடம்பெறாத அளவுக்கு கூடுதலாகவே நடைபெறுவது வழக்கம். சில காலங்களில் பத்துக்கு மேற்பட்ட திருமணங்கள் ஒரு நேரத்தில் நடைபெறுவதைக் காணலாம். இவ்வகையான சந்தர்ப்பங்களில்கூட சந்நிதியானது ஆலயத்தில் தத்தமது திருமணச்சடங்கை செய்யவேண்டும் என்ற ஆதங்கத்தில் ஒவ்வொரு குடும்பத்தைச் சார்ந்தோரும் பெருமிதத்தோடும், பயபத்தியுடன் ஈடுபடுவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

அவ்வகைச் செயற்பாடுகளின்போது திருமணத்திற்கு வருகைபுரியும் உறவினர்களின் விருந்துபசாரத்தை ஆலயச் சூழலில் உள்ள மண்டபங்களில் ஏற்பாடுகள் செய்வார்கள். ஆலயச்சூழலில் இவ்விருந்துபசாரங்கள் செய்வதன்மூலமும், ஆலயத்தில் திருமண நிகழ்வை நடத்துவதன்மூலமும் திருமணச்சடங்குகளுக்குரிய செலவினைக் குறைந்த அளவில் கட்டுப்படுத்தும் முகமாக இச்செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவர் பலர். இவ்வகை விருந்துபசாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கூடியவரையில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளை அணுகுவார்கள். சுவாமி அவர்களும் அவர்களுக்குரிய வசதிகளைச் செய்துகொடுத்து அக்கடமைகளை நிறைவேற்றுவார்கள். சில காலங்களில் ஐந்துக்கு மேற்பட்ட திருமண நிகழ்வுக்குரிய உணவு வகைகளைத் தயாரித்து அதனைப் பக்குவமாகப் பங்கிட்டு வந்தவர்களை உபசரித்து அனுப்புவார். ஆச்சிரமத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளுக்கு சுவாமி அவர்கள் பெரிய அளவில் பணம் வாங்குவதில்லை. இதனடிப்படையிலும், ருசியான உணவு வகை என்பதனாலும் சந்நிதியான் ஆச்சிரமத்தை நாடி வந்து தமது திரும்ண விருந்துபசாரங்களை மேற்கொள்வார்கள்.

சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் இவ்வகையான நிகழ்வுகள் சந்நிதிவேலவனது அருளாட்சியுடன் நடைபெறுவதோடு வேலவனுக்கு உகந்த காரியமாக உள்ளதால் பயபக்தியோடு முருகப்பெருமானுக்கு செய்யும் பணிவிடையாகவே இவ்வகையான நிகழ்வுகளை தமது சிரமம் பாராது நிறைவேற்றி திருமண நிகழ்வுக்கு வருகின்றவர்கள் மனங் கோணா வகையில் செம்மையாக உபசரித்து அனுப்புவார் சுவாமிகள். இதன் அடிப்படையில் திருமண விருந்துபசாரம் இடம்பெறும் காலங்களில் பலவகை இயல்புகள் கொண்ட அன்பர்கள் ஆச்சிரம வளாகத்தில் கூடுவர். இப்படியான நேரங்களில் வருகைபுரியும் அன்பர்களின் செயற்பாடுகள் சில வேளைகளில் ஆச்சிரம நடைமுறைக்கு ஒவ்வாததாகவே இருக்கும். இவ்வகையான நிகழ்வுகள் இடம்பெறும் காலங்களில் நானும் ஒருவனாக ஆச்சிரமத்தின் செயற்பாட்டில் ஈடுபடுவது வழக்கம். சிலநேரங்களில் இவர்களைக் கட்டுப்படுத்துவது பெரும் பாடாகவே இருக்கும். சுவாமியவர்களும் பொறுமையைக் கைவிட்டு இவர்களைக் கடிந்துகொள்வதும் அதன்பின் அவர்களுக்குரிய உணவுவகைகளை தொண்டர்கள்மூலம் பரிமாறி அவர்களைத் திருப்திப்படுத்தி அனுப்புவதும் உண்டு.

இங்கே இடம்பெறும் திருமண விருந்துபசாரம் சம்பந்தமாக கல்லோடைக் கந்தன் ஆச்சிரம சுவாமி அவர்களோடு நடத்திய அற்புதத்தை அடுத்தமாத ஞானச்சுடரில் பார்ப்போம்.

(தொடரும்...

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவையாறு

-வல்வையூர் அப்பாண்ணா-

சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முக்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப்பிறை அணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே!

என்றார் அப்பர் பெருமான். அந்த ஐயாறப்பரின் திருவாசல் தேடிச் செல்வோம். வாருங்கள்.

* சோழநாட்டின் வடகரைத்தலம்
* நாவுக்கரசராம் அப்பர் பெருமானுக்கு கயிலைக்காட்சி கிட்டிய அற்புதப் பதி.
* காசிக்குச் சமமாகக் கருதப்படும் ஊர்.
* சிவபெருமான் தன்னைத்தானே பூஜித்துக்கொண்ட புண்ணியபூமி.
* மகாவிஷ்ணுவின் அவதாரமாக அம்பிகை அருள் பாலிக்கும் இடம்.
* சிவகணத் தலைவராம் நந்திகேஸ்வரரின் அவதாரத் தலம்.
* சுந்தரருக்கும் சேரமான்பெருமானுக்கும் வெள்ளத்தை நிறுத்தி தரிசனம் தந்த திவ்விய ஷேத்திரம்.
* சைவ நால்வரும் பட்டினத்தாரும் ஐயடிகள் காடவர் கோனும் அருணகிரிநாதரும் வள்ளல் பெருமானும் ஸ்ரீ தியாகராஜரும் பாடிப் பரவசப்பட்ட திருக்கோயில்.
* தியாகப்பிரம்மம் வாழ்ந்து நாதோபாசனை நல்கிய நல்லூர்.
* நாதமும் லயமும் இறையஞ்சலி செலுத்தும் இசைத் தலைநகரம்.
* ஏழூர்ப் பெருவிழா நடைபெறும் எழில் மையம்.

தஞ்சாவூரிலிருந்து சுமார் 12 கி.மீ தொலைவில் காவேரியின் வடகரையில் உள்ளது திருவையாறு. தஞ்சாவூரிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் அடிக்கடி பேருந்துகள் திருவையாறு நோக்கிச் செல்கின்றன. அழகும் அமைதியும் கொண்ட திருவையாறு தலம் நம்மை வரவேற்கிறது.

இறைவன்: பஞ்சநதேஸ்வரர், ஐயாற்றீசர்
இறைவி: அறம் வளர்த்த நாயகி, தர்மசம்வர்த்தினி
தலமரம்: வில்வம்
தீர்த்தம்: சூரிய தீர்த்தம்

## கோபுர வாசல் உள்ளே....

ஏழு நிலைகளுடன் வானளாவ உயர்ந்து நிற்கு ராஜகோபுரமே பிரதான வாசல். பழைய கோபுரமனாலும் பற்பல சுதைச் சிற்பங்கள்- புராணக் காட்சிகள் நிறைந்து காணப்படுகின்றன. கோபுரவாசல் கடந்து உள்ளே வந்தால் உள்ள விசாலமான இடத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலப்பக்கத்திலுள்ள பெரிய மண்டபத்தில் வல்லப விநாயகரும்- தண்டாயுத பாணியும் இங்கு சந்நிதி கொண்டிருக்கிறார்கள். உள்ளே மூன்று நிலைகளுடனான உட்கோபுரம் கம்பீரத் தோற்றத்துடன் காட்சி தருகிறது. கோபுர வாசலுள்ளே நாம் வந்திருப்பது நான்காம் பிரகாரத்தில்.

**சூரிய தீர்த்தம்:**

தனிச் சிறப்புக்கொண்ட இந்த நான்காம் பிரகாரத்தினை நாம் வலம் வருகிறோம். தெற்குச் சுற்றில் நீராழி மண்டபத்துடன் கூடிய செம்மையான படிகள் கொண்ட சூரிய தீர்த்தம் தெளிந்தநீர் கொண்டு காணப்படுகிறது. இந்தத் திருக்குளத்தில் நின்றுதான் "ஜப்பேசன்" தவஞ்செய்தார் என்கிறது ஸ்தல வரலாறு.

**ஜப்பேசன்- நந்தியான கதை:**

குழந்தைச் செல்வம் கிட்டாத சிலாத முனிவர் ஐயாறப்பரை நோக்கித் தவமிருந்தார். அவரது தவத்திற்கு யாகத்துக்கும் இறைவன் இரங்கி ஒரு ஆண் மகவைக் கொடுத்தான், "16 வயதுவரை மட்டுமே இவன் வாழ்வான்" என்கிற நிபந்தனையுடன். அகவை 14 ஆனதும், "இன்னும் இரு வருடங்களில் இவனை எமனிடம் தரவேண்டுமே" எக் கவலை கொண்டனர் பெற்றோர். பெற்றோரின் பரதவிப்பைப் பார்த்த ஜப்பேசன், "விதியை மாற்ற இறையருளால் மட்டுமே முடியும்" என நம்பி, "சூரிய புஷ்பகரணி" குளத்தில் இறங்கி ஒற்றைக் காலில் தவம் செய்யத் தொடங்கினான். நாட்கள் நகர்ந்தன. மீனும் பாம்பும் சிறுவன் உடலைத் தின்றன. எலும்பாகிப் போனான் ஜப்பேசன். சிவப்பரம்பொருள் தோன்றினார். கங்கை- காவிரி- பாலாறு ஆகியவற்றை அங்கு வரச்செய்து தாமே ஜப்பேசனுக்கு அபிஷேகம் செய்வித்தார். உடல் பழைய நிலைக்கு மீண்டது. இந்த அபிஷேகத்தால் ஜப்பேசன் "நந்திகேஸ்வரர்" ஆகி சிவகணங்களுக்குத் தலைவரானார். இந்த வரலாறும், அப்பர் பெருமானின் வரலாற்றின் ஒரு பகுதியும் "சூரியபுஷ்கரணி" குளத்திலேயே இடம்பெற்றதால் சூரிய தீர்த்தம் தனிச்சிறப்பும் புனிதமும் பெறுகிறது. நேர்த்தியான படிக்கட்டுக்களுடன் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது இத் திருக்குளம். (திருநந்தி தேவரின் திருமண வரலாறு கட்டுரையின் இறுதியில் வருகிறது) நான்காம் பிரகாரத்தில் நடந்து வந்தோமே! தெற்குக் கோபுரவாசல் ஊடாக வெளியே எட்டிப் பார்த்தால் "ஆட்கொண்டார் சந்நிதி" தெரிகிறது.

**ஆட்கொண்டார் சந்நிதி:**

தாய் தந்தையரில்லாத சுசரிதன் என்றொரு சிறுவன். தன்னந்தனியாக திருத்தலங்கள் தோறும் பயணித்து இறைவனைத் தரிசித்து இறுதியாக திருப்பழனம் வந்து சேர்ந்தான். இரவு அவன் கனவில் வந்து நின்ற காலன், "இன்றிலிருந்து ஐந்தாம் இரவு உன்னைப் பற்றிக்கொள்வேன்" என்றான். சிவதரிசனமும் வழிபாடும் தவிர வேறு பரிகாரம் எதுவும் இல்லை எனக்கண்ட சுதரிதன் திருவையாறடைந்து தெற்குக் கோபுரவாசலில் அமர்ந்து பூசையும் ஜபமும் செய்தான். அந்த நாளும் விரைந்து வந்தது. யமன் சுசரிதன் உயிரை எடுக்க வந்து நின்றான் தயாராக. உண்மை பக்தனைக் கைவிடுவாரா ஐயாறர்! துவாரபாலகராகி வந்து காலனுடன் போரிட்டுக் காலடியில் மிதித்துச் சிறுவனைக் காப்பாற்றினார். யமனை வதைத்து சிறுவனை ஆட்கொண்டதால் அவ்விடம் "ஆட்கொண்டார் சந்நிதி" ஆனது. இங்கே எமனை வதைக்கும் துவாரபாலகராகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளியுள்ளார். இந்தச் சந்நிதியிலும், இதன் முன்பாக உள்ள சிறு குழியிலும் குங்குலியம் எந்நேரமும் புகைந்தபடியே இருக்கிறது.

**தென் கயிலாசம்:**

தெற்குக் கோபுரவாசல் ஊடாக மீண்டும் உள்ளே வந்தால் பிரகாரத்தின் கோடியில் மூன்று நிலைகள் கொண்ட கோபுரத்துடனான தனிக்கோயில் உள்ளது. இக்கோயிலின் நுழைவு மண்டபத்திற்றான் அப்பர் பெருமானுக்குக் கயிலையைக் காட்டிய இடம் உள்ளது. காடுமலை கடந்து- நடந்து- தவழ்ந்து- உருண்டு கயிலையை நோக்கிச் சென்ற அப்பர், (இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட) அருகிருந்த பொய்கையில் இறங்கி திருவையாறு- சூரிய தீர்த்தத்தில் கரையேறிக் கயிலைக் காட்சியைக் கண்ட இடம் இதுவாகையால் இத்தனிக்கோயில் தனித்துவமாக விளங்குகிறது. (பெரியபுராணம்: 1617- 1649 வரையுள்ள பாடல்களில் அப்பர் பெருமான் கயிலை கண்ட வரலாறு விரிவாக உள்ளது). இங்குதான் "மாதர்பிறைக் கண்ணியானை" பதிகத்தினை அப்பர் பாடினார். இந்த மண்டபத்தில் அப்பர் பெருமான் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். மூலவர் சிவலிங்கத் திருமேனியில் அருள்பாலிக்க, பின்னால் நின்ற கோலத்தில் அம்பாள் அஞ்சலை அம்பிகையும், சுவாமி பஞ்சநதிவாணரும் அருள் பாலிக்கின்றனர். இந்த அப்பனையும் அம்பிகையுமே,

"பேடை மயிலோடும் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்"

என்று அப்பர் பெருமான் நெகிழ்ந்து பாடினார். இந்தப் பிரகாரத்தின் மேற்கேயுள்ள கோபுரம் இந்நாளில் பெருமளவு சேதப்பட்ட நிலையில் இருந்தாலும் ஒரு காலத்தில் மிகுந்த வேலைப்பாடமைந்த சிற்பங்கள் கொண்டதாக இருந்திருக்க வேண்டும் என்பது பார்க்கும்போதே தெரிகிறது.

**வட கைலாசம்:**

வடக்குச் சுற்றிலும் ஒரு சிறு கோயில். இது வட கைலாசம். இங்கே நடராஜர், அம்பிகை, விநாயகர், முருகன், சண்டிகேசர் உள்ளனர். வலத்தைத் தொடர்ந்து பச்சையப்பன் மண்டபத்தை அடைகிறோம். 18ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த, "பச்சையப்ப முதலியார்" தான் இங்கே நிறையத் திருப்பணிகள் செய்துள்ளார். சென்னையில் பல்லாயிரம் மாணவர்கள் கல்வி பயிலும் "பச்சையப்பன் கல்லூரியை"த் தோற்றுவித்தவரும் அதே முதலியார்தான்.

**சப்த ஒலி பிரகாரம்:**

இப்போது நாம் 3ஆம் பிரகாரத்தினுள் நுழைகிறோம். சந்நிதிகள் எதுவுமில்லாத இந்தப் பிரகாரத்தை வலம் வந்தால் தெற்குப் பக்கமாக உள்ள பூட்டப்பட்டுள்ள ராஜகோபுரம் கண்ணெதிரே படுகிறது. திருவையாறு திருத்தல நாயகரான ஐயாறப்பர் வீதி உலா வரும்வேளையெல்லாம் இந்த வாசலைத் திறந்து வீதி உலா நடைபெறும். ஏனைய வேளைகளிலெல்லாம் வாசல் பூட்டப்பட்டே இருக்கும் எனவிபரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பிரகாரத்தின் மேற்குச் சுற்றுக்கு "சப்த ஒலிப் பிரகாரம்" என்று பெயர். அதாவது "ஏழு ஒலிப்பிரகாரம்" என்பது கருத்து. "ஐயாறு அகலாத செம்பொன் சோதி- ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்று ஐயாறு நாயகனைப் பாடிப் போற்றுகிறார் அப்பர் பெருமான். தென்மேற்கு மூலையில் கோயிலின் உள் மதிலில் ஒரு சிறு குழி (பள்ளம்) தெரிகிறது. இதனருகில் வாயை வைத்து "ஐயாறா" எனப் பலமாக அழைத்தால் அதன் எதிரொலி ஏழுமுறை கேட்கும் என்று சொன்னார்கள். யானும் முயற்சித்தேன். ஐந்துமுறைக்குமேல் எதிரொலி கேட்டதாகத் தெரியவில்லை. குழியினுள் வாயை வைத்து ஒலியெழுப்பினால் மட்டுமே எதிரொலி வருமா? பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் நின்றபடியே பலமாக "ஐயாறா" எனக் கத்தினேன். பலமுறை எதிரொலி எழுந்தது. போய் வந்தவர்கள் என்னைத் திரும்பி ஒருவிதமாகப் பார்த்தார்கள். யான் அது குறித்துக் கவலை கொள்ளவில்லை. ஆனால், எதிரொலியின் காரணம் தெளிவாகப் புரிந்தது. ஒடுங்கிய பிரகாரமும்- பிரகாரத்தின் இருபக்கச் சுவர்களினதும் அளவுக்கதிகமான உயரமும்- சத்தத்தை உறிஞ்சிக்கொள்ள (சந்நிதிகள் போன்ற) எதுவும் அங்கு இல்லாமையுமே எதிரொலி எழும்பக் காரணம் என்பது புரிந்தது. மீண்டும் பலமுறை "ஐயாறா! ஐயாறா!" எனக் கூவி அழைத்துக் கொண்டேன்.

**இறைவன் தன்னைத்தானே பூஜித்த வரலாறு:**

மூன்றாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் யாகசாலை. சுற்றுத்தள்ளி நால்வர் சந்நிதி. பிரகார வலத்தினை நிறைவு செய்து சில படிகள் ஏறினால் வரும் விசாலமான மண்டபம் மகாமண்டபம் ஆகும். மகாமண்டபத்தைச்சுற்றி திருவோலக்க மண்டபம், பிரசங்க மண்டபம், வாகன மண்டபம் எனப் பலவுண்டு. ஒரு சந்நிதியில் ஒரு பேழையில் மரகதலிங்கம்- ஸ்படிகலிங்கம் என இரண்டு சிறிய லிங்கங்கள் காணப்படுகிறது. இந்த லிங்கங்களுக்கு தினமும் காலையில் பூசை உண்டு. இங்குதான் சிவபெருமான் தன்னைத்தானே பூஜித்துக்கொண்ட வரலாறு நடந்ததாக ஐதீகம். அது எப்படி?

அந்நாளில் ஐயாறப்பரை முறைவைத்து இருபத்துநான்கு ஆதிசைவர்கள் பூசை செய்து வந்தனர். இவர்களில் ஒருவர் காசி யாத்திரை புறப்பட்டு நெடுநாளாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் அவரது காணி முதலான சொத்துக்களைப் பலபேரும் அனுபவிக்கத் தொடங்கினர். காசிக்குப் போனவரின் மனைவி பிள்ளைகளோ வகையறியாது ஐயாறப்பரிடம் முறையிட்டனர். பரமசிவனார் காசிக்குப் போன ஆதிசைவரின் வயோதிப வேடத்தில் திருக்கோயில் புகுந்து, அவரது பூசை முறையில் சிவலிங்கத்திற்குப் பூசைகள் புரிந்து ஆலயத்திலேயே தங்கியிருந்தார். சென்றவர் மீண்டு வந்ததால் ஏனைய ஆதி சைவர்கள் மெள்ள மெள்ள அவரது சொத்துக்களை விட்டு விலகினர். இந்த நிலையில் காசிக்குச் சென்றிருந்த (உண்மை) வேதியர் வாடி வதங்கி- தனது பூசைமுறைநாளில்- நிஜமாகவே திருக்கோயில் வந்து சேர்ந்தார். தன்னை ஒத்த ஒருவர் லிங்கபூசை செய்வதுகண்டு வியப்படைந்தார். "ஏற்கனவே அவர் திரும்பிவிட்டாரே! யார் இந்தப் புதியவர்?" என ஊரவர்களும் ஏனைய ஆதி சைவர்களும் குழம்பிப் போயினர். மனைவிக்கோ எதுவும் புரியவில்லை! யார் நிஜம்? யார் நிழல்?

ஊர்மன்றம் கூடி விசாரித்தது. இரண்டாமவரது ஆவணங்களே சரியானது எனக் கண்டுகொண்ட ஊர் மன்றத்தினர், "முன்னால் வந்த ஏமாற்றுக்காரன் யார்?" எனத் தேடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடபாருடராக பரமேஸ்வரி சமேதராக காட்சி கொடுத்தார் பரமனார். இந்த நிகழ்வினை வைத்தே, "ஐயாறு அதனில் சைவனாகினாய்" என்று வர்ணிக்கிறார் மாணிக்கவாசகர். இன்றும்கூட இந்த இரு லிங்கங்களுக்குமே முதற்பூஜை நடைபெற்று வருகிறது.

**திருமாளிகைத் திருச்சுற்று:**

உள்வாயில் தாண்டினால் வாசலின் அருகே மனைவியுடன் காட்சிதரும் நந்திகேஸ்வரர். சற்றுத்தள்ளி சந்தான குரவர்கள் நால்வர். நேராக உள்ளே மூலவர் பஞ்சநாதேஸ்வரர் தரிசனம் தருகிறார். எமக்கு இன்னமும் இரண்டு பிரகாரங்கள் பாக்கியாக உள்ளமையால் இங்கிருந்தே மூலவரை வணங்கிவிட்டு இரண்டாம் பிரகார வலத்தை ஆரம்பிக்கிறோம். இரண்டாம் பிரகார தென்கிழக்கு மூலையில் கிழக்கு நோக்கிய தனிச் சந்நிதியில் சோமஸ்கந்தர் அருள்பாலிக்கிறார். இதனை ஒட்டியபடி உள்ளது "முக்தி மண்டபம்". ஆதிவிநாயகர், பஞ்சபூத லிங்கங்கள், சப்த மாதர்கள், நவக்கிரகங்கள் எனப் பல சந்நிதிகள் இங்குள்ளன. இரண்டாம் பிரகாரத்தைச் சுற்றிவரும்போது நமது இடது கைப்புறமாக, (சுவருடன் ஒட்டியபடி) ஒரு மாட அமைப்பில் ஒரு மாடத்தளம் தொடர்ந்து செல்கிறது. திறந்தபடியான, கீழ்த்தளம்- மேற்தளம் என இரு பகுதிகள் கொண்டதாக- நம்மூர் மாடி வீடுகளைப்போல- மேற்தளம் செல்லப் படிகள் கொண்ட அமைப்பாக உள்ளது இது. மேற்தளம் புராணக்கதைகளும்- வரலாற்று நிகழ்வுகளும் பல நிறங்களில் வண்ண ஓவியங்களாகவும், கீழ்த்தளம் முழுவதும் வனப்புமிக்க சிற்பங்களாகவும் உள்ளன. இத்தகைய வித்தியாசமான அமைப்புக்கொண்ட இரண்டாம் பிரகாரத்தை "திருமாளிகைச் சுற்று" என்கிறார்கள். சித்திவிநாயகர், சந்திரசேகரர், விசுவநாதர், பாலதண்டாயுதபாணி எனத் தரிசித்து வர சற்றே வித்தியாச அமைப்பில் சுப்பிரமணியர் உள்ளார். "வேலன் கோட்டம்" என்கிற இச்சந்நிதியில் கையில் வில்லும் அம்பும் ஏந்தி- வள்ளி தெய்வானை சகிதம் நின்ற கோலத்தில் அருள்புரியும் சுப்பிரமணியரை அருணகிரிநாதர் திருப்புகழில் இவ்வாறு பாடுகிறார்.

"சிகர பூதர நீறு செய்வேலவ
திமிர மோகர வீர திவாகர
திருவையாறுறை தேவக்ருபாகரப் பெருமானே!"

ஆவுடை விநாயகர், காசி விஸ்வநாதரையும் தரிசித்து வடக்காகத் திரும்பினால் துர்க்கை- சரஸ்வதி- லட்சுமி ஒன்றாக அமர்ந்திருக்கும் சந்நிதி தரிசனம். தனியாக அதற்குரிய இடத்தில் சண்டிகேசர். நடராஜர் மண்டபத்தில் நடராஜரும், அடுத்து காலபைரவரும் அருள் பாலிக்கின்றனர்.

**மூலவர்- பஞ்சநதேஸ்வரர்:**

இரண்டாம் பிரகார வலத்தின் முடிவில் நிற்கிறோம். துவார விநாயகரையும்- துவார முருகரையும் தரிசித்துவிட்டு உள்ளே செல்ல மூலவர் பஞ்சநதேஸ்வரர் தரிசனம். சுற்றிவர அகழி கொண்ட கருவறை. கிழக்கு நோக்கிய சிவலிங்கத் திருமேனி. பரவசம் தரும் ப்ருத்வி (மண்- பூமி) லிங்கம். ப்ருத்வி லிங்கம் என்பதால் லிங்க பாணத்துக்கு அபிஷேகம் கிடையாது. ஆவுடையாருக்கு மட்டுமே அபிஷேகம். ஐயாறப்பர்- ஐயாறீஸ்வரர்- செம்பொற்சோதி- கயிலாய

நாதர், பஞ்சநதேஸ்வரர் என்றெல்லாம் திருநாமங்கள் கொண்ட ஈசனுக்குப் பெரும்பாலும் கவசம் சாத்தப்பட்டேயிருக்கிறது. இந்தப் பிரகாரத்துக்கு "தட்சணாமூர்த்திப் பிரகாரம்" என்று பெயர். கோஷ்டத்தில் தனது வழமையான இடத்தில் சிவயோக தட்சணாமூர்த்தி அமர்ந்துள்ளார். ஐயாறப்பரின் உட்பிரகாரத்தை- தெட்சணாமூர்த்திக்கு அப்பால் வலம் வர இயலாது. ஐயாறப்பர் ஜடாபாரத்துடன் இருப்பதாகவும், இந்த ஜடை பிறப்பக்கமாக வளர்ந்துகொண்டேயிருப்பதாகவும் ஐதீகம். அதனால் தெட்சணாமூர்த்தியைத் தாண்டி யாரும் செல்வதில்லை. பிரகாரத்துக்குக் குறுக்காகக் கயிறுகட்டி, "இதற்கப்பால் யாரும் செல்லவேண்டாம்" என்று ஒரு அறிவிப்புப் பலகையும் வைத்துள்ளார்கள்.

**அம்பிகை- அறம் வளர்த்த நாயகி:**

மண்டபத்தைவிட்டு வெளியே வந்து வடக்குமுகமாகத் திரும்பி நடந்தால் அருள்மிகு "அறம் வளர்த்த நாயகி" திருக்கோயில் வருகிறது. தனிக்கோபுரம் கொண்ட கிழக்குப் பார்த்த கோயில். நடுவே நவராத்திரி மண்டபம். ஒரு பக்கம் உற்சவ மண்டபம். விசாலமான நவராத்திரி மண்டபத்தில் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் காணப்படுகிறது. உற்சவர் திரிபுரசுந்தரி அம்பாள், சபேஸ்வரர், சூரியன், விநாயகர், முருகன் சண்டிகேஸ்வரி சந்நிதிகளும் உள்ளன. கருவறையினுள் அன்னை தர்மஸம்வர்த்தனி- அறம் வளர்த்த நாயகி- திரிபுரசுந்தரி- தருதாம்பிகை நின்ற திருக்கோலத்தில் விஷ்ணுருபமாக நான்கு திருக்கரங்களுடன் உள்ளார். மேற்கரத்தில் சங்கு, சக்கரம். வலக்கீழ்க்கரம் அபயகரம். இடது கீழ்க்கரம் தொடையைத் தொட்டு நின்றபடி "அரியல்லால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்பார் அப்பர் பெருமான். அம்பாளே விஷ்ணு ரூபமாதலால் இங்கு விஷ்ணு சந்நிதி தனியாக இல்லை. அம்பாள் சந்நிதி எதிரே உள்ள "ஆஞ்சநேயர் சந்நிதி" ஒரு விஷ்ணு சந்நிதிக்கான அடையாமாகவே படுகிறது.

**ஏழூர்ப் பெருவிழா:**

நீரில் ஒற்றைக் காலில் நின்றபடி தவஞ்செய்த ஜப்பேசனுக்கு இறையனாரே நீர் அபிஷேகம் செய்து, அவரை "நந்திகேஸ்வரர்" ஆக்கி, திருக்கைலையின் முதற் திருவாயிலைக் காத்தருளும் பணியையும் தந்து, "அதிகார நந்தி" ஆக்கினார் அல்லவா! சொந்த மகன் போலவே இத்தனையும் செய்த இறைவனும் இறைவியும் மகனுக்குப் பெண் தேடினர். வியாக்ரபாதரின் புத்திரியான சுயம்பிரகாசையைப் பெண்பார்த்து முடிவு செய்தனர். மகன் திருமணம் குறித்துப் பக்கத்து ஊர்களுக்குச் செய்தி போயிற்று. கூடை கூடையாக மலர்களைக் கொண்டு வந்து கொடுத்த ஊர் திருப்பூந்துருத்தி ஆனது. பழங்கள் கொடுத்த ஊர் திருப்பழனம் ஆனது. நெய்யும் பாலும் கொடுத்த ஊர் திருநெய்த்தானம் ஆனது. சோறு கொடுத்த ஊர் திருச்சோற்றுத்துறை. அணிகலன்கள்- ஆபரணங்கள் தந்த ஊர் திருக்கண்டியூர். வேதியர்கள் வந்து நின்றார்கள் திருவேதிக்குடியிலிருந்து. குடும்பத்தோடு மழபாடிக்கு எழுந்தருளிய ஐயாறப்பர் திருமணத்தை நடாத்தி முடித்தார். பின்னர் சித்திரை மாதத்தில் இந்த ஊர்களுக்கு புது மாப்பிள்ளையும் பெண்ணையும் அழைத்துப்போய் அங்குள்ள ஈசர்களிடம் அறிமுகப்படுத்தி ஆசீர்வாதம் பெற்று அழைத்து வந்தார்கள். திருமணவிழாவின் தொடர்ச்சியாக இன்றும்கூட சித்திரைமாதத்தில் வரும் விழாவே "ஏழூர்ப் பெருவிழா". இதுவே தமிழகத்தின் இந்திரவிழா. சித்திரையில் ஐயாறப்பரின் பிரம்மோற்சவ நிறைவு விழாவில் (பௌர்ணமிக்கு மறுநாட் காலையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழூர்ப்பெருவிழா ஆரம்பமாகிறது. நந்தியும் சுயம்பிரகாசையும் ஒரு முத்துப் பல்லக்கில் முன்னேயும், ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் ஒரு கண்ணாடிப் பல்லக்கில் பின்னேயும் வருவார்கள். காலை ஆறு மணிக்குப் புறப்பட்டு திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என ஆறு ஊர்களுக்கும் வரிசையாகப் போவார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் அந்தந்த ஊர்ப்பெருமானும்- பெருமாட்டியும், ஐயாறப்பரையும்- அம்மையையும் ஊர் எல்லையிலே காத்திருந்து வரவேற்று அழைத்துப்போய் உபசரித்து, பின்னர் தாங்களும் இணைந்த திருநெய்தானத்திலிருந்து எட்டுப் பல்லக்குகளும் சேர்ந்து மறுநாள் மதியவேளைக்கு திருவையாறு வந்து சேரும். சிறிதுநேரம் தங்கி -டு மீண்டும் அவரவர் ஊருக்குப் புறப்பட்டுப் போவார்கள். இடையீடு எதுவுமின்றி விடிய விடிய நடைபெறும் இவ்விழா தமிழகத்தின் "இந்திரவிழா", மதுரையில் "கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம்" எப்படி பல லட்சம் பேரைக் கவரும் விழாவாக உள்ளதோ, அதைவிட மேலாக தமிழகம் முழுவதையும் கவரும் தனி விழாவாக அமைந்துள்ள இந்த விழாவே "ஏழூர்ப் பெருவிழா" ஆகும்.

ஏழூர்ப் பெருவிழாவின் ஏனைய கோயில்களுக்கு நாமும் சென்று தரிசிக்க வேண்டாமா? சற்றே பொறுத்திருங்கள்!

-மீண்டும் சந்திப்போம்-

"எல்லா உலகமும் ஆனாய் நீயே, ஏகம்பம் மேவியிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே, ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே, புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந்தருவாய் நீயே, திருவையாறு அகலாத செம்பொற் சோதீ"

-அப்பர்-

---

# தோற்காத ஆன்மிக சஞ்சிகை

**தோற்காத வாழ்வுக்கு வழிகாட்டும் சுடரே**
**தொண்டை மானாறு இனி நல்லபடி காக்கும்,**
**ஏற்காதபடி இங்கு எது வந்த போதிலும்**
**இனிவருங்காலம் உன் பொற்காலமாகும்,**
**தீர்க்காயுளோடு நீ வெல்வாய் சுடரே- நீ**
**தோன்றி இன்று பருவமடைந்து விட்டாய்**
**பார்க்காதவர் பார்த்தால் பசியாறுவர் சுடரே,**
**பல்லாண்டு வாழ்வாய் பதினாறு பேறுனக்கு.**

**-கே.எஸ். சிவஞானராஜா-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

06.04.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை நிகழ்வு"

வழங்குபவர்கள்:- செல்வி ப. ரோகினி

செல்வி ப. காயத்திரி

செல்வி ப. சுபோசினி

வயலின்: கி. பத்மநாதன் (வயலின் வித்துவான்)

மிருதங்கம்: ப. சியாமகிருஸ்ணன்

---

13.04.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தனே கண்கண்ட தெய்வம்"

வழங்குபவர் :- செல்வன் தங்கராசா தவநேசன் அவர்கள்

---

20.04.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

27.04.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

172ஆவது மலர்

வெளியீட்டுரை :- Dr V. பாலகிருஸ்ணன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளை. அதிபர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/22/NEWS/2012

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org